
92 [RE]GISTER No. M. 2279.

بسم الله الرحمن الرحيم

# الإسلام



மாலை 1

# இஸ்லாம்

முத்து 3

ரப்பிஉல்ஆகிர் 1346 ஹிஜ்ரி

# THE ISLAM

செப்டம்பர் மீ 1927 வூ

சித்திர சகிதமான ஒரு மாதாந்திர சஞ்சிகை.

—

பிரதி ஆங்கில மாதம் கடைசி தேதி பிரசுரமாகும்.

ஆசிரியர்,
மௌ. ஆ. அபுல்ஹுதா

EDITOR:
M. A. ABUL-HUDHA.


முஸ்லிம்களின் முன்னேற்றத்திற்கு, இன்றியமையாதது.

—

சமூக முன்னேற்றத்தில் உழைப்பவர்களுக்கு அத்தியாவசியமானது.

# விஷய அட்டவணை.


| விஷயம். | | பக்கம். |
|---|---|---|
| 1. | ஜமால் மோசிதீன் பில்டிங்ஸ். (படம்) | |
| 2. | பத்திராதிபரின் குறிப்புகள் .... | 162 |
| 3. | இஹ்ஸான் பேகம் .... .... | 167 |
| | மிஸ். ஹலீமா பேகம். | |
| 4. | இஸ்லாம் மார்க்கத்தின் மேன்மை .... | 169 |
| | எல். எம். ஜி. | |
| 5. | முஸ்லிம்களின் தற்கால கடமை .... | 170 |
| | ஜனுப், எ. யூசுப் அலி, பாரிஸ்டர் அட்லா. | |
| 6. | இளைஞர்களும் சமூக நலனும் .... | 172 |
| | மௌலவி முஜீபுர் ரஹ்மான் அவர்கள். | |
| 7. | அமீர் அப்துல் கரீமின் வாழ்க்கை .... | 176 |
| 8. | அவுரங்கஜீபும் முஸ்லிம்களல்லாதாரும் .... | 178 |
| | ஸ்ரீமான் மெஹர்சிங்கு அவர்கள். | |
| 9. | உலகிற்கு இஸ்லாம் மார்க்கம் செய்த நன்மைகள் | 181 |
| | அல்ஹாஜ் ஹெட்லி பிரபு அவர்கள். | |
| 10. | அந்தமான் தீவிற்கு மாப்பிள்ளைக் குடும்பங்கள் | 185 |
| 11. | இஸ்லாம் வாளினுல் பரப்பப்படவில்லை .... | 188 |
| 12. | தமிழரும் மூடவழக்கங்களும் .... | 192 |
| | ஸ்ரீ பு. செல்வராஜன். | |
| 13. | நிஜாம் பீரார் இழந்தவிதம் .... | 198 |
| 14. | அருளுடைமை .... .... | 201 |
| | மௌ. ஆ. அபுல்ஹுதா. | |
| 15. | அரேபியாவின் எதிர்கால நிலைமை .... | 207 |
| 16. | மஜ்லிஸுல் உலமா மகாநாடு (வரவேற்புப் பிரசங்கம்) | 211 |
| | ,, (அக்கிராசனர் பிரசங்கம்) | 217 |
| | ,, (மகாநாட்டில் நிறைவேறிய தீர்மானங்கள்) | 229 |
| 17. | இஸ்லாமிய நாடுகளின் நிகழ்ச்சிகள் .... | 233 |
| 18. | ஆகாயவிமானத்திலிருந்து .... | 236 |
| 19. | விவசாயப்பகுதி .... .... | 237 |
| 20. | கைத்தொழிற்பகுதி .... .... | 239 |
| 21. | பொழுதுபோக்கு .... .... | 240 |



ஹாஜி ஜமால் மொகிதீன் பில்டிங்ஸ்.

3-ம் பக்கம் பார்க்க.

بسم الله الرحمن الرحيم

# الإسلام


| மாலை 1 | இஸ்லாம் | முத்து 3 |
| --- | --- | --- |
| 1346 ஹிஜ்ரி ரபீஉல்ஆகிர்மீ | | 1927வூ செப்டம்பர்மீ |


திருவினுந் திருவாய்ப் பொருளினும் பொருளாய்த்
தெளிவினுந் தெளிவதாய்ச் சிறந்த
மருவினு மருவா யணுவினுக் கணுவாய்
மதித்திடாப் பேரொளியனைத்தும்
பொருவினும் பொருவா வடிவினும் வடிவாய்ப்
பூதலத் துறைந்த பல்லுயிரின்
கருவினுங் கருவாய்ப் பெருந்தலம் புரந்த
கருத்தனைப் பொருத்துதல் கருத்தே.

"சீரா புராணம்"

## பத்திராதிபரின் குறிப்புகள்

**ஈதுல் மீலாத்.**

இவ்வருஷம் ஈதுல் மீலாத் இம்மாதம் (செப்டம்பர்) 9-ந் தேதியன்று உலகெங்கும் வெகுசிறப்பாக நடைபெற்றது. இஸ்லாமிய நாடுகளல்லாத பிரான்ஸ், இங்கிலாந்து, ஜர்மனி முதலிய நாடுகளிலெல்லாம் இத்தினம் கொண்டாடப்பட்டது. முஸ்லிம்கள் நடத்திய கொண்டாட்டத்தில் முஸ்லிம்களல்லாதார் கலந்து கொண்டதுடன் முஸ்லிம்களல்லாதார் பலர் தங்கள் தங்கள் சங்கங்களிலும் சபைகளிலும் கொண்டாடி யிருக்கிறார்கள். நம் நாட்டிலும் இதே விதமாகத்தான் நடைபெற்றது. நம் சென்னை நகரில் இவ்வருஷம் ஒரு விசேஷமானவும் முக்கியமானவும் சம்பவம் நேர்ந்தது. இப்புனித தினத்தன்று சென்னை நகரதினசரிப் பத்திரிகைகளெல்லாம் "ஹிந்து, டெய்லி எக்ஸ்பிரஸ், ஜஸ்டிஸ், திராவிடன், சுதேசமித்திரன், தமிழ் நாடு, சுயராஜ்ஜியா, ஆந்திர பத்திரிகா" முதலியவைகளெல்லாம் விடுமுறை கொடுத்து அப்புனித் தினத்தை கௌரவப்படுத்தின. சில பத்திரிகைகள் நபிகள் பெருமான் (ஸல்) அவர்களின் ஜீவிய சரித்திரத்தையையும், வாழ்க்கையின் முக்கிய சம்பவங்களையும் குறிப்பிட்டு வியாசங்கள் பிரசுரித்தன. இப்பத்திராசிரியர்களெல்லோருக்கும் நாம் நம்முடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுவதுடன் வந்தனத்தையும் செலுத்துகின்றோம்.

*　　*　　*

**மஜ்லிசுல் உலமா மகாநாடு.**

இம்மாதம் 17, 18, தேதிகளில் மஜ்லிசுல் உலமா நான்காவது மகாநாடு திரிச்சிராப்பள்ளியில் வெகு வைபவமாக நடந்தேறியது. மகா நாட்டின் வரவேற்புக் கமிட்டி தலைவர் கான் பகதூர் பி. கலீபுல்லா சாஹிபவர்களின் பிரசங்கமும், மகா நாட்டின் தலைவர் அல்லாமா ஹாஜி சையத் சுலைமான் நத்விசாஹிப் அவர்கள் பிரசங்கம் (ஒரு பகுதி இச் சஞ்சிகையில் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. பாக்கி பின்னால் பிரசுரிக்கப்படும்.) மகா நாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களும் இம்மாத சஞ்சிகையில் பிரசுரிக்கப்பட்டுள்ளன. சகோதர சகோதரிகள் அவைகளை ஊன்றிப் படித்து நன்மையடைவார்களென நம்புகின்றோம்.

சென்னை நகர பிரபல வியாபாரியும் சென்னை "ஹாத்தீம்" என்று புகழப்பட்டவருமான காலஞ்சென்ற ஹாஜி ஜமால் முகையத்தீன் சாஹிபவர்கள் மஜ்லிசுல் உலமா சபைக்கு ரூ. 60,000 செலவில் கட்டிக்கொடுத்த கட்டடத்தின் திறப்புவிழா 16-ந் தேதியன்று வெள்ளிக்கிழமை மாலையில் கனம் கான் பகதூர் முஹம்மத் உஸ்மான் சாஹிப் பி. ஏ. (சென்னை கவர்ன்மெண்டு ஹோம் மெம்பர்) அவர்களால் வெகு சிறப்பாக நடைபெற்றது. திறப்பு விழாவுக்குப் பின் தேத்தண்ணீர் கச்சேரியும் ஒன்று நடந்தது. அக்கட்டடத்தின் படம் (கட்டடம் வேலை பூர்த்தியாகாமல் இருந்த சமயம் எடுத்தபடம். இப்பொழுது கட்டடம் இதில் பார்ப்பதைவிட இன்னும் அதிக சிறப்பாக இருக்கின்றது.) இச்சஞ்சிகையில் பிரசுரஞ்செய்திருக்கின்றோம். கட்டடம் ரூ. 60,000 செலவு செய்யப்பட்டு கட்டப்பட்டபோதிலும் கட்டடவேலைகளில் கியாதிபெற்ற இன்ஜினீர்களும் நிபுணர்களும் இக்கட்டடத்தை ரூ. 1,60,000 மதிப்பிடுகிறார்கள். இத்தகைய சிறந்த கட்டடத்தைக் கொடுத்துதவிய மர்ஹூம் வமக்பூருடைய ஹக்கில் நாமெல்லோரும் துஆசெய்வோமாக.

* * * * *

**டாக்டர் அன்ஸாரி.**

இவ்வருஷம் கிறிஸ்தமஸ் விடுமுறைநாட்களில் சென்னையில் நடைபெறப்போகும் அகில இந்திய நேஷனல் காங்கிரஸ் மகாநாட்டிற்கு டாக்டர் அன்ஸாரி அவர்கள் அக்கிராசனராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றார். டாக்டர் அன்ஸாரி அவர்களை இந்தியாமட்டுமல்ல இஸ்லாமியா உலகமுழுவதும் நன்கறியும். இஸ்லாத்திற்கும் தம்தாய் நாடாகிய இந்தியாவுக்கும் அவர் செய்துள்ள ஊழியங்களை அறியாதார் யாருமில்லை. டாக்டர் அன்ஸாரி அவர்களுக்கு நாம் நல்வரவு கூறி அழைக்கின்றோம். மகாநாட்டின் நடவடிக்கைகளைச் செவ்வனே நடத்திவைக்கும் ஆற்றலையும் எல்லாம் வல்ல நாயன் அவருக்குக் கொடுப்பானாக. டாக்டர் அன்ஸாரி அவர்களுடைய ஜீவியசரித்திரத்தை இன்ஷா அல்லா அடுத்த சஞ்சிகையில் பிரசுரிக்க ஏற்பாடுசெய்திருக்கின்றோம்.

* * *

**முஸ்லிம் வக்பு சட்டம்**

1923-ம் வருஷத்தில் இந்தியா கவர்ன்மெண்டார் அங்கீகாரஞ் செய்திருக்கும் வக்புச்சட்டத்தை அந்தந்த மாகாணங்கள் இஷ்டப்படி அமுலுக்கு கொண்டுவந்து கொள்ளலாமெனக் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. இச்சட்டம் வடஇந்தியாவில் சில மாகாணங்களில் அனுஷ்டானத்திற்குக்கொண்டு வரப்பட்டிருக்கின்றது.

இச்சட்டத்தை சென்னை மாகாணத்திலும் அமுலுக்கு கொண்டுவரும் விஷயத்தை கவர்ன்மெண்டார் ஆலோசனைசெய்து வருகிறார்கள். ஒவ்வொரு ஜில்லாவிலும் இருக்கும் வக்பு சொத்துக்களையும் அவைகள் எவ்வாறு கையாளப்படுகின்றன வென்பதையும் ரிப்போர்ட்டு செய்யும்படியாக ஜில்லா மாஜிஸ்டிரேட்டுகளை மாகாண கவர்ன்மெண்டார் கேட்டிருக்கிறார்கள்.

இது சம்பந்தமாக மஜ்லிஸுல் உலமா சபையும் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கின்றது. முஸ்லிம் அஞ்சுமன்களும் சங்கங்களும் இந்தியா கவர்ன்மெண்டின் 1923-ம் வருஷத்திய வக்புச் சட்டத்தை வாங்கிப் படித்துப்பார்த்து நம்மாகாணத்திற்கு அச்சட்டத்தை அமுலுக்குக் கொண்டுவருவதில் இருக்கும் சாதகாபாதகங்களைத் தீர்மானங்கள் மூல்யமாக பத்திரிகைகளுக்கும் மாகாண கவர்ன் மெண்டாருக்கும் அனுப்பிவைத்தால் நலமாக இருக்கும்.

* * *

**நிஜாமவர்களின் நன்கொடைகள்.**

மேன்மைதங்கிய நிஜாம் மன்னரவர்கள் தம் சமஸ்தான குடிகளின் க்ஷேமத்தில் மட்டுமேயல்லாமல் உலக மானிடர்க ளனைவர்களுடையவும் க்ஷேமத்தில் அக்கரையும் ஊக்கமும் கொண்டவர். நம் நாட்டிலுள்ள வேறு சில சுதேச சமஸ்தான மன்னர்களைப்போல் விபசாரத்திலும், வேடிக்கைகளிலும் கோடிக்கணக்காகச் செலவழிப்பவரல்லர். சென்ற மாதந்தான் விஸ்வபாரதி கலாசாலைக்கு (கவிசிரேஷ்டர் டாக்டர் ரவீந்தரநாத் தாக்கூரால் நடத்தப்பட்டுவரும் கலாசாலை) ஒரு லட்சம் ரூபாய் நன்கொடை கொடுத்திருக்கிறார். இம்மாதம் குஜராத்து வெள்ளக் கஷ்டநிவாரணநிதிக்கு ரூ, 50,000 கொடுத்திருக்கிறார். எல்லாவற்றிலும் முக்கியமானது ஹிஜாஸில் நஜதியர்களால் இடிக்கப்பட்டுப்போன மிஸார்களை திரும்பவும் கட்டுவதற்கு இப்பொழுது 9 லட்சம் ரூபாய் சாங்ஷன் செய்திருப்பதுதான். இவர் நீடூழிவாழவும் இவர் சமஸ்தானம் செழித்தோங்கி உலகம் முழுவதும் கியாதிபெருகும்படியாகவும் அல்லாஹுத் தஆலா அருள்புரிவானாக.

* * *

**அகில இந்திய முஸ்லிம் கல்வி மகாநாடு.**

இவ்வருஷம் கிறிஸ்தமஸ் விடுமுறைநாட்களில் சென்னைநகரம் மிக்க ஆரவாரம் கொண்டதாக இருக்கும். அகில இந்திய காங்கிரஸ் மகாநாடு கூடுவதுடன் வேறு பல மகாநாடுகளும் நடைபெறுகின்றன.

இவ்வருஷம் கிறிஸ்தமஸ் காலத்தில் சென்னையில் நடைபெறவிருக்கும் அகில இந்திய முஸ்லிம் கல்வி மகாநாட்டிற்கு பஞ்சாப்

கவர்னர் நிர்வாகசபை மெம்பரும், ஆக்டிங் ரெவினியூ மெம்பரும், பாரிஸ்டருமான கனம் ஸர் ஷேக் அப்துல் காதர் அவர்கள் அக்கிராசனர் பதவிக்குத் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளார்.

இம்மகாநாட்டுடன்கூட வேறு பல மகாநாடுகளும் நடைபெறும். ஆசார சீர்திருத்த மகாநாட்டிற்கு அலகாபாத் ஹைகோர்ட் ஜட்ஜ் கனம் மிஸ்டர் டாக்டர் ஸையத்ஷா சுலைமான், பெண்கல்வி மகாநாட்டிற்கு, முராதாபாத் வாசியும் இந்தியா சட்டசபை டிப்டி பிரசிடெண்டுமான மௌல்வி முகம்மது யாகூப் சாகிபு, உருது மகாநாட்டிற்கு லாகூர் பாரிஸ்டர் டாக்டர் ஸர் முகம்மது இக்பால் தெரிந்தெடுக்கப்பட்டிருக்கின்றார்கள் இவர்களெல்லோருக்கும் நம்முடைய மனமகிழ்ந்த வரவேற்பை தெரிவித்துக்கொள்ளுகின்றோம். முஸ்லிம்களெல்லோரும் இம்மகாநாடுகளில் ஊக்கமெடுத்துக்கொண்டு வரவேற்புக் கமிட்டி மெம்பர்களாகவும், டெலிகேட்டுகளாகவும் சேர்ந்து அறிஞர்களுடைய பிரசங்கங்களால் நன்மை அடையுமாறும் வேண்டிக்கொள்ளுகின்றோம்.

* * * * *

**அல்ஹாஜ் ஹெட்லி பிரபு.**

அல்ஹாஜ் ஹெட்லி பிரபு அவர்களின் பெயரை முஸ்லிம் உலகம் நன்கறியும். அடுத்த கிறிஸ்தமஸ் விடுமுறை நாட்களில் நடைபெறவிருக்கும் அகில இந்திய தப்லீக் மகாநாட்டிற்கு அக்கிராசனம் வகிக்க அல்ஹாஜ் ஹெட்லி பிரபு அவர்கள் இசைந்துள்ளாரென்ற சந்தோஷச் செய்தியை நம் சகோதரர்களெல்லோருக்கும் தெரிவித்துக் கொள்ளுகின்றோம். இவருடைய பரந்த ஞானமும், விசால நோக்கமும், இஸ்லாம் மார்க்கத்தைப்பற்றி செய்துள்ள ஆராய்ச்சியும் நம் நாட்டினருக்கு மிக்க பயனை விளைவிக்கலாமென்றே நம்புகின்றோம்.

அல்ஹாஜ் ஹெட்லி பிரபு அவர்களுக்கு மனமார்ந்த நல்வரவு கூறி நம் நாட்டிற்கு அழைப்பதில் நம்முடன் சகோதரர்களெல்லோரும் சேருகிறார்களென்பதை மிக்க சந்தோஷத்துடன் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

* * * *

**மௌல்வி நூருல் ஹக்**

ரங்கீலா ரசூல் வழக்கில் ஜஸ்டிஸ் டேலிப் சிங்கு செய்த தீர்ப்பை கண்டித்தெழுதியதற்காக சிறைக்கனுப்பப்பட்ட "முஸ்லிம் அவுட்லுக்" "பத்திரிகையின் சொந்தக்காரர் மௌல்வி நூருல் ஹக் மூன்றுமாத சிறைத் தண்டனையை அனுபவித்துவிட்டு 20-ந்தேதி காலை 8-30 மணிக்கு விடுதலை பெற்றார். சிறைச்சாலைக்கு வெளியில் மௌல்வி சாஹிபின் பந்துமித்திரர்களும்

பொது ஜனங்களும் ஆயிரக்கணக்காக நின்றுகொண்டிருந்து வரவேற்றூர்கள்.

நாமும் நம் மனமார்ந்த நல்வரவை தெரிவித்துக் கொள்ளுகின்ரூம். இஸ்லாத்தின் பெருமையைக்காப்பதற்கென்று சிறைசென்ற இப்பெரியார் முஸ்லிம் உலகிற்கும், இஸ்லாம் மார்க்கத்திற்கும் இன்னும் ஊழியங்களைச்செய்ய சக்திவாய்க்குமாறு எல்லாம் வல்ல நாயன் நீண்ட ஆயுளும் தேக திடகாத்திரமும் கொடுத்தருள வேண்டுகின்ரூம்.

* * * *

ஒற்றுமை மகாநாடு

வட இந்தியாவில் ஹிந்துமுஸ்லிம்களுக்குள் தற்சமயம் மனவருத்தமும், சச்சரவுகளும், கலகங்களும் நிறைந்திருப்பதுபோல் வேறெந்த சமயமும் இருந்தது கிடையாது. இப்பிரசினையைப்பற்றி ஆலோசனை செய்து ஒற்றுமையை உண்டாக்கி வைப்பதற்கான ஆலோசனைகளைக் கூற ஒற்றுமை மகாநாடொன்று இம்மாதம் ஸிம்லாவில் கூடிற்று. பல நாட்கள் ஆலோசனை செய்து பசுகுர்பானி விஷயமாகவும், மஸ்ஜித் முன் மேளம் வாசிப்பதன் சம்பந்தமாகவும் ஒருவித சமரசம் ஏற்படாமற் போகவே மகாநாடு எவ்வித பலனுமின்றிக் கலைந்தது என்பதை மிக்க வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்ளுகின்ரூம். விவரம் இன்ஷா அல்லாஹ் அடுத்த சஞ்சிகையில்.

* * * *

நன்கோடையாளர் ஜாபிதா

நன்கொடை கொடுத்து உதவி புரிந்துவரும் நன்கொடையாளர்கள் ஜாபிதாவை இச் சஞ்சிகையில் பிரசுரிக்க வெண்ணிபிருந்தோம். சில சகோதரர்கள் தங்கள் பெயரைப் பிரசுரிக்க வேண்டாமென்று கேட்டுக்கொண்டிருக்கிரூர்கள்.

ஜாபிதா முழுவதையும் பிரசுரிக்க வேண்டுமென்பதே நம்முடைய நோக்கம். வேண்டாமென்று கூறியவர்களுடன் கடிதப்போக்குவரத்து நடந்து வருகின்றது. பதில் கிடைத்தவுடன் முழுஜாபிதாவையும் பிரசுரிக்க வெண்ணியிருக்கிரூம்.

* * *

ஒரு கோடி பவுன் நன்கோடை

சமீபகாலம் வரைக்கும் போபால் சமஸ்தானத்தை ஆட்சி புரிந்து வந்து தம்முடைய விருத்தாப்பியத்தை முன்னிட்டு தம் குமாரர் பால் ஆட்சியை ஒப்புவித்துள்ள போபால் பேகமவர்கள் ஒரு கோடி பவுன் (சுமார் $13\frac{1}{2}$ கோடி ரூபாய்) மதிப்புள்ள தம்முடைய சொந்த சொத்துக்களை இஸ்லாத்தின் பிரசாரத்திற்காக நன்கொடையாகக் கொடுத்துள்ளார்

என்ற சந்தோஷச் செய்தி நாம் அச்சுக்குப் போகுந் தருவாயில் கிடைத்தது. போபால் பேகமவர்கள் நீடூழிவாழ எல்லாம் வல்ல நாயனைப் பிரார்த்திப்போமாக.

*  *  *  *

**சுல்தான் இப்னு ஸஊது.**

சுல்தான் இப்னுஸஊது ஹிஜாஸில் ஹாஜிகளின் சௌகர்யத்திற்காக சில சௌகர்யங்களைச் செய்ய ஏற்பாடுகள் செய்திருப்பதாக தகவல்கள் கிடைத்திருக்கின்றன. அவருடைய ஏற்பாடுகளுக்கு நன்றி செலுத்த கடமைப்பட்டிருக்கிறோம். குஜராத்திய வெள்ளக் கஷ்டநிவாரண நிதிக்கும் ரூ. 5,000 நன்கொடை கொடுத்துதவியிருக்கிறார். ஹிஜாஸ் அரசர் இந்தியாவிற்கு நன்கொடை கொடுத்துதவியது இதுவே முதல் தடவையாகும். இனி இருநாடுகளுக்கும் நட்பு பலப்பட்டு பரஸ்பர ஒற்றுமையும் அதிகப்படுமென நம்புகிறோம்.

---

# இஹ்ஸான் பேகம்

அல்லது

## இஸ்லாம் மார்க்கத்தில் ஸ்திரீகளின் நிலைமை

மிஸ். ஹலீமா பேகம் எழுதுவது

"பூ அம்மா போதும், போதும். நீங்கள் இந்த கொடுமைகளை எப்படித் தான் சகித்துக் கொண்டிருக்கிறீர்களோ? எங்களால் ஒரு நிமிஷமும் பொறுத்திருக்கமுடியாது" என்று ஜயலட்சுமி கூற; இதைக் கேட்ட இஹ்ஸான் பேகம் "ஜயலட்சுமி, நீ சொல்லுவது ஒன்றும் விளங்கவில்லையே? கொடுமைகளாவது பொறுத்திருக்க முடியாதாவது. தலை காலில்லாமல் பேசுகிறாயே?" என பதில் இறுத்தாள்.

இஹ்ஸான் பேகம் இப்படிக் கூறி வாய்மூடுமுன் வீட்டின் வெளிக்கதவை யாரோ தட்டும், சப்தம் கேட்டது. வேலைக்காரி உடனே ஓடிப்போய் கதவின் தாழ்ப்பாளைத்திறந்துவிட பதினேழு அல்லது பதினெட்டு வயதிற்கதிகப்படாத மங்கையொருத்தி வீட்டிற்குள் நுழைந்தாள். வந்த ஸ்திரீயின் உடைகளைக் கண்டமாத்திரத்திலேயே அவள் கிறிஸ்தவமரபைச் சேர்ந்தவளென்று சொல்லி விடலாம். கழுத்திலிருந்து மார்பில் தொங்கிக் கொண்டிருந்த

தங்கச் சிலுவை இவள் கிறிஸ்தவ மதத்தினளென்பதை உறுதிப் படுத்திற்று.

வந்த ஸ்திரீயை இஹ்ஸான் பேகமும் ஜயலட்சுமியும் எதிர் கொண்டழைத்துவந்து ஒரு நாற்காலியில் உட்காரச் செய்தார்கள். வந்த ஸ்திரீயும் முகத்தின் வியர்வையைக் கைக்குட்டையால் துடைத்துக்கொண்டு மேஜைமீது கிடந்த விசிறியை எடுத்து விசிறிக்கொள்ள ஆரம்பித்தாள். ஜயலட்சுமியும் இஹ்ஸான் பேகமும் அவரவர்கள் ஒவ்வொரு நாற்காலியில் உட்கார்ந்தார்கள். வேலைக்காரி, ஒரு தட்டு நிறைய பிஸ்கோத்துகளும் மற்றொரு தட்டில் பற்பல பழ தினுசுகளும் கொண்டுவந்து வைத்தாள். வாய்க்கும் கைக்கும் சண்டை ஆரம்பித்துவிட்டது. இச்சமயம் நடந்த சம்பாஷணையின் முக்கிய பாகம் பின்வருமாறு:—ஜயலட்சுமி "ஞானம்! சமாசாரம் கேட்டியா? நீ வருவதற்கு சற்று முன்தான் நம் சகோதரி இஹ்ஸான் பேகமின் பரிதாப நிலைமையைப்பற்றி பேசிக்கொண்டிருந்தேன்."

ஞானம் "What is the matter? வாட்டிஸ்தி மாட்டர் (விஷயம் என்ன?)"

ஜயலெட்சுமி "இப்படியும் கஷ்டப்படுவதும் உண்டா? பரிதாபம்! பரிதாபம்! பலே மார்க்கமாம் இஸ்லாம் மார்க்கம். பெண்கள் வாசற்படி தாண்டிப்போகக்கூடாதாம். ஜெயில் கைதிகளாவது சற்று வெளியே போவதுண்டு. புருஷன் தலாக்கு (விவாக விலக்கு) கொடுப்பது சுலபம். ஸ்திரீ கொடுப்பதானால் இலகுவல்ல. ஒரு புருஷன் நான்கு மனைவிகள்வரை விவாகஞ் செய்து கொள்ளலாமாம். முஸ்லிம் ஸதிரீகளுக்குக் கடவுள் கிடையாது போலும். கோவிலுக்குச்செல்ல அனுமதி கிடையாது. இதைவிடவேறு கொடுமையும் வேண்டுமோ?"

ஜயலட்சுமியின் கேள்விகளுக்கு இஹ்ஸான் பேகமின் ஆணித்தரமான பதில்கள் வேண்டுமானால் அடுத்த சஞ்சிகையை எதிர் பாருங்கள்.

---

ஒரு ஷில்லிங்கில் ஒன்றே முக்கால் பென்ஸ் விலை மதிப்புள்ள வெள்ளி தானிருக்கின்றதாம்.

* *

உலகத்திலேயே மிகப்பெரிய சமுத்திரங்களில இரண்டாவதான அட்லாண்டிக் மகாச முத்திரத்தின் விஸ்தீரணம் 30,000,000 சதுரமைல்களாம்,

# இஸ்லாம் மார்க்கத்தின் மேன்மை

எல். எம். ஜி.

இஸ்லாம் மார்க்கமானது உலகில் மானிடர்களனைவர்களுக்கும் எக்காலத்துக்கும், எந்நாட்டினர்களுக்கும் ஏற்றமதமாகு மென்பதை எல்லோரும் அறிவார்கள். மானிடவர்க்கத்தினர்கள் வாழ்க்கையில் அனுஷ்டானத்தில் கைக்கொண்டுவந்து ஈடேற்றமடைவதற்கு ஏற்ற மார்க்கம் இஸ்லாம் மார்க்கம் ஒன்றேதான். இஸ்லாம் மார்க்கத்துடன் இதர மதங்கள் ஒவ்வொன்றையும் ஒப்பிட்டுப் பரிசீலனை செய்து பார்ப்போமானால் நாம் மேலே கூறியுள்ளதன் உண்மை நன்கு விளங்கும்.

மார்க்க சம்பந்தமான விஷயங்களை ஆராய்ச்சி செய்வதில் மார்க்கம் என்பது என்னவென்று முதலில் நிர்ணயித்துக்கொள்ளுதல் அத்தியா வசியமாகும். "மனுஷ்யன் தன்னுடைய வாழ்க்கையில் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டுமென்றும் தன்னுடைய வாழ்க்கையை எவ்வாறு அமைத்துக்கொள்ளவேண்டு மென்றும்" போதிப்பதுதான் மார்க்கம் என்பதாக அறிஞர்கள் கூறியிருக்கிறார்கள். பழத்தைக்கொண்டு அதன் மரத்தை அறிவதுபோல் ஒரு மனுஷ்யனுடைய வாழ்க்கையைக்கொண்டே அவன் பின்பற்றி நிற்கும் மார்க்கத்தை அறியவேண்டியிருக்கின்றது. மனுஷ்யன் தன்னுடைய வாழ்க்கையில் எவ்வாறு நடந்துகொள்ளவேண்டு மென்பதை அவன் பின்பற்றி நிற்கும் மார்க்கம் போதிக்கவேண்டியது அவசியமென்பது ருசுவாகவில்லையா? மனுஷ்யனுடைய வாழ்க்கையில் மேலான வாழ்க்கைக்குப் பாத்திரமான கோட்பாடுகளையும், லட்சியங்களையும் சட்டதிட்டங்களையும் கட்டளைகளையும் போதிக்கும் மார்க்கம் அத்தகைய வழிகளைக்காட்டாத மார்க்கங்களைவிட மேலானவையென்பதை ஏற்றுக்கொள்ள ஒருவரும் பின்னடைய மாட்டார்கள். இஸ்லாம் மார்க்கத்தை அதிகமாகத்தாக்கிவருகிறவர்கள் கிறிஸ்தவர்களே யாவார்கள். ஆனதுபற்றி முதலில் கிறிஸ்தவமத ஆராய்ச்சியைக் கைக்கொண்டு இஸ்லாம் மார்க்கத்தின் மேன்மையை ருசுப்படுத்த எல்லாம் வல்ல நாயனின் உதவியை நாடுவோமாக. (தொடரும்.)

# முஸ்லிம்களின் தற்கால கடமை.

ஜனுப் ஏ. யூஸுப் அலி.

ஸி. பி. ஈ., எம். ஏ., எல். எல். எம்., எப். ஆர். எஸ். எல்.,
பாரிஸ்டர்-அட்-லா. ஐ.ஸி.எஸ். (ரிடைர்டு.)

நமது நபிகள் நாயகம் ஸர்வரே ஆலம் முஹம்மது முஸ்தபா ரசூல் சல்லல்லாஹு அலைஹிவசல்லம் அவர்களுடைய திவ்விய ஒழுக்கங்களையும் பெருமானுருடைய அரும்போதனைகளையும் நன்குணர்ந்து நடப்பதற்கு இப்பொழுது தருணமும் அவசியமும் ஏற்பட்டிருப்பது போல் வேறெச் சமயத்திலும் ஏற்பட்டிருந்தது கிடையாது.

நாம் அவருடைய போதனைகளை சரியாக அறிந்துகொள்ளவில்லை. நம்முடைய சுயநலத்திற்கேற்றவாறு அவருடைய போதனைகளுக்கு வியாக்யானம் செய்யவும் நாம் தலைப்பட்டுவிட்டோம். நாம் ஏவல் விலக்கல்களை செவ்வனே கைப்பற்றி நடக்காமல் தவருன பாதைகளைப் பின்பற்றி நாம் சென்றுகொண்டிருக்கிறோம். எல்லாம் வல்ல ரஹிமானின் கிருபையின் காரணமாகவே நாம் நாசமாக்கப்படாமல் நாம் இன்னும் உயிர்வாழ்ந்து வருகின்றோம்.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய திவ்விய வாழ்க்கையினின்றும் அவருடைய அரும்போதனைகளினின்றும் நான் இங்கு நான்கு விஷயங்களை மட்டும் வற்புருத்திக் கூற விரும்புகின்றேன். அவையாவன:—(1) இஸ்லாமிய சகோதரத்துவம், (2) நீதிக்கும் நியாயத்திற்கும் கட்டுப்படல், (3) நம்மைச் சுற்றிலுள்ள விஷயங்களில் நன்மையானவைகளை ஆதரித்தல், (4) சுய நம்பிக்கையைப் பலப்படுத்தி ஆத்மார்த்த ஞானத்தை அடைதல்.

இஸ்லாமிய சகோதரத்துவத்தைப் பற்றி நாம் இரவும் பகலும் பேசுகின்றோமே யொழிய பிரத்தியட்சத்தில் ஒரு சிறிதளவேனும் நாம் அடையவில்லை என்பதை நாம் பகிரங்கமாக ஒப்புக்கொள்ள வேண்டியதே. முஸ்லிம்கள் எல்லோரும் சகோதரர்கள் என்பதையே நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தம்முடைய அருமையான கடைசி குத்பாவில் வற்புறுத்திக் கூறினுர்கள். ஆனுல் இன்றைக்கு நம்மவர்களுக்குள் நிலைமை எவ்வாறு இருக்கின்றது? முஸ்லிம்கள் தங்களுடைய வாழ்க்கையில் இன்று எவ்வாறு நடந்து வருகிருர்கள்? கட்சி

யும் பிரதி கட்சியும் இல்லாத கிராமமாவது முஹல்லாவாவது கிடையாது. பொறுமையும் வேற்றுமையும் கலகமுமில்லாத வீதியேனும் தெருவேனும் கிடையாது. இதற்கெல்லாம் என்ன காரணம்? நம்முடைய சுயநல மென்னும் பேய்க்கு நாம் அடிமைப்பட்டிருப்பதே யொழிய வேறொன்றுமல்ல. நபிகள் நாயகம் அவர்களுடைய அரும் போதனைகளால் நாம் என்ன பலன் அடைந்துவிட்டோம்? நாம் நம்முடைய குற்றங்களை அறிந்துகொள்ளாதவாறு நாம் அவ்வளவு கண் மூடிகளாகிவிட்டோம். நம்மில் பணக்காரர்கள் வேடிக்கைகளிலும் அற்ப சந்தோஷங்களிலும் பணத்தை வாரி இறைக்கின்றார்கள். அல்லாஹுத்தஆலாவின் கருணையால் தக்க கல்வி கற்றிருக்கும் சிலர் தங்களுடைய கல்வியை சுயநலத்திற்காக செலவழிப்பதில் ஈடுபட்டிருக்கிறார்களே யொழிய சமூக முன்னேற்றத்தில் சற்றேனும் கவலைகொண்டவர்களாக இருக்கக்காணோம்.

நம்முள் ஏழைகளாய் இருப்பவர்கள் தங்களுடைய வயிற்றுப் பிழைப்பிற்காக கஷ்டப்பட்டு உழைக்கவேண்டி யிருக்கிறது. இரவும் பகலும் பாடுபடவேண்டி யிருக்கின்றது. இவர்கள் இவ்வாறு பாடு படுவதை பார்த்திருப்பதற்காகத்தானோ பெரும்பணம் படைத்த பணக்காரர்களை அல்லாஹுத்தஆலா படைத்திருக்கின்றான். மெலியோர் பலவந்தர்களைக் கண்டு நடுநடுங்க வேண்டியிருக்கிறது. நாம் அடைந்திருக்கும் செல்வம் கல்வி முதலிய எல்லாவற்றையும் நம்முடையவும் நம்மை சுற்றியுள்ளவர்களுடையவும் முன்னேற்றத்திற்கும் அபிவிர்த்திக்கும் நம்முடையவும் நம்மை சுற்றியுள்ளோர்களுடையவும் ஆத்மார்த்த அபிவிர்த்திக்கும் உபயோகப்படுத்த வேண்டியிருக்க சுயநலத்திக்கு உபயோகப்படுதுவதால் நமக்கு கிடைக்கும் பாக்கியங்களையும் துர்ப்பாக்கியங்களாக்கிக் கொள்ளுகின்றோம்.

நம்முள் இப்பொழுது தோன்றி இருக்கும் தீங்குகளுக்கெல்லாம் பரிகாரம் என்ன? நாம் சுயநம்பிக்கையை ஆதாரமாக வைத்து ஆத்மார்த்த சக்தியையும் பலத்தையும் அடையமுயல்வதேயாகும் அல்லாஹுத்தஆலா எவருக்கும் அவர்கள் தாங்கக்கூடியதைவிட அதிகமான பளுவை அல்லது கஷ்டத்தை சுமத்துவது கிடையாது. நம் மீது சுமத்தப்படும் கஷ்டத்தையும் பளுவையும் நாம் சந்தோஷகரமாக தாங்கிச் செல்லுவோமாயின், நாம் நம்முடைய தவறுதல்களை உணர்ந்து எல்லாம் வல்ல நாயனின் கிருபையை தேடுவோமாயின், நாமும் நம்முடைய சமூகமும் ஈடேற்றம் பெற்று முன்னேற்றமடைவதற்கு சாதகங்கள் இருக்கின்றன. ஒருவித்தில் இருக்கப்பட்ட முளையானது பூமிக்குள் இருந்து வெளிவருவதற்கு எவ்வளவு போராடி

வெளிவருகின்றதோ அதேவிதமாக நாமும் ஈடேற்றம் பெறுவதற்கு போராட்டம் செய்யவேண்டி யிருக்கிறது. அப்போராட்டந்தான் நமக்கேற்படும் கஷ்டங்களும் துக்கங்களும். நாமும் நம்மை சுற்றி யுள்ளோர்களும் நம் சந்ததியார்களும் எல்லோரும் சுகமே வாழ்வதற்குத் தக்கதான வழிகளைப் பின்பற்றிநடப்பதற்கு எல்லாம் வல்ல நாயன் நமக்கு அருள்புரிவானாக.

"முஸ்லிம் கிரானிகல்"

---

## மாணவர் பகுதி

### இளைஞர்களும் சமூகநலனும்

மௌல்வி. முஜீபுர் ரஹ்மான் அவர்கள்.

கல்கத்தா "முஸல்மன்" பத்திரிகையின் ஆசிரியர்

சமீபத்தில் பர்டுவானில் கூடிய இளைஞர்கள் மகாநாட்டில் "முஸல்மன்"பத்திரிகையின் ஆசிரியரான மௌல்வி மூஜீபுர்ரஹமான் அவர்கள் செய்த பிரசங்கத்தின் முக்கிய பாகம் பின் வருமாறு:—

#### தியாகம் செய்ய முன் வரவேண்டும்.

சமூக ஊழிய வேலையாயினுஞ் சரி, அல்லது பொதுஜன நன்மைக்காகச் செய்யும் வேறெந்த வேலையாயினுஞ் சரி, தியாகம் தேவையாயும் அத்தியாவசியமுமாக இருக்கின்றது. தியாகஞ் செய்வதற்குத் தயாராக இருந்தாலல்லாமல் எவரும் பொதுஜன ஊழியமேனும் பொதுஜன சேவையேனும் செய்வது சாத்தியமல்லாத விஷயமாகும். தியாகஞ் செய்யவேண்டுமென்று நான் கூறுவதால் பொதுஜன சேவையில் ஈடுபட விரும்புகிறவர்கள் ஒவ்வொருவரும் பக்கிர்களும், சன்னியாசிகளுமாக மாறி உலகத்தின் பற்றுதல் வையாமல் வெறுப்புக் கொள்ளவேண்டுமென்று நான் கூறவில்லை. நான் இவ்வாறு கூறுவேனானல் இஸ்லாமார்க்க கொள்கைக்கும் கட்டளைகளுக்கும் விரோதமாக நான் போதனை செய்தவனாவேன். ஒவ்வொருவரும் எந்த வேலையில் அமர்ந்திருந்தாலுஞ் சரி, எத்தொழிலின் அமர்ந்திருந்தாலுஞ் சரி, பொதுஜன ஊழியமும், பொதுஜன சேவையும் செய்ய வேண்டுமென்ற நோக்கமும் எண்ணமும் இருக்குமாயின் பொது ஜனங்களுக்கு உதவியும் நன்மையும் செய்வதற்கான சாதகங்

களும், சௌகர்யங்களும் கிடைக்கக்கூடும் என்பதே. பொதுஜன ஊழியஞ் செய்வதற்கு வேண்டிய தருணம் கிடைப்பது கிடையாதென்றும் தகுந்த சாதனங்கள் கிடைப்பது கிடையாதென்றும் பலா கூறக்கேட்டிருக்கின்றேன். ஆனால் அவர்கள் சொல்லும் காரணங்களை ஆராய்ச்சிசெய்து பார்ப்போமானால் அவர்கள் கூறும் காரணம் ஒன்றேனும் ஆதாரமான காரணமாகாது. பணம் படைத்த ஸ்ரீமான்கள் ஏழைகளின் கஷ்டங்களையும் துக்கங்களையும் நிவர்த்திக்க பணம் கொடுத்து உதவி செய்யலாம். பணமில்லாதவர்கள் தங்கள் உழைப்பினால் தங்கள் சகோதரர்களின் துக்கங்களையும் கஷ்டங்களையும் நிவர்த்திசெய்யக்கூடும். பணமில்லாதவர் தங்கள் சகோதரர்களுக்கு உதவி செய்வதற்கு ஆயிரக்கணக்கான வழிகள் இருக்கின்றன. உங்களுக்கு ஒரு சிறு உதாரணம் கூறவிரும்புகிறேன். ஒரு கிராமத்தில் ஒரு விருத்தாப்பிய கிழவி இருப்பதாக வைத்துக்கொள்ளுவோம். அவளுடைய ஜீவனத்திற்குப் போதுமான பணம் அவளிடம் இருக்கின்றது. ஆனால் அவளைக் கவனித்து போஷிப்பவர்கள் ஒருவரும் கிடையாது. வாரத்திற்கு இரண்டொருதரம் அவளிடம் சென்று வேண்டிய கடைச்சாமான்களை வாங்கிக்கொண்டுவந்து கொடுக்க வில்லையானால் அவள் பட்டினி கிடந்து சாகநேரும். அவள் வீட்டிற்குப் பக்கத்திலிருக்கும் ஒருவர் அக்கிழவிக்கு வேண்டிய சாமான்களை வாங்கிக்கொண்டு வந்து கொடுத்து உபசரித்தல் கஷ்டமான காரியமாகுமா? இதற்குப் பணம் ஒன்றும் தேவையில்லை. ஒருவன் தன்னுடைய அவகாசத்தில் கொஞ்சம் அவகாசத்தை இக்கிழவியின் உதவிக்காகக் கொடுப்பதால் எவ்வளவோ உதவி புரியக்கூடும். ஒருவனுக்கு குழந்தைகளும் சுற்றத்தார்களேனும் இருக்காமலிருக்கலாம். திடீரென்று அவன் சீக்காய்ப் போகலாம். அவனுக்கு வைத்திய உதவி வரவழைக்கவும் வைத்தியன் கூறும் மருந்துகளை வாங்கி வந்து கொடுக்கவும் ஒருவர் உதவி செய்யக்கூடும். இதே விதமான உதாரணங்கள் ஆயிரக்கணக்காக நான் கூறக்கூடும். இப்படி உதவி செய்ய விரும்புகிறவர்களுக்கு பணம் தேவையில்லை. உதவி செய்ய வேண்டுமென்ற நோக்கமும் மனமும்தான் தேவை. இப்படி பொதுஜன ஊழியஞ்செய்ய விரும்புகிறவர்களுக்குத் தேவையானது தியாகஞ்செய்ய வேண்டியதற்கு தயாராக இருக்கவேண்டுமென்ற லட்சியம் ஒன்றே தான்.

## கூட்டுறவு இயக்கமும் முஸ்லிம்களும்.

பிறகு கூட்டுறவு இயக்கத்தின் நன்மைகளையும் கூட்டுறவு இயக்கத்தால் பொது மக்களும் முஸ்லிம் சமூகத்தினரும் அடையக்கூடிய

பலன்களையும் குறிப்பிட்டுக் கூறிவிட்டு சமூகங்களின் நிலைமை சீர்ப்படுத்தப்பட்டு அவர்கள் முன்னேற்றமடைய வேண்டுமானால் கூட்டுறவுச் சங்கங்களில் எல்லோரும் மெம்பர்களாகச் சேர்ந்து கூட்டுறவுச் சங்கங்களால் ஏற்படக்கூடிய பலன்களை அனுபவிக்கும்படிச் செய்ய வேண்டு மென்று கூறினர்.

### ஆரம்பக்கல்வியைப் பரப்பவேண்டியதன் அவசியம்.

சமூக முன்னேற்ற வேலை எதுவும் திருப்திகரமாக நடைபெற வேண்டுமானால் பாமர ஜனங்களுக்கும் பொது ஜனங்களுக்கும் கல்வி அவசியமென்பதை வற்புறுத்த விரும்புகிறேன். நம்முடைய ஜனங்களில் 100-க்கு 85 பேர் வீதம் படிக்கத் தெரியாமலும் எழுதத் தெரியாமலும் இருக்க சமூக முன்னேற்றத்திற்கான வேலை எதுவும் திருப்திகரமாக நடைபெறாது. நம்மவர்களுக்குள் பரவியிருக்கும் கல்வியில்லாமையை நீக்க நாமெல்லோரும் பாடுபடவேண்டும். ஆரம்பக் கல்விக்கு சாதனங்கள் இல்லாத இடங்களிலெல்லாம் ஆரம்பக் கல்விக்குப் பள்ளிக்கூடங்களை ஸ்தாபனஞ்செய்வதில் ஈடுபட்டு நீங்கள் உழைபீர்களானல் நாட்டின் முன்னேற்றத்திற்கு நீங்கள் எவ்வளவோ நன்மை புரிந்தவர்களாவீர்கள்.

### இளைஞர்களுக்கு அத்தியா வசியமானது விடாமுயற்சியே.

சமூக முன்னேற்றத்தில் ஈடுபட்டு நீங்கள் உழைக்க விரும்புவதாகத் தெரிகிறது. உங்களுடைய முயற்சியை எல்லோரும் பாராட்டுவார்கள். ஆனல் ஒரு விஷயத்தில் உங்களுக்கு எச்சரிக்கை செய்ய விரும்புகின்றேன். ஏதோ செய்யவேண்டுமென்று நினைத்துக் கொண்டு பரபரப்புடனும் ஆவேசத்துடனும் இன்று சில விஷயங்களை ஆரம்பஞ்செய்து விட்டு நாளையதினம் மௌனம் சாதித்துவிட்டு மூன்றும் நாள் விஷயத்தை கவனியாமல் தூக்கத்தில் விழுந்து விடுவது கூடாது. இளைஞர்களாகிய நீங்கள் உங்களுக்குத் தோன்றும் ஆவேசத்தின் காரணத்தால் பல விஷயங்களைப்பற்றி நீங்கள் ஆலோசனை செய்து அநேக விஷயங்களைக் கைக்கொள்ள நோக்கங்கொள்ளலாம். உங்களுக்கு இத்தகைய உணர்ச்சி தோன்றுவதை நான் பாராட்டுகின்றேன். ஆனல் நான் உங்களுக்கு ஒரு விஷயம் எச்சரிக்கை செய்ய விரும்புகிறேன்.

### இளைஞர்களுக்கு ஒரு எச்சரிக்கை.

ஆவேசத்தின் காரணமாக பற்பல காரியங்களை ஒருங்கே ஆரம்பித்து ஒன்றையும் செய்து முடிக்காமல் அறை குறையாகவிட்

டொழிப்பதைவிட ஏதாவது ஒரு காரியத்தை எடுத்துக்கொண்டு அதை செவ்வனே திருப்திகரமாக பூராவாக முடிப்பது மேலாகும். அந்த ஒரு காரியத்தை பூர்த்தி செய்வதிலேயே ஒருவர் அவருடைய வாழ்நாள் முழுவதும் ஈடுபட நேர்ந்தாலும் சரி, பாதகமில்லை. அவர் தம்முடைய வாழ்நாளில் ஒரு காரியத்தையேனும் பூர்த்தி செய்யக் கூடிய பாக்கியம் கிடைத்த பெருமை அடைய நேரின், அதுவே போதும் என்று நினைக்கிறேன். நீங்கள் செய்யும் வேலைகள் எல்லாம் ஆரம்பத்திலேயே வெற்றியைக் கொடுத்துவிடா. சில கைகூடாமற் போவதற்காக அதைரியப்படலாகாது. ஒரு மனுஷ்யனுடைய வாழ்க்கை எப்பொழுதும் ஒரு தன்மையாக இராது. இதன் காரணமாக நேரக்கக்கூடிய சில சங்கடங்களால் நாம் எடுத்துக்கொண்டிருக்கும் முயற்சிகளில் இடையூறுகளும் இடைஞ்சல்களும் நேரக்கூடும். இவைகளைக்கண்டு நாம் தளர்ச்சியடையக் கூடாது. அதைரியப்படக் கூடாது. கைக்கொண்ட வேலையை விடாமலும், ஊக்கத்தில் தளர்ச்சியடையாமலும் வேலை செய்யவேண்டும். இளைஞர்களுக்கு சற்குணமே அத்யாவசிய மென்பதையும் வற்புறுத்திக் கூறுகிறேன். செல்வம், கல்வி எல்லாவற்றிலும் குணமே மேலானதென்றும் அத்யாவசியமானதென்றும் நீங்கள் மறந்து விடலாகாது.

---

அலாசேன் ரயில்வேயில் கார்டாயிருந்த ஒருவர் தமது குறிப்புப் புத்தகத்தில் சில ருசிகரமான விஷயங்களை எழுதி வைத்திருக்கிறாராம். அவர் 32 வருஷங்கள் வேலை பார்த்திருக்கிறார். அக்காலத்திற்குள் பிரயாண வண்டிகளில் 3,16,518 மைலும், சாமான் வண்டியில் 18,69,000 மைலும் பிரயாணஞ் செய்தாராம். அவர் பிரயாணஞ் செய்துள்ள தூரம் ஆறுதரம் பூமிப்பிரதட்சணம் செய்ததற்குச் சமம். அவருக்கு 1,889 விடுமுறை நாட்க ளிருந்தன. ரயில் விபத்துக்களால் 118 நாட்களும் மற்ற வியாதிகளால் 155 நாட்களும் வருந்தினராம். உலகத்திலேயே அதிக நீளமுள்ள ஸிம்பிளன் டன்னல் வழியாக 1,214 தரம் போயிருக்கிறாராம்.

* * * *

உலகத்திலுள்ள நகரங்களில் சிகாகோ நகரத்தில்தான் அதிக குற்றங்கள் நடக்கின்றனவாம். குழந்தைகளை விலைக்கு விற்கப்படும் இடங்கள் அங்கிருக்கின்றன. பணக்கார பிரமசாரிகள் 50 பவுனிலிருந்து 300 பவுன் வரையில் விலையுள்ள குழந்தைகளை வாங்கிக் கொள்ளலாமாம். சமீபத்தில் இப்படிப்பட்ட குழந்தை விற்கும் இடமொன்றை போலீஸார் கண்டு பிடித்தனர். குழந்தை விற்ற யௌவன மாதை போலீஸார் கைது செய்ய முயன்றனர். ஆனால் அம்மாது தப்பியோடிவிட்டாள். அவளைப் பிடிக்க முயற்சி செய்தபோது மற்றும் சில ஸ்திரீகளுடையகுற்றம் வெளியாயிற்றாம். அவர்கள் கைது செய்யப் பட்டனர்.

# அமீர் அப்துல் கரீமின் வாழ்க்கை.

காலஞ்சென்ற நெப்போலியன் சக்கிரவர்த்தி எல்பாவில் சிறை வைக்கப்பட்டிருந்த காலத்தில் தம் ஜென்ம பூமியாகிய பிரான்ஸைப் பார்க்க வேண்டுமென்று எவ்வளவு ஆவலாகவும் ஆசையாகவும் கனவு கண்டாரோ அதே விதமாய் அதைவிட அதிகமாகவே இப்பொழுது ரிப் முஸ்லிம் தலைவராக இருந்து ரீயூனியனில் சிறையாக வைக்கப்பட்டிருக்கும் அமீர் அப்துல்கரீம் தம் நாடாகிய மொரோக்கோவைப் பார்க்க வேண்டுமென்று மிகுந்த அவாவும் ஆசையும் கொண்டவராக இருக்கிறார்.

சுமார் ஒரு வருஷத்திற்கு முன் அமீர் அப்துல் கரீம் பிரஞ்சுக்காரர்களுக்குச் சரணடைந்த காலத்தில் பிரஞ்சு கவர்ன்மெண்டார் செய்த தீர்ப்பின் பிரகாரம் அமீர் அப்துல் கரீம் இப்பொழுது ரீயூனியன் தீவில் ஒரு பெரும் விசாலமான பங்களாவில் வைக்கப்பட்டிருக்கிறார்.

பிரிட்டிஷ் யுனைடெட் பிரஸின் பிரதி நிதியொருவர் அவரை பேட்டி கண்டு பேசினார். அச்சமயம் அமீர் அப்துல் கரீம் அவர்கள் கூறியதாவது :—

"நான் மிகவும் சௌகரியமாகவும் சுகமாகவும் இருந்து வருகின்றேன். ஆனால், மொரோக்கோ திரும்பிச் செல்லவேண்டுமெனும் அவா தான் எனக்கு அதிகமாக இருக்கின்றது. இன்று என்னுடைய நிலைமையென்னவென்பது எழுதப்பட்டிருக்கின்றது. ஆனால் நாளைய நிலைமையென்னவென்பது தான் எனக்குத் தெரியவில்லை, நாளைக்கு என்னவாகுமென்பதை யார் தான் சொல்லக்கூடும்."

அமீர் அப்துல் கரீமுடைய முகமானது தேஜஸ் பொருந்தியதாகவே காணப்படுகின்றது. நான் பேட்டி கண்டு பேசிய காலத்தில் அவர் சிரித்த முகத்துடன் பேசினார். ஆனால், அவருடைய முகத்திலிருந்து கவலைக்கான சின்னங்கள் மறைந்திருக்கவில்லை. தாம் பிறந்த நாட்டைப் பார்க்க வேண்டுமென கவலை கொண்டவராக இருக்கிறாரென்பதை முகக்குறிகள் தெரிவிக்காமலிருக்க வில்லை.

அமீர் அவர்கள் கூறியதாவது:— நாங்களெல்லோரும் சுகமாக இருக்கிறோம். சுகமாக இல்லாமல் வேறெவ்விதமாக நாம்

இருக்க முடியும்? அதிகாரிகள் எங்களை அதிக பட்சத்துடனும் பிரியத்துடனும் பார்த்து வருகிறார்கள். தினம் குயினா சாப்பிடவேண்டுமென ஏன் அதிகாரிகள் வற்புறுத்துகிறார்களென்பதற்குக் காரணம் தெரியவில்லை. குயினா சாப்பிடுவது வியாதியைத் தடுப்பதற்கென்று அவர்கள் கூறுகிறார்கள். ரிப்பில் வாசஞ் செய்த காலத்தில் நாம் ஒரு நாளும் குயினா சாப்பிட்டது கிடையாது. குயினா நமக்குத் தேவையென்றும் தோன்றவில்லை. ஆனால், நாமென்ன செய்வோம். எல்லாம் வல்ல நாயனின் கட்டளைப்படி நடக்கின்றது.

நான் பிரான்ஸை நேசிக்கிறேன். ஸ்பானியர்களை நான் கொடும் விரோதிகளெனக்கருதுகின்றேன். ஸ்பெயின் ரிப் நாட்டின் பரம்பரை விரோதி. கொடுங்கோன்மையும் கொடூரமும் வாய்ந்தவும் இரத்தம் உறிஞ்சும் அவாக்கொண்டுள்ளவுமான ஸ்பானியர்களுக்கு நான் பெரும் பகைவன். பிரான்சு எப்பொழுதும் இஸ்லாத்தைப் பாதுகாத்து வருகின்றது. பிரஞ்சுக்காரர்கள் ஸ்பானியர்களுடன் சேர்ந்து கொண்டு சண்டை போட ஆரம்பித்த காலத்தில் தான் நான் பிரஞ்சுக்காரர்களை எதிர்த்து சண்டை போட ஆரம்பித்தேன்.

நான் இப்பொழுது ரிப் நாட்டிற்குத் திரும்பிச் சென்று பிரஞ்சுக்காரர்களின் துணையையும் உதவியையும் கொண்டு ரிப் நாட்டின் முன்னேற்றத்திற்குப் பாடுபட விரும்புகின்றேன். நான் என்னுடைய நாட்டைமீண்டும் காண ஆவலுள்ளவனாக இருக்கிறேன். சிறு குழந்தைகள் தவிர இதரர்கள் எல்லோரும் இவ்வாறே விரும்புகிறார்கள்.

நான் சரணடைந்தபோது என் நாட்டிலேயே என்னை வைக்க அவர்கள் நிச்சயித்திருப்பதாக எனக்குக் கூறப்பட்டது. பிரான்சில் சில நாள் தங்கிய பிறகு என்னை ரிப் நாட்டிற்கு மீண்டும் அழைத்துச் சொல்லப்படுமென்று எனக்குக் கூறப்பட்டது. ரியூனியனில் சுகாதார நிலைமை சௌகரியமானதாக இருக்கின்றது. மொரோக்கோவைப் போல் உஷ்ணம் இங்கு கிடையாது.

அமீர் அப்துல் கரீமவர்கள் தம்முடைய வாழ்நாள் சரித்திரத்தைப் பிரசுரஞ் செய்திருக்கிறார். ரியூனியனுக்கு இவர் கொண்டு வரப்பட்ட சமயத்தில் இவைகள் எழுதப்பட்டன. இந்த வாழ் நாள் குறிப்புகளில், தம்முடைய சுதந்தரப் போராட்டத்தில் அந்நிய நாட்டினர் யார் யார் தங்களுக்கு உதவி செய்தார்களென்பதை மிகவும் விரிவாகக் குறிப்பிட்டிருக்கிறார். ஜர்மன் கவர்ன்மெண்டார் எத்தகைய உதவி புரிந்ததாகவும் அதில் குறிப்பிடப்பட்டில்லை. இங்கிலாந்துஅதிகமாகவும் இதாலி சொற்பமாகவும் உதவி புரிந்ததாகக் குறிப்பிடப்பட்

டுள்ளது. மொரோக்கோ விட்டு வெளிப் புறப்பட்டுச் சென்றுவிடுவதற்குக் கப்பல் கொடுத்து உதவி செய்வதாகவும் பிரிட்டிஷார் தனக்கு தான் சரணடைந்தபின் கூறியதாக அதில் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. மொரோக்கோ அரசர் அமீர் அப்துல் கரீமல்ல. பிரஞ்சுக்காரர்கள் வசம் கைதியாயிருக்கும் அமீர் அப்துல் கரீம் கூறுவதாவது:—

"இனி எக்காலத்திலேனும் இங்கிலாந்துக்கும் பிரான்சுக்கும் சண்டை ஏற்பட்டால் பிரான்ஸுக்கு விரோதமாக மீண்டும் நான் சண்டை செய்ய என்னை உபயோகித்துக்கொள்ள இங்கிலாந்து விரும்பியதாகத் தெரிகிறது.

"முஸ்லிம் கிரானிகில்."

---

# சக்கரவர்த்தி அவுரங்கஜீபும் முஸ்லிம்களல்லாதாரும்

ஸ்ரீமான் மெஹர்ஸிங்கு எழுதுகிறார்.

தற்காலம் நடந்துவரும் ஆராய்ச்சி வேலைகள் மனிதர்களுக்குள் ஏற்பட்டிருக்கும் அஞ்ஞானத்தையும் துவேஷத்தையும் ஒருவாறு நீக்கி வருகிறதெனினும், இந்தியாவில் இஸ்லாம் மார்க்கம் வாளைக் கொண்டு பரப்பட்டதாகத் தவறுதலாகவும் அகாரணமாகவும் பரவியுள்ள தப்பபிப்பிராயத்தை நீக்குவதில் போதுமான அளவு வேலை செய்யவில்லை. சக்கரவர்த்தி அவுரங்கசீபு மிகவும் பலமான மூடபக்திகொண்ட கொடூர அரசராக இருந்து வந்தாரென்றும், ஆயிரக்கணக்கான ஹிந்துக்களை இஸ்லாம் மார்க்கத்தில் சேர்த்தாலொழிய போஜனம் கொள்ளுவதில்லையென்று அவர் விரதம் கொண்டிருந்தாரென்றும் தப்பாகவும், தவறாகவும் சிலரால் கருதப்பட்டு வருகின்றது. ஆனால், விஷயத்தைச் சற்று நிதானித்துப் பார்த்தால் இத்தகைய அபிப்பிராயம் கொள்ளுவது முற்றும் தவறென்றும், தப்பென்றும் எளிதில் விளங்கும்.

சக்கரவர்த்தி அவுரங்கசீபு அவர்களின் கமாண்டர்களும் (இராணுவத் தலைவர்களும்) ஆலோசனை கூறுபவர்களும் ஹிந்துக்களாக இருந்ததாகவும், அவர்களில் முக்கியமானவர்கள் மகாராஜா ஜஸ்வான்டு சிங்கும் ராஜா ஜெய்சிங்கும் இருந்தார்களென்றும் சரித்திரம் கூறுகின்றது. மூடபக்தியும் துவேஷபுத்தியும் உள்ளதாகக்

கூறப்படும் அவுரங்கசீபு அரசர் காங்கிராவிலுள்ள புராதன ஹிந்து கோவிலின் செலவு களுக்காக 500 ஏக்கர் நிலங்களைக் கொடுத்துத வியிருக்கிறார். இந்த நிலங்களை தானமாகக் கொடுத்த விபரம் செப்புத் தகட்டில் வெட்டப்பட்டுப் பதிவுசெய்யப்பட்டிருக்கிறது. இச்செப்புத்தகடு அக்கோவிலின் நிர்வாகிகளிடம் இன்னும் இருந்து வருகின்றது.

1668-ம் வருஷத்தில் இந்தியாவில் சுற்றுப்பிரயாணம் செய்த பிரஞ்சுப் பிரயாணி ஒருவர் தம்முடைய நண்பராகிய மிஸ்டர் சாப்ல னுக்கு எழுதிய கடிதமொன்றில் பின்வருமாறு கூறுகிறார் :—

"சக்கரவர்த்தி அவுரங்கசீபு ஒரு உண்மை முஸ்லிமாக இருந் தும் மூடபக்தியுள்ள பழைய காலத்துச் சடங்குகளைச் செய்பவர் களை இவர் ஆட்சேபனை செய்வதுமில்லை. தடை செய்வது மில்லை. ஏனெனில், விக்கிரக ஆராதனை செய்பவர்களை அத்தகைய ஆரா தனைகள் செய்ய வேண்டாமென்று இவர் தடுப்பதும் கிடையாது.''

இதேவிதமாக சீக்கியகுருமார்களும் மிக்க அன்பாகவும் பட்ச மாகவும் மொகலாய சக்கரவர்த்திகளால் நடத்தப்பட்டு வந்தார்கள். ஆனால், இன்றைக்கோ அத்தகைய மொகலாய சக்கரவர்த்திகள் கொடூர குணம் பொருந்தியவர்களென்று கருதப் பட்டு வருகிறார்கள். சீக்கிய குருமார்கள் மொகலாய சக்ரவர்த்திகளால் கொடுங் கோன் மையாக நடத்தப்பட்டதாகப் பொய்யானகட்டுக்கதைகள் எப்படியோ பரவி, உலவிவருகின்றன. ஆனால், இக்கதைகள் யாரால் கட்டிவிடப் பட்டனவோ அவர்களுடைய மூதாதையர்கள் சீக்கிய குருமார் களைக் கொடுங்கோன்மையாக நடத்திவந்தார்கள்.

சீக்கிய குருவாகிய குருநானக்ஜி காசியில் பண்டிதர்களால் கொடுங்கோன்மையாக நடத்தப்பட்டார். இந்தக் குருவானவர் விக்கிரக ஆராதனையைப் பலமாகக் கண்டனஞ் செய்துப் பேசினர். ஹிந்துக்களெல்லாம் கூடிக்கொண்டு குருநானக்கையும் அவருடைய சிஷ்யர்களையும் பற்றிப் பொய்யானவும், விஷமானவும் விஷயங்களை யெல்லாம் இப்ராஹிம் லோடிக்குச் சொல்லிக்கொடுத்து குருநானக் கையும் அவருடைய சிஷ்யர்களையும் சிறையில் போடும்படிச் செய் தார்கள். பானிப்பட்டு சண்டைக்குப் பிறகு இவர்களெல்லோரும் மிக்க மரியாதையுடனும் கௌரவத்துடனும் விடுதலைச் செய்யப் பட்டனர்.

குருநானக்ஜீக்குப் பிறகு அங்காக்ஜி பட்டத்திற்கு வந்தார். இவரும் மிக்க கௌரவமாக நடத்தப்பட்டார். இவர் உயிருடனிருக் கும் பரியந்தம் இவருக்கு எவ்விதத் தீங்கும் செய்யப்பட வில்லை.

மூன்றாவது குருவாகிய ஆமாதாஸ்ஜி என்பவர் காலத்தில் பஞ்சாபில் வெகு தூரத்திலிருந்தெல்லாம் சிஷ்யர்கள் வந்து சேர்ந்தார்கள்.

கோவிந்து என்ற ஒரு ஹிந்து சீக்கிய குருமார்கள்மீது ஒரு வழக்குக் கொண்டு வந்தார். சீக்கிய குருமார்கள் பிரதி தினமும் அடைந்துவரும் பலத்தைப்பற்றி முஸ்லிம் கவர்னர் அதிக கவலையுற்றிருந்தாரெனினும், வழக்கை இவர் (முஸ்லிம் கவர்னர்) சீக்கிய குருவுக்குக் சாதகமாகத் தீர்மானஞ் செய்தார். சீக்கிய குருக்களையும், அவருடைய சிஷ்யர்களையும் சில வரிகளினின்றும் அக்பர் சக்கரவர்த்தி விலக்கிவைத்தார்.

அக்பர் சக்கரவர்த்தி லாகூருக்குப்போகும் வழியில் குருராம்தாஸ்ஜியைக் கண்டுபேசி சுல்தான் விந்துக்குப் பக்கத்தில் 28,000 பைகா நிலத்தையும் ஏராளமான பணத்தையும் கொடுத்தார். இதிலிருந்தே மொகலாயச் சக்கரவர்த்திக்கும், சீக்கிய குருமார்களுக்கும் நேசம் பலமாக இருந்து வந்ததென்பது விளங்கவில்லையா?

சீக்கிய ஐந்தாவது குருவுக்கும் முஸ்லிம்களுக்கும் இருந்த சம்பந்தத்தைப்பற்றிச் சற்று கவனிப்போம். முஸ்லிம்களுக்கு மக்கமாநகரம் எப்படியோ, ஹிந்துக்களுக்குக் காசி எப்படியோ அதேமாதிரியாக சீக்கியர்களுக்கு அமிர்தசரஸிலுள்ள பொன்கோவில் இருந்துவருகின்றது. இந்தக் கோவிலின் கட்டடம் கட்ட ஆரம்பஞ்செய்தகாலத்தில் அஸ்திவாரக் கல் நாட்டும் வைபவத்திற்குச் சீக்கிய ஸர்தார்கள் (தலைவர்கள்) ஹிந்து பண்டிதர்கள் அநேகர் வந்திருந்தார்கள்; அஸ்திவாரக் கல் நாட்டும் புண்ணிய சடங்கைச் செய்யபுண்ணியவானும் புனிதமானவனுமான ஒருவர் வேண்டியது அவசியமாக இருந்தது.

இத்தகையவர் அக்கூட்டத்தில் ஹஜரத்மியான்மீர் சாஹெப் இருந்தார். அஸ்திவாரக் கல்லைநாட்ட இவரை அர்ஜன் தேவ்ஜீயே தெரிந்தெடுத்தார்.

ஹஜரத்மியான்மீர் என்பவரால் அஸ்திவாரக் கல் வைக்கப்பட்டது. ஆனால் கல் தவறான இடத்தில் வைக்கப்பட்டது. பக்கத்தில் இருந்த கொல்லத்துக்காரன் அந்தக் கல்லை எடுத்துச் சரியாக வைத்தான். உடனே குருசாஹெபுக்குக் கோபாக்கினி வந்துவிட்டது.

அவர் அச்சமயம் சொன்னதாவது:—"ஓ கொல்லத்துக்காரனே, நீ நாசமாகப்போகக்கடவாய். புண்ணியமானவும் புனிதமானவும் கையால் வைக்கப்பட்ட கல்லை நீ எடுத்து விட்டாய். ஒருகாலம் வரும். அச்சமயத்தில் இக்கோவில் இடித்து நாசஞ்செய்யப்பட்டு அந்த மைதானத்தில் மற்றொரு கோயில் கட்டப்படும்.

இவர் இப்படிச் சொன்னவாக்குப்பின்னால் அஹமத்ஷா அப்தலி காலத்தில் இவ்வாறே நிறைவேறியிருக்கின்றது.

இந்த சம்பவத்திலிருந்தே முஸ்லீம் ஒலிமார்களைச் சீக்கியர்கள் எவ்வளவு கௌரவமாகவும் பெருமையாகவும் பாராட்டி வந்தார்களென்பது விளங்குகிறதல்லவா?

"ரிவியூ ஆப் ரிலிஜன்ஸ்"

# உலகிற்கு இஸ்லாம் மார்க்கம் செய்த நன்மைகள்

அல்ஹாஜ் ஹேட்லி பிரபுவின் பிரசங்கம்

தென்னாப்பிரிக்காவுக்கு நம்முடைய தூதுவக்கூட்டத்தினர் சில மாதங்களுக்குமுன் செய்திருந்த விஜயத்தைப்பற்றி ஒருவர் பத்திரிகைக்கு எழுதுகையில் நாகரீகம், கலைகள், சாஸ்திரம், ரசாயனசாஸ்திரம் முதலியவைகளெல்லாம் கிறிஸ்தவமார்க்கத்தில் பரவி, அபிவிருத்தியடைந்திருக்கிறதென்றும், இஸ்லாம் மார்க்கத்தில் அப்படியொன்றும் அபிவிருத்தியடைந்ததில்லை யென்றும் முஸ்லிம்கள் இவ்விஷயங்களில் பின்னடைந் திருக்கிறார்களென்றும் கூறினர். இவ்வாறு கூறி இஸ்லாம் மார்க்கத்தைவிட கிறிஸ்துவ மார்க்கம் மேலானதென்றும் உயர்ந்ததென்றும் காட்ட வேண்டுமென்பதற்காக அவர் அப்படி எழுதியிருக்கிறார்போலும். இதைப்போல் எழுதுகையில் கிறிஸ்துவ மார்க்கத்தில் ஏராளமான தர்மங்கள் நடைபெறுவதாகவும் தர்மப் பள்ளிக்கூடங்களும், வைத்திய சாலைகளும், அனாதைச் சாலைகளும் விடுதிகளும் ஏற்படுத்தப்பட்டிருப்பதாகவும் பலர் எழுதுவது வழக்கமாக இருந்துவருகின்றது. கிறிஸ்துவ மார்க்கம் ஏற்பட்டு பல நூற்றாண்டுகள் வரையில் இத்தகையவைகளெல்லாம் ஒன்றும் இல்லாமலிருக்க இவைகளெல்லாம் கிறிஸ்தவ மார்க்கத்தில் உற்பத்தியானதாகக் கூறுவது எங்ஙனம் பொருந்தும்? இவைகளெல்லாம் ஏற்பட்டதற்கு வேறு காரணங்கள் பல இருக்கின்றன. அவைகளுள் முக்கியமானது ஸ்பெயின் தேசத்தில் இஸ்லாம் மார்க்கம் பரவப்பட்டிருந்ததுதான். இஸ்லாம் மார்க்கம் இத்தகைய தர்மங்களைப்பற்றி ஏராளமாகப் போதிக்கின்றது. இஸ்லாம் மார்க்கம் ஏற்பட்ட இருநூறு வருஷங்களுக்குள் இத்தகைய ஸ்தாபனங்களை முஸ்லிம் நாடுகள் எல்லாவற்றிலும் ஸ்தாபித்துவிட்டது.

இஸ்லாம் மார்க்கம் ஒரு விஷயத்தில் பெருமையைக்கொள்ளமுடியும். பக்தாதில் நிஜாமுல்முல்க் அவர்களுடைய காலத்தில் முஸ்லிம் சர்வகலாசாலைகள் ஸ்தாபிக்கப்பட்டும், அப்துல் ரஹ்மானுடைய காலத்தில் கிரானடாவில் சர்வகலாசாலைகள் ஸ்தாபிக்கப்பட்டும், மாணவர்கள் ஜாதிமத வித்தியாசமின்றியும், நிறவித்தியாசமின்றியும், எவ்வித வித்தியாசம் பாராட்டப்படாமலும் கல்வி பயிற்றுவிக்கப்பட்டார்கள். பொதுஜன பண்டிலிருந்து மாணவர்களுக்கு சாப்பாட்டு வசதியும் இடவசதியும் செய்துகொடுக்கப்பட்டன.

இவைகள் தவிர ஆஸ்பத்திரிகளும், புத்தகசாலைகளும், இதர ஸ்தாபனங்களும் ஏற்படுத்தப்பட்டன. ஸ்பெயின் நாட்டை முஸ்லிம்கள் ஆட்சிசெய்த காலத்தில் ஒவ்வொரு பட்டணத்திலும் பொது ஜனங்களின் உபயோகத்திற்காக ஸ்நானக் கட்டங்கள் ஸ்தாபிக்கப்பட்டன. பர்டினன்ட்காலத்தில் இந்த ஸ்நானக் கட்டடங்களும் சாலைகளும் நாசஞ்செய்யப்பட்டன. ஏனெனில், அக்காலத்தில் கிறிஸ்துவ மார்க்கத்திற்கும் சுத்தத்திற்கும் வெகு தூரம்.

இயேசு கிருஸ்துவின் சொற்ப நாள் வாழ்வு கலைகளையும், ரசாயன சாஸ்திரங்களையும், நாகரீகத்தையும் செவ்வனப்படுத்தவும் சீர்திருத்தவும் அபிவிருத்தி செய்வதற்கான ஸ்தாபனத்தை ஏற்படுத்தவும் இடங்கொடுக்கவில்லை. இதற்குமாறாக குர்ஆனிலும் நபிகள் நாயகமவர்களாலும் இக்காரியங்கள் வற்புறுத்திக் கூறப்பட்டிருக்கின்றன. முன் தெரியாமலிருந்த நாகரீகத்தையும், கலைகளையும் ஸ்தாபிப்பதில் குர்ஆனின் போதனையும், நபிகள் நாயகமவர்களின் போதனையும் அதிக பிரயோஜன முள்ளவைகளாக இருந்திருக்கின்றன.

ஆரம்ப நாட்களின் முஸ்லிம்கள் குர்ஆன் ஷரீபு ஓதப்படுவதைக் கேட்டு குர்ஆனைப் படிக்கவும் அரபி எழுதுவதற்கும் ஆவல் கொண்டார்கள். குர்ஆனைப் படிக்க எல்லோரும் ஆரம்பிக்கவே அரபிபாஷை இலக்கணம் எழுதப்படுவதற்கு அது ஆதாரமாக அமைந்தது. புராதன சரித்திரங்களைப் படிக்கவும், நிகழ்கால சரித்திரத்தை எழுதி வைக்கவும் ஜனங்களுக்கு ஆவல் ஏற்பட்டது. சட்ட சம்பந்தமான வியாக்கியானங்களும் எழுதி வைக்கப்பட்டன. சட்டங்களைப்பற்றி இயற்கையைப் பற்றியும் அறியக்கூடிய எல்லாவற்றையும் அறிந்துக் கொள்ளக்கூடியதற்கான ஆவல் ஜனங்களுக்குள் அதிகமாக ஏற்பட்டது.

முஸ்லிம் தூதுவர்கள் இந்தியா, ஈரான், கிரீஸ் முதலிய நாடுகளுக்கெல்லாம் அனுப்பப்பட்டு மறைந்து கிடந்த கலைகளையும் சாஸ்திரங்களையும் கண்டு பிடிக்கும்படி ஏற்பாடு செய்யப்பட்டது. ஆபிரக்

கணக்கான வருஷங்களாக உலகத்தில் மறைத்தும் ஒளிக்கப்பட்டும் வைக்கப்பட்டிருந்த சாஸ்திரங்களும் புத்தகங்களும் ஏராளமான பணம் கொடுக்கப்பட்டு வாங்கப்பட்டன. இந்த அருமையான நூல்களெல்லாம் அரபி பாஷையில் மொழி பெயர்க்கப்பட்டன.

முஸ்லிம்கள் இவ்வாறு செய்ததது அவர்கள் இவ்வாறு நடந்துகொண்டதும் ஒருவித ஆச்சரியத்தையும் உண்டுபண்ண வேண்டியதில்லை. ஏனெனில், நபிகள் நாயகமவர்களே மனிதனுக்கு கல்வியில் ஒரு ஊக்கத்தையும் பிரியத்தையும் உண்டு பண்ணிவைத்தார். கல்வி கற்றுக்கொள்வதற்காக ஒரு முஸ்லிம் காடுமலைகளெல்லாம் செல்ல வேண்டுமென்றும், சீனதேசத்திற்கும் செல்ல நேரின் செல்லவேண்டுமென்றும் திருவாய்மலர்ந்தருளியிருக்கிறார். "பரம்பரையாக உபயோகமாகும்படி எல்லாவற்றையும் எழுதிவையுங்கள்" என்றும் நபிகள் நாயகமவர்கள் கூறியிருக்கிறார்கள்.

"எந்த இடத்திலிருந்தாலும் சரி ஞானத்தைப்பெறவேண்டியது ஒவ்வொரு முஸ்லிமின் கடமையாகும்" என்றும், "கல்வி கற்கவேண்டியது ஒவ்வொரு முஸ்லிமுடையவும் ஆணயிருந்தாலுஞ்சரி, பெண்ணுயிருந்தாலுஞ்சரி கடமையாகும்" என்றும், "பிறப்பு முதல் இறப்புவரையில் ஒவ்வொரு முஸ்லிமும் கல்வி கற்றுக்கொண்டே இருக்கவேண்டு" மென்றும், "எந்த மார்க்கத்தினராயினும் சரி, அறிவாளியாயிருந்தால் அவரிடமிருந்து கல்வி கற்க முஸ்லிம் பிரயத்தனஞ் செய்யவேண்டும்" என்றும் வாக்கியங்கள் வந்துள்ளன. ஒரு சரித்திர புஸ்தகங்கள் ஆயிக்ரகணக்காக முஸ்லிம்களால் எழுதப்பட்டன. சரித்திரப்புத்தகம் என்பது வால்யம்வரையிலும் எழுதப்பட்டிருக்கின்றது. அப்புத்தகங்களில் இராஜியங்களைப் பற்றியும், தனி நபர்களைப்பற்றியும் விஸ்தாரமாக அரபியர்கள் எழுதிவைத்திருக்கிறார்கள். அகராதிகள் எழுதுவதும், சரித்திரங்கள் எழுதுவதும், வாழ்நாள் குறிப்புகள் எழுதுவதும் உலகத்தினருக்கு முஸ்லிம்கள் தான் முதன்முதலில் காட்டிக்கொடுத்தது.

பூகோள சாஸ்திரங்களை எழுதி வைப்பதிலும் முஸ்லிம்கள் தான் முதன்மையாக நின்று உலகத்தவர்க்கு வழிகாட்டினார்கள். முஸ்லிம்கள் கடல்கள் கடந்து சென்ற நாடுகளில் சுற்றுப்பிரயாணஞ் செய்து ஒவ்வொரு நாட்டினுடையவும் மலைகள், நதிகள், வாசஞ் செய்யும் மனிதர்கள், அந்நாட்டில் காணப்படும் மிருகங்கள், மனுஷ்யர்களின் நடைஉடைபாவனைகள், பழக்க வழக்கங்கள், நாட்டிலுள்ள ஏரிகள் கால்வாய்கள், நீர்ப்பாசன வசதிகள், விளைபொருள்கள் நாட்டில் காணப்படும் உலோகங்கள் எல்லாவற்றையும், ஜப்பான்

முதல் இங்கிலாந்துவரையிலுள்ள எல்லா நாடுகளை பற்றியும் விவரமாக முஸ்லிம்கள் எழுதி வைத்தார்கள். பூகோள சாஸ்திர சம்பந்தமாக அரபி பாஷையில் மிகவும் அருமையான புத்தகங்கள் பல எழுதி வைக்கப்பட்டிருக்கின்றன.

ஐரோப்பிய மார்க்க குருக்களுக்கு கீழ்ப்பட்ட ரசாயன சாஸ்திரிகள் பூமி அகலமானதென்பதாக சொல்லிக் கொண்டிருக்கையில் பூமி உருண்டையென்பதாக முஸ்லிம்கள் ஸ்தாபித்தார்கள். பூமியின் சுற்றளவு 24,000 மைல் என்றும் கணக்கிட்டார்கள்.

முஸ்லிம்கள் உலகத்தாருக்கு வெளிப்படுத்தும்வரையில் "இராஜீய நூல்" என்பது உலகத்தாருக்குத் தெரியவே தெரியாது. "முதல் (கியாபிடல்) தொகையை எப்படி நிர்வகிப்பது" என்ற சாஸ்திரத்தை உலகத்தாருக்கு முதல் முதலில் காட்டியவர்கள் முஸ்லிம்கள்தான். "சமூக வாழ்க்கை" சம்பந்தமான நூல்களையும் முஸ்லிம்கள் தான் உலகத்தாருக்கு முதல் முதலாகக் காண்பித்தது.

டாக்டர்களும் இதர மருந்துக்கடைக்காரர்களும் தங்கள் தொழிலை ஆரம்பிக்கு முன் பரீக்ஷையில் தேறி சனத்துப்பெற வேண்டுமென்பதாக முஸ்லீம்கள்தான் முதல்முதலில் ஏற்பாடு செய்தது. பக்தாதில் முஸ்லீம் ஆட்சிகாலத்தில் 860 டாக்டர்கள் இருந்தார்கள். ஒவ்வொரு பிரிவுவைத்தியத்திற்கென்று தனித்தனி டாக்டர்கள் இருந்தார்கள். இரணவைத்தியம், கண்வைத்தியம், பல் வைத்தியம், ஸ்திரீகளுக்குண்டான வியாதிகள், குழந்தை வியாதிகள் இப்படி ஒவ்வொரு பிரிவுக்கும் தனித்தனி டாக்டர்கள் இருந்தார்கள்.

அஜீரண சக்தியால் ஏற்படும் பல வியாதிகள் மூலிகைகளால் சொஸ்தப்படக்கூடு மென்று முதல் முதலாகக் கண்டுபிடித்தவர்கள் முஸ்லிம்கள்தான். பலநாடுகளுக்கும் சென்று மூலிகைகளின் குணத்தை பரீட்சித்தறிந்து பல புது சிகிட்சைகளை முஸ்லிம்கள் தான் கண்டு பிடித்தார்கள்.

"முஸ்லிம் அவுட்லுக்" (தேன் ஆப்பிரிக்கா.)

---

ஒரு மனிதனின் உயரம் அவனுடைய வலதுபாதத்தின் நீளத்தில் ஆறுமடங்கானதாம்

*　　*　　*　　*

ஒரு அவுன்ஸ் சுத்தமான ரோஜா அத்தர் எடுப்பதற்கு 40,000 ரோஜா புஷ்பங்கள் தேவையாம்.

*　　*　　*　　*

பதினாயிரத்தில் ஐந்து ஸ்திரீகள்தான் நூறு வயதுவரை உயிரோடிருக்கின்றார்களாம்,

# அந்தமான் தீவிற்கு மாப்பிள்ளைக் குடும்பங்கள்

ஜனுப், கே. பி. வி. எஸ். முஹம்மத் மீரா ராவுத்தரின் கடிதம்

இடையக்கோட்டையிலிருந்து சென்னை சட்டசபைமெம்பர் ஜனுப் கே. பி. வி. எஸ். முஹம்மது மீரா ராவுத்தர் எம். எல். ஸி. பின்வருமாறு பத்திரிகைகளுக்கு சென்றமாதம் தெரிவித்திருந்தார்:—அந்தமான் மாப்பிள்ளைக் குடியேற்றத் திட்டத்தை ரத்துசெய்ய வேண்டுமென்றும் சுயேச்சையுள்ள ஆடவர், ஸ்திரீகள், குழந்தைகள் இவர்களைத் திருப்பியழைத்துக் கொண்டுவர வேண்டுமென்றும் இதற்கான நடவடிக்கைகள் கவர்ன்மெண்டார் உடனே எடுத்துக் கொள்ள வேண்டு மென்றும் நான் சட்டசபையில் கொண்டுவந்து நிறைவேற்றிய தீர்மானம் இன்னும் அமுலுக்குக் கொண்டுவரப்படவில்லை என்பதை முஸ்லிம்களுடைய கவனத்திற்குக் கொண்டு வரவிரும்புகிறேன். கவர்ன்மெண்டாருடைய செயலைக் கண்டித்துத் தீர்மானஞ்செய்து 6-மாதங்களாகின்றன. கவர்ன்மெண்டார் வேண்டுமென்றே இம்முக்கியமான விஷயத்தைப்பற்றி கவனியாமல் அசட்டைசெய்து வருகின்றார்கள்.

கவர்ன்மெண்டார் முஸ்லிம்களுள் விசாரணை நடத்தினர்களா என்றும் சென்னைச் சட்ட சபையிலுள்ள உத்தியோகப் பற்றற்ற அங்கத்தினர்களைக்கொண்டோ அன்றி வேறு ஏஜென்ஸி மூலமாகவோ பகிரங்க விசாரணை ஏதேனும் நடத்தப்பட்டிருக்கின்றதா வென்றும் முஸ்லிம்களது அபிப்பிராயம் கவர்ன்மெண்டு திட்டத்திற்குச்சாதகமாக இருக்கின்றதாவென்றும் நான் கவர்ன்மெண்டாரை 23-3-27-ல் கேள்வி கேட்டேன். கனம் கான்பகதூர் உஸ்மான் சாகிப் இதற்கு விடையளிக்கையில் இவ்விஷயம் இன்னும்கவர்ன்மெண்டாருடைய ஆலோசனையிலிருந்து வருகிறதென்றும் ஜில்லா மாஜிஸ்திரேட்டி னிடமிருந்து வந்த ரிப்போர்ட்டுகளிலிருந்து கலகம் நடந்த பிரதேசத்தில் வசிக்கும் மாப்பிள்ளைகள் இத்திட்டத்தை ஆட்சேபிப்பதாக நினைக்கக்காரணமில்லை யென்றும் தெரியவருவதாகவும் ஜில்லா மாஜிஸ்திரேட் முதலியவர்களனுப்பிய தகவல்களை தாங்கள் நம்பியிருப்பதாகவும் கூறினர்.

இதிலிருந்து கவர்ன்மெண்டார் வேண்டுமென்றே பொதுஜன அபிப்பிராயத்தை மதியாமலும் சட்ட சபை அபிப்பிராயத்தை உதா

சினம் செய்யவும் உத்தேசிப்பதாகத் தெளிவாகின்றது. இத்தகைய நிலைமையைப் போக்கவேண்டியதவசியம். இதனால் இம்மாதம் 15-ந் தேதி ஜும்ஆத் தொழுகைக்குப்பிறகு இந்தியாவின் மூலை முடுக்குகளிலுள்ள சகல முஸ்லிம்களும் அங்கங்கு கூடி கவர்ன்மெண்டார் அத்தீர்மானத்தை அமுலுக்குக் கொண்டுவரச் செய்துவரும் தாமதத்தைக் கண்டிப்பதாகவும் குற்றமற்ற மாப்பிள்ளை ஸ்திரீகளையும் குழந்தைகளையும் ஆடவர்களையும் திரும்ப மலையாளத்திற்குக் கொண்டுவந்து விடவேண்டுமென்றும் கலகக் கைதிகளையெல்லாம் அந்தமானிலிருந்து இந்தியச் சிறைக்கூடங்களுக்கு மாற்றி வைக்கவேண்டுமென்றும் தீர்மானங்கள் செய்யும்படிக்கும் சௌகரியமானால் தீர்மான நகல்களை எனக்கு அனுப்பவேண்டுமென்றும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

---

## மாகாண கவர்ன்மெண்டின் அறிக்கை.

### சட்டசபை தீர்மானத்தை அங்கீகரிக்க முடியாது

சென்னை கவர்ன்மெண்டார் 1927ஜூன் 23-ந்தேதியிட்டுஅடியிற் கண்ட உத்தரவை வெளியிட்டிருக்கிறார்கள்:—27-1-27 யன்று நடந்த சென்னை சட்டசபைக் கூட்டத்தில் பின்வரும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அந்தமான் மாப்பிள்ளைக் குடியேற்றத் திட்டத்தை ரத்து செய்யவும் அத்திட்டத்தின்படி அந்தமானுக்கு அழைத்துக்கொண்டு போகப்பட்ட சுயேச்சையுள்ள ஆடவர்களையும் ஸ்திரீகளையும் குழந்தைகளையும் திருப்பிக் கொண்டுவரவும் மலையாளக் கலகக் கைதிகளை இந்தியச் சிறைக்கூடத்திற்கு கொணடுவரவும் உடனே வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டுமென்றும் இச்சபை கவர்ன்மெண்டிற்குச் சிபார்சு செய்கின்றது.

1925-ம் வருஷம் டிசம்பர் மாதம் அந்தமானுக்குப் போய்விட்டு வந்த பிரதிநிதிக் கூட்டத்தாரில் பெரும்பான்மையாக இருந்த அங்கத்தினர்கள் எழுதிய யாதாஸ்தை ஆதாரமாகக்கொண்டே இத்திட்டம் பெரும்பாலும் ஆட்சேபிக்கப்பட்டதென்று சபையில் நடந்த விவாதங்களிலிருந்து தெரியவருகின்றது. இந்த ஆட்சேபனையைக் கவர்ன்மெண்டார் பூரணமாகச் சிந்தனை செய்து பார்த்தார்கள். அவர்கள் ஏற்கெனவே 4-10-26 யன்று ஜெயில் இலாகாதாரால் பிரசுரிக்கப்பட்ட எப். 188-24 என்ற உத்தரவில் இந்திய கவர்ன்மெண்டார் இவ்வாட்சேபங்களை சிந்தித்துப் பார்த்துத் தாங்கள் கொண்ட முடிவைத் தெரிவித்திருக்கின்றார்கள். இத்திட்டம் மாப்பிள்ளைகளுக்கெனப் பிரத்தியேகமாக ஏற்பட்டிருப்பதாகக்கூறப்படுகின்றது. கவர்ன்மெண்

டார் சட்டசபையில் இது ஒரு பொதுவான திட்டமென்றும் மாப்பிள்ளைகளின் குடியேற்றம் இதில் ஒரு அம்சந் தானென்றும் இந்தியா கவர்ன்மெண்டார் விதித்திருக்கும் நிபந்தனைகளைப் பூர்த்திசெய்தால் மாப்பிள்ளைகளல்லாத கைதிகளும் அந்தமானில் குடியேறலா மென்றும் இதுபற்றி விளக்கியிருக்கின்றார்கள். அத்தீவிலுள்ள சுகாதார நிலைமையில் விசேஷ அபிவிருத்தி ஏற்பட்டிருக்கிறதென்றும் சுகாதார வசதிகளை அபிவிருத்தி செய்வதற்காக கவர்ன்மெண்டார் இன்னும் 4½ லக்ஷம் ரூபாய் செலவுசெய்யத் தீர்மானித்திருக்கின்றார்களென்றும் தெரிவிக்கப் பட்டது. இத்திட்டப்படி இஷ்ட முள்ளவர்கள் தான் அந்தமானுக்குப் போகலாமென்றும் மீண்டும் கைதிகளின் க்ஷேம லாபத்தைத்தவிர வேறு எந்த நோக்கத்தைக் கொண்டும் அந்தமானில் அவர்களுடன் சேர்ந்துகொள்ள வசதிகள் செய்து கொடுக்கலாமென்றும் கவர்ன்மெண்டார் விரும்புகின்றார்கள். இத்தீவிலுள்ளவர்களின் ஒழுக்க நிலைமையைக் குறித்து கூறிய விஷயத்தில் கவர்ன்மெண்டார் விசேஷ கவனம் செலுத்தினர். குடியேறிய மாப்பிள்ளைகள் தங்களுக்கென்று ஏற்பட்ட தனித் தனியான கிராமங்களில் வசித்து வருகின்றார்கள் என்றும் மலையாளத்தில் எப்படி வாழ்ந்து வந்தனரோ அப்படியே இங்குள்ள கிராமங்களிலும் அவர்கள் வாழ்ந்து வருகின்றார்கள் என்றும் இங்கு கூடாவொழுக்கங்களை துவும் சற்றுகூட இல்லை என்றும் எடுத்துக்காட்ட விரும்புகிறார்கள். இந்தக் குடியேற்றத் திட்டமானது கைதிகளுக்காக மட்டும் ஏற்பட்டிருக்கவில்லை என்பதையும் தெளிவாக்க விரும்புகின்றனர். அந்தமானில் நிரந்தரமாகக் குடியேறுவதற்காக பஞ்சாப், ஐக்கிய மாகாணம், பர்மா ஆகிய இதர மாகாணங்களிலிருந்து சுயேச்சையுள்ளவர்களும் சென்ற சில காலமாக ஏராளமாக வருவதாக கவர்ன்மெண்டாருக்குத் தெரியவருகின்றது. இத்தியாதி காரணங்களால் கவர்ன்மெண்டார் மேற்கண்ட தீர்மானத்தை அமுலுக்குக் கொண்டு வந்து நிறைவேற்றிவைக்கத் தங்களால் இயலாதிருப்பதைக் குறித்து வருந்துகின்றார்கள்.

---

முதிர்ந்த அறிவியல் ஆராய்ச்சிப்படி ஒரு பாத்திரத் தண்ணீரை பலமான பூதக் கண்ணாடியால் பார்த்தால், உலகத்தின் மக்களைக் காட்டிலும் அதிகமான பூச்சிகள் இருக்கிறதென்பது தெரியுமென அறிவியல் சாஸ்திரி கூறுகிறார்.

# இஸ்லாம் வாளினுல் பரப்பப்படவில்லை.

லாகூரில் ஆங்கில பாஷையில் பிரசுரமாகும் தினசரிப் பத்திரிகையாகிய "முஸ்லிம் அவுட்லுக்" சில காலத்திற்குமுன் தனது தலையங்கத்தில் எழுதியிருந்ததன் முக்கிய பாகம் பின்வருமாறு:—

மூர்க்கத்தனமான கொள்கையுடைய கிறிஸ்தவப் பிரசாரகர்கள் கூட மறுக்கமுடியாத உண்மைகளை மறுத்துக்கூற முடியாமையினுல் சிற்சில சமயங்களில் இஸ்லாம் மார்க்கத்தைப் பாராட்டிப் பேசுவதை நோக்க மிகவும் ருசிகரமாக இருக்கின்றது.

"கான்ஸ்டான்டிநோபிலில் நாற்பது வருஷம்" என்னும் புத்தகத்திற்கும் வேறு சில புத்தகங்களுக்கும் ஆசிரியரான ஸர் எட்வின் பியர்ஸ் துருக்கியர்கள் காட்டிய மரியாதையையும், உபசரணையையும் நிந்தித்து கைம்மாறு செய்தவர். இஸ்லாமினுடையவும் முஸ்லிம்களுடையவும் நண்பரல்ல. "கொடுஞ்செயல்கள்" என்ற பிரசாரத்தை அவர் ஆரம்பஞ் செய்து பிரக்யாதிபடைய முயன்றதில் ருஷ்ய துருக்கிய சண்டையை மூட்டிவைத்தார். அவருடைய புத்தங்களில் எழுதப்பட்டிருக்கும் விஷயங்கள் யாவும் துருக்கியை ஒழிக்க அவர் கருத்துக் கொண்டிருப்பதையும், கிறிஸ்தவ மார்க்கத்திற்காக சண்டைக்குச் செல்லுபவர் என்பதையும் ருசுப்படுத்துகின்றன. ஸர். எட்வின் பியர்ஸ் கான்ஸ்டான்டிநோபிலில் நெடுநாள் வாசஞ் செய்திருக்கிருர். அவர் நெடுநாள் அந்த வாசஞ்செய்த காலத்தில்பெயர் போன சதியாலோசனைக்காரரும், கொடுங்கோன்மையை கட்டிவிடுபவருமான மிஸ்டர் பிட்ஸ்மாரீசுடன்கூட இருந்து கையுடன் கைகோர்த்து வேலைசெய்தார். மிஸ்டர் பிட்ஸ்மாரீஸ் கான்ஸ்டான்டிநோபிலிலுள்ள பிரிட்டிஷ் ஸ்தானிகர் காரியாலயத்தில் பிரதம உத்தியோகஸ்தர். மிஸ்டர் பிட்ஸ்மாரீஸின் சதியாலோசனைகள், மிகவும் பொறுமையுள்ள துருக்கியர்களால்கூடசகிக்கமுடியாமற்போய்விட்டன. இக்காரணம்பற்றி கமாலியர்கள் (கமால் பாஷாவின் கட்சியைச் சேர்ந்தவர்கள்) அதிகாரத்திற்கு வந்தவுடன் இவரைக் கான்ஸ்டான்டிநோபிலிலிருந்து விலக்க வேண்டுமென வற்புறுத்தினுர்கள். சுதந்தர துருக்கியின் எண்ணங்களை நிலைநிறுத்துவதில் இவர்கள் வெற்றி பெற்றுர்கள்

துவேஷ எண்ணத்துடன்கூடிய ஸர் எட்வின் பியர்ஸ்கூட தம்முடைய புத்தகங்களில் சிற்சில விடங்களில் துருக்கியர்களுடையவும் இஸ்லாமினுடையவும் தாராளக் கொள்கைகளை ஒப்புக்கொண்டு எழுதியிருக்கிறார்.

இரத்தம் சிந்தப்படாமல் சாத்வீக முறையில் ஏற்பட்ட புரட்சியினால் 1908-ம் வருஷம் துருக்கியர்கள் அதிகாரத்திற்கு வந்ததைப் பற்றி தம்முடைய புத்தகத்தில் ஸர் எட்வின் பியர்ஸ் எழுதுகையில் அவர் பின்வருமாறு கூறுகிறார்:—

"1908-ம் வருஷத்திய இலையுதிர்காலத்தில ஷேகுல் இஸ்லாம் அவர்களுடையவும், முஸ்லிம் தலைவர்களுடையவும் மனப்பான்மையை அறியவேண்டுமென நான் அதிக ஆவல்கொண்டிருந்தேன். அவர்களுடைய அபிப்பிராயம் இன்னதென்பதை நான் நேரே அறிய விரும்பினேன். நான் ஸபாவுத்தீனைப் பேட்டி கண்டு பேசவேண்டுமென விரும்பினேன். பேட்டிகண்டு பேசவும் எனக்கு அனுமதி கொடுக்கப்பட்டது. பேட்டிகண்டு பேசிய இச்சம்பவத்தை நான் என்றைக்கும் மறக்கமுடியாது. மேன்மைதங்கிய ஷெய்குல் இஸ்லாமவர்கள் வெண்மையான உடைகளை யணிந்து உட்கார்ந்திருந்தார். அவரைச்சுற்றி துருக்கிய முஸ்லிம்களில் மிகவும் செல்வாக்கும், மேன்மையும் பெற்றவர்கள் நாலைந்துபேர் உட்கார்ந்திருந்தார்கள். நான் அவருடன் சம்பாஷணை செய்துகொண்டிருக்கையில் 'கிறிஸ்தவர்களுக்கு சுதந்தரமும் சுயேச்சையும் கொடுப்பதை இஸ்லாம் மார்க்கம் ஆதரிக்கின்றது' என்று அவர் கூறியிருப்பதை நான் அவருக்கு ஞாபகப்படுத்தினேன். அவர் இவ்விஷயத்தை ஊர்ஜிதப்படுத்தியே பதில் கூறினார்.

"ஆதிகாலத்தில் இஸ்லாம் மார்க்கம் பரப்பப்பட்டதன் சரித்திரத்தை நீங்கள் மிக்க ஆழ்ந்து படித்திருக்கிறீர்களென்று நான் அறிகிறேன். நபிகள் நாயகமவர்களுடைய காலத்திலும் அவருக்கு பிற்காலத்திலும் இஸ்லாம் மார்க்கம் பரவச் செய்யப்பட்டதன் சம்பந்தமாக என்னுடைய அபிப்பிராயம் என்னவென்று அவர் கேட்டார். 'நபிகள் நாயகமவர்களின் காலத்திற்குப்பின் முதல் நூற்றாண்டுதான் இஸ்லாமிய படையெடுப்பில் மிகவும் பிரதான நூற்றாண்டு என்பதை நான் பூர்ணமாக தெரிந்துக்கொண்டிருக்கிறேன்' என்பதாக நான் பதில் கூறினேன். அதற்குக் காரணம் என்னவென்று அவர் என்னைக் கேட்டார். 'ஷெய்குல் இஸ்லாம் தங்களுடைய அபிப்பிராயத்தை முதலில்தெரிவிக்கவேண்டுமென' நான் சொன்னேன். எவ்விதத் தடையும் செய்யாமல் அவர் பதில் கூறினார்.

முஸ்லிம்களைப் போலவே கிறிஸ்தவர்களும் சுதந்திரமும் சுயேச்சையும் அனுபவிக்கலாமென ஆதிகாலத்து முஸ்லிம்கள் கூறினதுதான் காரணமென்று அவர் சொன்னார்.

நபிகள் நாயகமவர்களுக்குப் பின் ஆட்சிக்கு வந்தவர்களிடம் அனேக கூட்டத்தினர் தங்களுக்கும் சமபாத்தியங்களையும் உரிமைகளையும் பெறுவதற்காகவென்று தாங்களாகவே ஒப்படைந்தார்கள். இன்னும் பின்னால் போய், முதல் நூற்றாண்டின் பழக்க வழக்கங்களையும், போதனைகளையும் ஆராய்வோமாகில் சமத்துவமும், சுதந்தரமும் போதிக்கப்பட்டு வந்ததை நாம் அறிகிறோம். இச்சம்பவம் மிகவும் முக்கியமானது. நாட்டு ஜனங்களுக்கு மட்டுமே யல்லாமல் துருக்கியில் இஸ்லாமியக் கொள்கை பூர்ணமாக நிறைந்துள்ள இடத்திலும் மார்க்க விஷயங்களில் சமத்துவம் பரவப்பட்டிருப்பதைக் காட்டியது மேலே காட்டப்பட்டிருக்கிற கொள்கைக்கு மாறாக இதுவரையில் ஷேக் அவர்களாவது அல்லது அவர்களைச் சுற்றியிருப்பவர்கள் எவராவது ஏதேனும் செய்திருப்பதாக எனக்குத் தெரியவேயில்லை.''

ஆரம்பத்தில் இஸ்லாம் மாாக்கம் வாளினால் பரப்பப்பட்டதென்று கிறிஸ்தவ பிரசாரகர்கள் கூறும் விஷயங்களைக் காட்டிலும், இஸ்லாமிய சரித்திரத்தை ஆராய்ச்சி செய்துள்ள இவர் கூறும் விஷயங்கள் நியாயமானவைகளாகவும், நம்பத்தக்கவைகளாகவும் இருக்கின்றன.

துருக்கியைப்பற்றின மட்டில் கவனிப்போமாயின் கிரேக்கியர்களிடமிருந்தும், ருஷ்ய கிறிஸ்தவர்களிடமிருந்தும் காப்பாற்றும்படியாக அடைக்கலம் புகுந்த கிறிஸ்தவர்கள் துருக்கியில் குடியேறியிருப்பது யாவரும் அறிந்த விஷயம். ஸ்பெயினிலும், ஆஸ்டிரியாவிலும் கிறிஸ்தவர்களின் கொடூர நடத்தையைச் சகிக்க முடியாமல் தங்களைக் காப்பாற்றும்படியாக அமீருல் மூமினீன் இடம் அடைக்கலம் புகுந்து யூதர்கள் குடியேறியிருப்பதும் யாவரும் அறிந்த விஷயம்.

இந்த ஜன்மிகளும், ராயாக்களும் துருக்கியில் இருப்பதும் அவர்கள் செல்வாக்கானவும் அந்தஸ்தானவும் நிலைமையில் இருப்பதும் துருக்கியர்கள் வாயால்மட்டும் தாராளக் கொள்கைகளைக் கூறுபவர்களல்ல. செயலிலும், உண்மையானவும் தாராளமாக விட்டுக்கொடுக்கும் முஸ்லிம்கள் என்பது ருசுவாகின்றது.

இந்தியாவைப்பற்றி கவனிக்குமிடத்து முஸ்லிம்கள் ஆயிரக்கணக்காக இந்தியாவில் அரசாட்சி செய்தபிறகும் இந்துக்கள் கோடிக்கணக்காக இந்தியாவில் இருப்பதும், புராதன ஹிந்துக் கோவில்கள் பல இந்தியாவில் இருப்பதும் கிறிஸ்தவப்பாதிரிகளும், சங்கதன்காரர்

களும் கூறுவதை பலமாக மறுத்துக் கூற ஆதாரமாக நிற்கின்றன. யாராவது ஒருவர் இஸ்லாமிய ஆதி சரித்திரத்தைச் சற்று ஊன்றிப் படிப்பாரேயானுல் முஸ்லிம்களல்லாதார் மிகவும் ஆச்சரியகரமான விஷயங்களை அறிந்துகொள்ளுவார்கள்: ஏனெனில் முஸ்லிமல்லாதார் கொள்கைகளுக்கும், போதனைகளுக்கும் மாறுன விஷயங்களை அவர்கள் அறிந்துகொள்ளுவார்கள்.

காசியில் அவுரங்கசீப் ஒரு மஸ்ஜிதைக் கட்டியதில் அவர் தம்முடைய உரிமையை—அவர் தம்முடைய கடமையை—த்தான் நிறைவேற்றி வைத்தார். அந்நகரத்தில் முஸ்லிம்கள் தொழுவதற்கு ஒரு இடம் வேண்டுமேயென்பதற்காகவே அவர் அந்த மஸ்ஜிதைக் கட்டி வைத்து முஸ்லிம் ஒருவர் செய்யவேண்டிய கடமையை அவர் நிறைவேற்றி வைத்தார். இந்த மஸ்ஜிதைக் கட்டிவைத்து காசியின் அழகை அதிகப்படுத்தினுர். அவர் காசியில் எந்தக் கோவிலையும் இடித்து நாசஞ் செய்யவில்லை.

ஜோராஷ்டிர மதம் (பாரஸிகர்கள் மதம்) இன்றைக்கு உலகிவிருந்து மறைந்து போயிருக்கிறது. இந்தியாவிலிருக்கும் பாரசீகர்கள், ஈரானில் கொடுங்கோன்மையைத் தாங்க முடியாமல் இந்தியாவிற்கு ஓடிவந்த பாரசீகர்களின் சந்ததியார்களென்பதாகச் சொல்லப்பட்டு வந்தது. ஆனுல் பம்பாயிலுள்ள ஈரான் லீக்சபையார் உண்மையைப் பிரசுரஞ் செய்திருக்கிறுர்கள். ஜோராஷ்டிரர்களின் தொகை மிகவும் குறைந்துபோன சமயத்தில் ஜோராஷ்டிரர்களுக்குள் ஏற்பட்ட அற்பச் சண்டையினுல் இவர்கள் (இந்தியாவில் இப்பொழுது இருக்கும் பாரசீகர்களின் மூதாதையோர்) இந்தியாவிற்கு வந்ததாக ரூபிக்கப்பட்டிருக்கின்றது. ஈரானில் முஸ்லிம்கள் ஜோராஷ்டியர்களை பலாத்காரஞ் செய்து இஸ்லாம் மதத்தில் சேர்த்ததால் ஜோராஷ்டியர்கள் தொகை குறைந்துபோகவில்லை. முஸ்லிம்களின் பொருமையினுலும், முஸ்லிம்களின் தாராளக் கொள்கையினுலுமே ஜோராஷ்டியர்கள் இஸ்லாம் மார்க்கத்தை தழுவினுர்கள்.

---

சமுத்திர அலைகளின்மேல் தவழ்ந்து செல்லக்கூடிய ஒரு புது மாதிரி கடல் விமானத்தை ஜார்ஜஸ்டி காசங்கோ என்ற ரஷிய என்ஜினியர் செய்து முடித்திருக்கிறுர். அது எழுபது மைல் வேகத்தில் செல்லக்கூடுமாம்.

# தமிழரும் மூட வழக்கங்களும்.

ஸ்ரீ. பு. செல்வராஜன்

"அமைச்சர், தமிழ்நாடு இளைஞர் நல்வழிமன்றம்" சென்னை.

நந்தமிழர் ஆரியமத நாகரிகத்தை யேனும் தூய தமிழர்களின் நாகரிகத்தை யேனும் கைக் கொள்ளுவது கிடையாது. ஆரியர்களின் வழக்க ஒழுக்கங்களையாவது அல்லது தமிழர்களின் வழக்க ஒழுக்கங்களையாவது பின் பற்றுவதும் கிடையாது. இரண்டையும் ஒன்றாகக் குழப்பி தம் வாழ்க்கையையே மூட எண்ணங்களிலும், செய்கைகளிலும் செலுத்தி பாழ் படுகின்றனர்.

முன் கட்டுரையில் கடவுளை வழிபடும் முறையில் உள்ள மூடத் தனத்தை விவரித்தோம். தற்போது பிறவற்றில் நாம் கொண்டுள்ள மூட வழக்கங்களை யாராயலாம்.

## சகுனம் பார்த்தல்.

ஆண்களாவது பெண்களாவது எதாவதொரு காரியத்தையுத் தேசித்து வெளியில் புறப்படுவதற்கு முன் சகுனம் பார்ப்பது வழக்கமெனும் விஷயம் அநேகமாய் தமிழர்கள் அறிந்திருப்ப தொன்றே. சகுனம் பார்த்து நற்சகுனமாயின் வெளியிற் புறப்படுவதனால் எத்தகைய இடையூறுகளும் நேரிடாதென்பது ஒரு சிலரின் உள்ளக் கிடக்கை. ஒரு மணி நேரமாயினும் நற்சகுன மில்லாவிடில் அத்தகையவர்கள் வெளியிற் செல்லுவதே கிடையாது. அவ்விதம் நற்சகுனமாயின பின் புறப்பட்டு எதாவது இடையூறுகள் நேர்ந்துவிட்டால் அது தலைவிதி என்று நம்பப்படுகிறது. துற்சகுனங்கள் தோன்றிவிட்டாலோ தாம் எடுத்த காரியம் எத்தகையதாயினும் அதை முடிப்பதேயில்லை. என்ன பரிதாபம்! சகுனம் சகுனம் எனக் கூறிக்கொண்டு தாம் போகவேண்டிய இடங்களுக்கோ அல்லது செய்யவேண்டிய காரியங்களையோ ஒழுங்காய் முடிப்பதில்லை. மேல் நாட்டார் ஒவ்வொரு நிமிஷத்தையும் தங்கத்துக்குச் சமானமாக நினைத்து ஒவ்வொரு நிமிஷமும் விடாமுயற்சியுடன் வேலை செய்து செல்வத்திலும் அறிவிலும் முன்னேறிச் சென்றுகொண்டிருக்கின்றனர் என்பதை ஒவ்வொருவரும் கவனித்துப் பார்க்கவேண்டும். அவர்

கள் சகுனங்களைப் பார்த்துக்கொண்டுத் தம் காரியங்களை வீணுகக் கெடுத்துக்கொண்டு கஷ்டமும் நஷ்டமும் அடைவதில்லையென்பதை நோக்கவேண்டும். அதற்கு நேர்மாற்றமாக நம்மிந்தியர் அதிலும் முக்கியமாகத் தமிழர் சோம்பலெனும் நோய் வாய்ப்பட்டு எடுத்த வற்றிற்கெல்லாம் சகுனமென்னும் பேய்க்கடிமையாகி கீழ்நோக்கிச் சென்றுகொண்டே யிருக்கின்றனர். சகுனத்தின் பலன் என்ன வாகிறது என்பதைக் கவனியுங்கள். நம்முடைய அரிய நேரத்தை வீணுக்கி நம் அறிவை மங்கச் செய்கிறது. சகுனம் பார்த்தல் உண்மையிலேயே அர்த்தமற்றதா யிருப்பினும் பாமரர்கள் அதனுல் உண்மையில் துன்பத்தையும் அடைகின்றனர். துற்சகுனம் தோன்றி விட்டால் ஒருநாள் முழுவதும் அதையே நினைத்துக்கொண்டு ஒருவன் சதா வருந்தி வருந்தி மனம் உடைந்துபோகிருன். அதுவே துற் சகுனத்தினுல் அவனடையும் பலன். சிலர் சகுனம் என்பது நமக்கு வரப்போகும் துன்பமோ, இன்பமோ கடவுளால் முன்னதாக மனிதர் களின் மூலமாக நமக்கு அனுப்பப்படும் ஓர்வித அறிக்கை என் கின்றனர்.

கடவுள் நமக்குத் தினந்தோறும் துன்பத்தையோ இன்பத்தை யோ கொடுப்பாரென்றும், அதை முன்னடியே தெரிவித்துக்கொண்டு உட்கார்ந்திருப்பாரென்றும் கூறுவது விந்தையினும் விந்தையே. நம் தவறுகளினுல் நாம் துன்பப்படுவதை, எல்லாம்வல்ல முழுமுதற் பொருளின் செயலென்றும், அவர் அதை விதவைகளின் மூலமும் ஒற் றைப் பிராமணனின் மூலமும், கட்டை, எண்ணெய், வண்ணன் முத லியவர்களின் மூலமும் தெரிவித்துக்கொண்டிருக்கிருரெனவும் நினைப் பது பெருந் தவறு. கடவுள் நமக்குத்தான் இவைகளை அறிவித்துக் கொண்டிருக்கிருரே யன்றி மற்றமதஸ்தர்களுக்குத் தெரிவிப்பதில்லை போலும். அவர்களெல்லாரும் கடவுளில்லாதவர்களல்லவென்பது ஞாபகத்திலிருக்கட்டும், ஒரு வேளை அவர்களின் கடவுள் சோம்பே றிக் கடவுள்கள் போலும். அதனுல்தான் அவர்கள் சகுனம் பார்ப்ப தில்லையென நினைக்கின்றேன்.

அன்பர்களே!

மேலே கூறிய படி அவர்களின் கடவுள் சோம்பேறியுமல்லர். அவர்களும் நாஸ்திகருமல்லர். ஆனுல், அவர்கள் நேரத்தின் அருமை யை நன்குணர்ந்திருக்கின்றனர். அவர்கள் சோம்பேறிகளல்ல. கட வுளை சரியான முறையில் வழிபடுகின்றனர். பொன்போன்ற நேரத்தை வீணில் கழித்துக் கொண்டு திண்ணை வேதாந்தம் பேசும் நம்மைப்

பார்த்து ஏளனம் செய்து, தாங்கள் முன்னேறும் வழியிலேயே கண்ணேக்கமா யிருக்கின்றனர். அதற்கு மாற்றமாக நாம் எத்தகைய உறக்கத்திலிருக்கிறேம் என்பதை அறியவேண்டும்.

## இராகு காலம்.

ஒரு சிலர் ஏதாவது ஒரு சிறு காரியத்தைத் ஆரம்பிக்கு முன் இராகுகாலம், குளிகை காலம், யமகண்டம், முதலியவைகளைப் பார்த்த பிறகே ஆரம்பிக்கின்றனர். இராகு காலம் போன்றவைகளில் ஒரு வேலை செய்ய ஆரம்பித்தால் அவ்வேலை சரிவர முடியாமல் பின்னப்படுமென் றியம்புகின்றனர். இது வெறுங் கூற்றே. அநேக காரியங்களை நாம் இராகு காலத்தில் ஆரம்பித்து இனிதே முடித்திருக்கின்றேம். இதேபோல் அநேகர் செய்திருப்பார்கள். ஆகையால், இராகு காலம் உபயோகமற்றதா யிருக்கவேண்டும். அல்லது இராகு காலத்தின் ஏகாதிபத்தியம் சந்திரனிடத்தில்தான் நடக்குமேயல்லாது நம்மிடம் முடியாதென்பதை அது உணர்ந்து கொண்டிருக்க வேண்டும். அல்லது நாம் அதை மதியாமல் ஆரம்பிக்கும் வேலைகளைக் கண்டவுடன் அதற்கு பயமேற்பட்டிருக்கவேண்டும். இராகு காலங்களில், கடவுளையும் வணங்கக் கூடாது திருநாள்களில் சாப்பாடு முதலியவையும் படைக்கக் கூடாது என்று கூறின் மற்றவைகளைப் பற்றிக் கூறவும் வேண்டுமோ? கடவுளும் இராகு காலத்திற்குப் பயப்பட வேண்டுமென இச்செய்கைகளிலிருந்து தெரியவருகிறது. இதுபெரும் பேதமையன்றே? ஆங்கிலேயர்களுக்கும், கிறிஸ்தவருக்கும், முஸ்லிம்களுக்கும் இராகு காலம் இல்லை. ஆனல் நமக்கு மாத்திரம் இவையெல்லாமும் இவைபோன்றபலவும் இருக்கின்றதோடு நம்மை பாதாளத்திற்கு அழுத்திக் கொண்டே போய்க்கொண்டு மிருக்கின்றன.

சிலர் ஞாயிற்றுக் கிழமைகளில் பிரயாணஞ் செய்தல், வெள்ளிக் கிழமைகளில் பண்டங்களைக் கொடுத்தல், வாங்கல், மூன்று பேர் சேர்ந்து ஒரு காரியத்தை முடிக்கப்போதல், இரவில் சுண்ணும்பின் பேரைச் சொல்லல், கொடுத்தல், வாங்கல் போன்ற காரியங்களைச் செய்வதுந் தவறெனக் கூறுகின்றனர்: இவைகளெல்லாம் அர்த்த மற்றவைகளென்றே அறிவாளிகள் கொள்ளுவார்கள்.

## கனவு.

இவைகளெல்லாவற்றையும் விட வேடிக்கையானது கனவுகளின் பலனேயாம். இக்கனவின் பலன்களினலே சிற்சில இடங்களில் குட்டித் தெய்வங்களுக்கு குழந்தை பலிகள் (வாயில்லா மிருகங்களின்

குட்டிகள்) அநேகமாக நடைபெறுகின்றன. வீட்டிலிருக்கும் கல்வியறிவில்லாத சில கிழவிகள் தாம் மனதில் எண்ணியதேதாவதைக் கனவில்கண்டால் அதைத் தாம் கனவில் மங்கிலிய ஸ்திரீயைக் கண்டதாகவும், அது தங்கள் வீட்டுத்தெய்வம் ஏதாவது ஒன்றைக் கோரியே கனவில் மங்கிலிய ஸ்திரீயைப்போன்று வருவதெனவும் வியாக்கியானம் செய்து வீட்டிலுள்ளோரை இணங்காவிட்டாலும் எப்படியாவது இணங்கச்செய்து அவைகளின் (வீட்டு தெய்வங்களின்) திருப்திக்காக படையல் போன்றவைகளைப் போட்டு கோழி, காடை முதலியவைகளை பலிகொடுக்கச் செய்கின்றனர். இன்னும் இவைபோன்ற அர்த்தமற்ற முரண்பாடான அக்கிரம காரியங்கள் அனந்தம் நடைபெறுகின்றன. அவைகளை எழுதுவதற்குத்தான் இடமும் காலமும் இல்லை.

## சோதிடங் கேட்டல்.

எடுத்தவற்றிற்கெல்லாம் சோதிடங் கேட்கு மியல்பினரும் இல்லாமற் போகவில்லை. ஜோதிட சாஸ்திரம் உண்மையேயாயினும், ஜோதிடங் கேட்டல் தவறென்பதே நம்முடைய கொள்கை. ஏனெனில் ஒரு மனிதன் ஜோதிடங் கேட்பதினால் பலவித இடுக்கண்களுக்கும் சிற்சில சமயங்களில் தற்கொலைகளுக்கும் உள்ளாக நேரிடுகிறது. ஒருவன் தனக்கு 5 வருடத்தில் 10 ஆயிரம் ரூபாய் கிடைக்குமென ஜோசியனின் மூலம் அறிந்திருப்பானுயின், அவன் அதை உண்மையே என்று நம்பி வீண் செலவுகள் செய்து கடனுக்குள்ளாகி கடைசியில் பதினுயிரத்தையும் காணுமல் வாங்கியகடனைச் செலுத்த வகையுமறியாமல் மானமுந்தாங்க மாட்டாமல் தற்கொலை செய்து கொள்ளத் துணிந்துவிடுகின்றனன். சிலருக்கு இன்னும் இரண்டு மாதத்தில் இறந்து விடுவரென ஒரு ஜோசியன் கூறிவிட்டால் அதையே நினைத்து நினைத்து வருந்தித்தாமாகவே தம் மரணத்திற்கு காரணபூதராகின்ற சம்பவங்களும் நேரிடுவதுண்டு. இவைகளை எல்லாம் நோக்குமிடத்து, மேற்கண்ட அநாவசியமான வழிகளைக் கொண்டு போய்க் கடலிலெறிந்துவிட்டு அவசியமான அறிவிற்கேற்ற செய்கைகளைக் கடைப்பிடித்தலே அறிஞர்க்கழகு என்பது புலப்படுகின்றதல்லவா? இறைவன் நமக்களித்துள்ள நாட்களில் எது கெட்ட நாள் எது நல்ல நாள்? எல்லாம் இனிய நாட்களே என்னும் கொள்கையோடிருப்பவர்களின் முற்போக்கைக் கவனியுங்கள். அத்தகைய காரியங்களில் நம் பெண் மணிகள் பிரயோகிக்கும் 144-வது பிரிவை (தடை உத்தரவை) அவசியம் நாம் எதிர்த்தே தீரவேண்டுமென்பதையும் ஞாபகத்திலிருத்திக் கொண்டு நல்வழிநாட முற்படுங்கள்.

## திருஷ்டி.

தேக அசௌக்கியத்தினலோ, அதிக உழைப்பினலே, பல வீனத்தினலே கை கால்கள் அசதியேற் படுவதையும், அஜீரணத்தினல் சாப்பாடு உட்கொள்ளாமற் போனலும், தேகம் இளைத்து மெலிந்து போய்க்கொண்டிருந்தாலும் உண்மை நிலையை அறியாது அவைகள் பிறரின் கெட்ட திருஷ்டியினல் ஏற்படுகிற கோளாறுகளென நினைத்து உப்பு, கடுகு மிளகாய், உரோமம் முதலிய வற்றை எடுத்து குறித்த ஆணையோ, பெண்ணையோ மூன்று தரமாகிலும் ஐந்து தரமாகிலும் சுற்றி அடுப்பி லெறிந்து துர் நாற்றத்தையுண்டு பண்ணுகின்றனர்.

இன்னும் எண்ணெய்த்தினுசுகளைக் கொண்டு வந்து நன்ருகக் காய்ச்சி அதில் ஊற்று நீரை உமிழச் செய்கிருர்கள். கற்பூரத்தையும் தடப்பங்களையும் கொளுத்துகின்றனர். வீதிகளின் முனைகளில் திருஷ்டி தோஷத்தைப் போக்குவதற்காக ஒஞன் முதலியவைகளைக் கொண்டுவந்து அறுத்து அவைகளைக் குழியிலிட்டுப் புதைத்துப் பொங்கலிடுவது முண்டு. தேங்காய்ச் சிரட்டைக் கொளுத்தி வீதிகளில் வைத்து விகாரப்படுத்துவாரு முண்டு. சிலர் வீதிகளின் முனைகளில் வரட்டிகளில் கோடுகள் போட்டு அதில் மாவால் செய்த பயங்கரமான உருவங்களை வைத்து இரத்தங்கலந்த சோறுகளைக் கொட்டி அசுத்தப்படுத்துகின்றனர். இவ்வா றெல்லாம் செய்வதனல் அத்திருஷ்டி தோஷம் போய்விடுகிறதென அவர்கள் நினைக்கின்றனர்.

சகோதரர்களே! சகோதரிகளே!

நீங்கள் இம்மாதிரி அர்த்தமில்லாது செய்துவரும் அனுவசியமான செய்கைகளினின்றும் என்று சீர்திருந்தப் போகின்றீர்கள்? உங்களின் சந்ததிகளை நீங்கள் எவ்வாறு முன்னுக்குக் கொண்டுவரப் போகிறீர்கள்? மக்களின் உண்மை நிலைமையைச் சரிவர உணரும் நாள் எந்நாளோ? மேனுட்டுப் பெண்மணிகள் இத்தகைய மூடக் கொள்கைகளில் நம்பிக்கை வைக்காததனலேயே வெகு துரிதமாக முன்னேற்ற மடைகின்றனர். அவர்களின் முன்னேற்றத்திற்குக் காரணம் யாது எனச்சிந்தியுங்கள்.

முதலாவது, அவர்கள் மூடவழக்கங்களுக்கு அடிமைகளாயில்லை. இரண்டாவது அரசியலிலும் சுதந்தரம் பெற்றவர்கள். மூன்ருவதாக தேகதத்துவ சாஸ்திரங்களையும் உடற்கூற்று சாஸ்திரங்களையும் கற்றுணர்ந்து தேகத்தில் ஏற்படும் குற்றங்களை நீக்கத்தெரிந்துள்ளவர்கள். அதனலேயே அவர்கள் துரிதமாய் முன்னேறுகின்ற

னர். இனி சகோதர சகோதரிகள் வழக்கம் வழக்கமெனும் பேயினின் றும், அர்த்த மற்ற செய்கைகளினின் றும் முதலில் விடுதலை பெற்ருல் தான் சுலபமாய் அரசியலிலும் விடுதலை பெறும் நிலைமை நாமடை வோம். நமக்கு அத்தியாவசியமானது சுதந்தரவாழ்வே யாகையால் சகோதர சகோதரிக ளொவ்வொருவரும் அர்த்தமற்ற செய்கை களைத் தொலைத்துவிட்டு அறிவாளிகளாய் சுதந்தரப் போருக்கு முனைந்து நிற்பார்களென்று நம்புகிருேம். ஆண்டவன் அனைவரை யும் நேர்மையான பாதையில் நடத்துவாஞக.

## தலயாத்திரை

நந்தமிழர் காசி யாத்திரை யென்றும் இராமேஸ்வர யாத்திரை யென்றும் போதல் உண்டு. இந்த யாத்திரைகள் ஏற்படுத்தப்பட்ட காலத்தில் அது நற்பயனளிக்கத்தக்கதாயும் தேகத்திற்கும் மன திற்கும் புதிய புதிய உற்சாகத்தை யளிப்பதாயு மிருந்திருக்கலாம். இன்னு மியற்கைக் கல்வியே சாலச் சிறந்த தாகலான், அக்காலத்து மூதறிவாளர்கள் கற்ற கல்வியை விருத்திசெய்து கொள்வதற்கும் தேக சுகத்திற்கும் தலயாத்திரை ஏற்றதென நினைத்திருந்திருக்க லாம். அக்காலத்தில் இக்காலத்தைப்போன்று ரயில், மோட்டார், போன்ற வசதிகளில்லாமையால் யாத்திரிகர்கள் நடந்து போகவே நேர்ந்தது. ஆகையால் வழியில் காட்டுமிருகங்களின் பயமும் திரு டர்களின் அக்கிரமமும் நிறைந்திருந்ததெனினும் காடுகளில் நிறைந் துள்ள அரிய மூலிகைகளின் ஸ்பரிசமும் இனிய காற்றும் இவர்களை ஆரோக்கியவான்களாகச் செய்து கொண்டிருந்தது. ஆயின், இக் காலத்தில் ஆங்காங்கு ரயில்களும் மோட்டார்களும் நிறைந்து அவைகளின் மூலம் யாத்திரை செய்ய நேருவதால் யாது பிரயோசன முள்ளதென்பது நமக்கு விளங்கவில்லை. உண்மை பக்தியுடன் கடவுளை தரிசிப்பதற்காக வெனக் காரணம் கூறிஞல் அவ்வளவு தூரம்சென்று ஆண்டவனை வணங்குவதைவிட தாமிருக்கு மிடத்திலிருந்தே கட வுளைத் தியானித்தல் மேலான முறை யல்லவா என்று நாம் கேட் கின்ருேம்? அங்கு செல்லும் யாத்திரிகர்களில் ஆங்காங்கு மோசங் களுக்கும் ஏமாற்றுதல்களுக்கும் இலக்காகி அவமானப்படுபவர்கள் எத்தனையோபேருளர். இராமர் பிறந்ததாகக் கூறப்படும் புண்ணிய அயோத்தியில் (யாத்திரிகர்களிடை அங்குள்ளவர்கள் நடந்துகொள் ளும் முறை விவரிக்கின் துக்கம் பெருகுமாறு அவ்வளவு மோசமான தாக இருக்கிறது.) சில துஷ்டர்கள் அங்குசெல்பவர்களை ஏமாற்றிப் பலவழிகளில் பணம்பறித்து அங்கிருக்க மனமில்லாமற் போகும்படி

செய்கின்றனர். இப்படியிருக்க இத்தகைய காலத்தில் நம் சகோதர சகோதரிகள் தலையிலும் கையிலும் மூட்டை முடிச்சுகளைச் சுமந்து கொண்டு ஆங்காங்கு இத்தகைய அவகேட்டுக்கு ஆளாகி வருதல் எவ்வளவு பரிதாபகரமானது.

---

## நிஜாம் பீரார் இழந்த விதம்

நிஜாம் நஸருத் தௌலா என்பவர், ஹைதராபாத் உதவிப்படை என்னும் சேனையின் பொருட்டுச் செலுத்தவேண்டியிருந்த தொகைக்காக அவர் தமது ராஜ்பத்தின் செழிப்பான பாகத்தைப் பலாத்காரத்தின் மீது இழந்துவிட நேர்ந்தபோது அவர் உணர்ந்த கோபமும் இகழ்வும், அதிக மனத்தாங்கலுடன் கூறிய வார்த்தைகளும் அந்த ராஜ்யத்தின் சரித்திரத்தில் மிகத்தெளிவாக விவரிக்கப்பட்டிருக்கின்றன. "நிஜாமும் அவரது பிரிட்டிஷ் ராஜ்ப சம்பந்தமும்" என்று மேஜர் பிரிக்ஸ் என்பவர் எழுதியுள்ள தம்முடைய புஸ்தகத்தில் எவ்வாறு நம்பிக்கையான நேச ராஜ்பத்தின் தலைவர் பயமுறுத்தப்பட்டாரென்பதும், நேச ராஜ்யத்தின் தலைவராகிய நிஜாம் அவர்கள் எவ்வளவு தாழ்மையுடனும், இழிவுடன் நடத்தப்பட்டாரென்பதும்; தக்ஷணத்தின் பெருமை தங்கிய அதிபதியாகிய நிஜாம் அரசர் எவ்வாறு தமது நேசர்களாகிய பிரிட்டிஷாரிடம் தமது ராஜ்பத்தைத் துறக்காமலிருக்கும் பொருட்டு குறைபிரந்து மிக தீரத்துடன் மன்றாடி வந்தார் என்பதும் போன்ற பல விஷயங்களை விவரமாக எழுதியிருக்கின்றார். அவர் எழுதியிருக்கும் இவ்விஷயம் அந்த ராஜ்ய சரித்திரத்தின் ஒரு இரக்கமுள்ள அத்தியாயமாகக் காணப்படுகின்றது.

இந்த நூற்றாண்டின் ஆரம்ப காலத்தில் மீண்டும் ஹைதராபாத் உதவிப் படைக்காகச் செலுத்தவேண்டிய தொகையின் பொருட்டுப் பிரிட்டிஷ் அரசாங்கத்தார் ஆண்டு வந்த ஒரு மாகாணத்தை 'நிரந்தர குத்தகை' என்னும் பெயரால் கைப்பற்றிக் கொள்வதற்கு கர்ஸன் பிரபு கையாண்ட பலவித சூழ்ச்சிகளையும் பற்றிக் கூறுகின்றது. அப்போது நிஜாம் மன்னராயிருந்த மஹபூபத் தௌலா அவர்களும் தம்முடைய பாட்டனாரைப் போலவே பதை பதைத்தும், துடிதுடித்தும்

தம் முன்னோர்கள் கேட்டுக்கொண்டதும் மறுக்கப்பட்டதும் போலவே அதே வார்த்தைகளாலும் கெஞ்சிக் கேட்டுக் கொண்டும் தம்மாலியன்லவரை தீரமாக மறுத்தும் எதிர்வாதமாடியும் வந்தார். எனினும் அவரது முயற்சிகளெல்லாம் வீணானதுடன் பீரார் மாகாணம் சாஸ்வதமாக அபகரிக்கப்பட்டு விட்டது. தற்சமயம் நிஜாம் மன்னராக இருப்பவரும் சமீப காலத்தில் அவ்விஷயமாக சமர்ப்பித்த ஸ்டேட்மெண்டில், தம் தந்தையார் அம்மாகாணத்தைக் கொடுக்க நேர்ந்த விஷயத்தில் தாம் சர்வ வல்லமையுள்ள சர்க்காரால் அசட்டை செய்யப்பட்டபோது எவ்வளவு துக்கத்துடன் வருந்தினர் என்பதைப் பற்றியும், தமது தந்தைக்கும் பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கும் நடந்த விவகாரத்தைப் பற்றியும் விவரமாக எழுதிக்கொண்டிருக்கிறார்.

பீரார் மாகாணத்தைத் திருப்பி ஒப்படைக்கும் பிரசினையானது முதலில் மகா பெரிய ஸாலார் ஜங் என்பவரால் நிஜாம் மாஹ்பூப் அலி கான் மைனராயிருந்தபோது கிளப்பப்பட்டது. ஆனால் அரசாங்கம் இரண்டு காரணங்களைக் கூறி அந்த வேண்டுகோளை அச்சமயம் தள்ளி விட்டது. அவற்றுள் முதலாவது, நிஜாம் அரசர் மைனராயிருக்கிறாரென்பது. இரண்டாவது பீரார் மாகாண ஜனங்கள் இவ்வாறு அதைத் திருப்பிக் கொடுப்பதை ஒப்புக்கொள்ளப் பட்டார்களென்பது. காலஞ்சென்ற நிஜாம் அரசர் பட்டத்துக்கு வந்து ஆட்சியை ஏற்றுக்கொண்டதும் தம் மாகாணத்தைத் திருப்பி ஒப்படைக்கும் பிரசினையை மீண்டும் பிரஸ்தாபித்தார். அப்போதும் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் ஆளுகையால் ஏற்பட்ட நன்மைகளை அனுபவித்து வந்த பீரார் மாகாண வாசிகள், சுதேச ராஜ்ய ஆளுகையை விரும்பமாட்டார்களென்று சமாதானம் கூறப்பட்டு விட்டதுடன், நிஜாம் அரசரின் விருப்பத்துக்கு மாறாகவும், அந்த ராஜ்ய மக்களின் கோபத்தைக் கவனியாமலும் 'நிரந்தர குத்தகை' என்னும் பெயரால் அம்மாகாணம் பிரிட்டிஷ் இந்தியாவுடன் கர்ஸன் பிரபுவால் ஒன்றாக்கி விடப்பட்டது.

இப்போதைய நிஜாம் அரசரால் இந்தியா கவர்ன்மெண்டுக்குச் செய்து கொள்ளப்பட்ட மனுவில் தம் தந்தையார் எவ்வாறு அநியாயமானதும், யதேச்சையானதுமான முறைகளால் தோற்கடிக்கப்பட்டாரென்பது பற்றியும், எவ்வாறு மகா ஜனங்களின் கோபத்துக்கும், காலஞ்சென்ற நிஜாம் அரசரின் மனத்தாங்கலுக்கும் மாறாக அவர் தம் மாகாணத்தினின்றும் கட்டாயத்தின் மீது பிரிக்கப்பட்டாரென்பதுபற்றியும் மிக விவரமாக எழுதிக் கொடுத்திருக்கிறார்.

சுயராஜ்யத்துக்கு இந்திய மக்கள் ராஜீய யோக்கியதை யுடையவர்களாக இருக்கிறார்களா என்பதை நேரில் கண்டறிந்து போவதற்

காகவே ஸ்ரீ மாண்டேகு இந்தியாவுக்கு விஜயம் செய்ததாக இந்தியா கவர்ன்மெண்ட கூறுகின்றபடி ஸ்ரீ. மாண்டேகு இங்கு வந்திருந்த போதும் பீராரிலுள்ள சில பிரபலமான பொது ஜனத் தலைவர்கள் இந்த பீரார் பிரசினையைக் கிளப்பினார்கள். அப்போது ஹைதராபாத் ரெஸிடெண்டாக இருந்தவரான ஸர். ஸ்டூவர்ட் பிரேசர் என்பவர் நீண்ட நேரம் இவ்விஷயமாக விவாதித்த பின்னர், "பீரார் வாசிகள் நிஜாம் அரசரின் ஆளுகையில் திரும்பிப்போவதற்கு விரும்பமாட்டார் களாகையாலும், இத்தகைய விஷயங்களிலெல்லாம் இந்திய அரசாங் கம் தன் சுயத்தீர்மானத்தையே வழி காட்டியான கொள்கையாகக் கொண்டு அதையே பின்பற்றவும் முடிவுசெய்து விட்டபடியாலும் இனி பீராரைத் திருப்பி ஒப்புவித்தல் என்னும் விஷயமே கவனிக்கப் பட மாட்டாது" என்றும் முடிவாகக் கூறிவிட்டார்.

அப்போது, நிஜாம் அரசர் யுத்த காலத்தில் எவ்வளவு அதிக உதவிகளைச் செய்தாரென்பதும், அவரிடமிருந்து அபகரிக்கப்பட்ட மாகாணமாகிய பீராரைத் திருப்பிக் கொடுத்து விடுவதனால் முன்னரே ராஜ பக்தியுடன் இருக்கும் அவரது உள்ளம் இன்னும் அதிகமான ராஜ விசுவாசத்துடன் பொலியும் என்பதும், இந்து முஸ்லிம்கள் அடைந்திருக்கும் கோபமும் கவலையும் அதைத் திருப்பிக் கொடுப்பதனால் ஒரு வாறு தணியுமென்றும் நன்றாக எடுத்துக்காட்டப் பட்டது. எவ்வளவுதான் எடுத்துக் கூறியும் அந்த ரெஸிடெண்ட், அவ்வியவகாரத்துக்குச் சம்பந்தப்பட்ட இரு கட்சிக்காரர்களும் முன்னரே ஒருவிதமான முடிவுக்கு வந்து விட்டிருப்பதால் மீண்டும் அவ்விஷயம் விவாதத்துக்கே எடுத்துக் கொள்ளப் படமாட்டாதென்று கண்டிப்பாகக் கூறிவிட்டார்.

பின்னர் பீரார் வாசிகளின் விருப்பத்தை அறிவதற்காக அவர்களுடன் கலந்து ஆலோசிக்கப்பட்டது. அப்போது அவர்கள் மீண்டும்நிஜாம் அரசரின் ஆளுகைக்கே திரும்பி வந்துவிட ஆவலுள்ளவர்களாகவே இருப்பதாகக் கூறியதுடன் இதைப்பற்றிக் கிளர்ச்சி செய்யவும் அவர்கள் தயாராக இருப்பதாகக் கூறினார்கள். பீரார் மாகாணத்தைத் தம்மிடமே ஒப்புவித்துவிட வேண்டுமென்று மீண்டும் ஒரு பிரசினையைக் கிளம்பும்படி நிஜாம் அரசரைக் கேட்டுக் கொள்வதற்காக அவரிடம் ஒரு தூது செல்வதென்று தீர்மானிக்கப்பட்டது. ஸர். கங்காதர் சித் நவிஸ், மிஸ்டர் கபர்தே, மிஸ்டர் தேசபாண்டே, மிஸ்டர் மஹாஜனி, இப்போது மத்திய மாகாணத்தின் அரசாங்க நிர்வாக சபையின் மெம்பராக இருக்கும் மிஸ்டர். தம்பி முதலிய பிரபலத்தலைவர்கள் அந்தத்தூதில் கலந்து கொண்டார்கள்.

நிஜாம் அரசரிடம் விண்ணப்பித்துக் கொள்ளப் பட்ட மனுவின் நகலையும் மிஸ்டர் தம்பி அவர்களே தயாரித்தார். இந்தத் தூதை ஏற்று, தூதுவக் கூட்டத்தினருக்கு பேட்டிக்கொடுக்கும்படியாகவும் மேன்மை தங்கிய நிஜாம் அரசரை அவர்கள் வேண்டினார்கள். இதற்காக வென்று ஒரு நாள் குறிப்பிட்டு எல்லாம் சித்தமாக இருந்த போது ரெஸிடெண்ட் இதில் தலையிட்டதனால் இவ்விஷயம் நழுவி விட்டு விடப்பட்டது.

பிறகு இந்த பீரார் நிலைமையைக் கவனித்த ஸர். அலி இமாம் அவர்கள் தூது செல்வதில் ஒன்றும் பயனில்லை என்று கண்டு அதை தாமதப்படுத்தி விட்டார். அவர் உரிமைப் போர் தொடங்குவதே சரியான முறையென்று கண்டார். இந்தியா கவர்ன்மெண்டுக்கும் ஹைதராபாத் சமஸ்தானத்துக்கும் பிரத்தியேகமாக நடந்து வந்த வியவகார நடைமுறைகள் இப்போது பொதுஜன கவலைக்குரிய கிளர்ச்சியாக மாறிவிட்டன.

இக்கிளர்ச்சியால் நேர்ந்த பயனென்ன? இராஜப்பிரதிநிதியாக இருந்த ரீடிங்குபிரபு தம்முடைய உத்தியோக காலம் முடிந்து இங்கிலாந்து செல்லும் தறுவாயில் நிஜாம் அவர்களுக்கு அனுப்பிவிட்டுச் சென்ற இறுதிக்கடிதந்தான்.

---

# அருளுடைமை

மௌ. ஆ. அபுல்ஹுதா

"அருளில்லார்க் கவ்வுலகமில்லை பொருளில்லார்க்
கிவ்வுலக மில்லா தியாங்கு" (குறள்)

இதன்முன் வெளியீடாகிய முத்து இரண்டில் "கல்வி" என்னும் தலைப்புடன்கூடிய வியாசத்தின்கண் ஒவ்வொருவரும் விவேகம் என்னும் ஞானக் கிரணங்களைப் பெறுதல் வேண்டுமென்றும், அவை பதின்மூன்றாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றனவென்றும் நேயர்களின் சௌகரியத்தின்பொருட்டு அவைகளை விவரமாக ஒவ்வொரு மாதமும் வியாக்யானம் செய்து விடுவதாகவும் வரையப்பட்டிருந்ததை ஈண்டு நேயர்களுக்கு ஞாபகப்படுத்த விரும்புகின்றோம். அப்பதின்

மூன்று குணங்களுள் முதலாவதான மனோமார்த்தவமென்னும் அருளுடைமையைப்பற்றி இச்சஞ்சிகையில் சிறிது கூற விரும்புகின்றோம். மனோமார்த்தவமென்னும் அருளுடைமை என்பது ஒருவர் தம்முடைய ஆயுளில் தமக்கும் பிறர்க்கும் ஏற்படும் துயரங்களைக்கண்டு அதற்காக மனங்கரையும் பழக்கத்தின் மூலம் அவருடைய மனத்துக்கு உண்டாகும் சாத்விக சுவாபமேயாகும். மனோ சுத்தத்தின் செயலும், பிறருடைய துயரங்களைத் தமதாகக்கொண்டு மனங்கரையும் பழக்கமும் அருளுடைமையின் காரியங்களாம். அருளுடைமையின் கடமை பூததயையும், அதன் மர்மம் தெய்வ சங்கல்பமுமேயாகும். பூததயையின் செயல்களாக அஹிம்சையும், உதார குணமும் மனத்தின்கண் உருவப்படுகின்றன. அஹிம்சை என்பது ஹிம்சையினின்றும் வேறுபட்டிருக்குந்தன்மையாம். (மனம், வாக்கு, காயங்களால் உண்டாகும் மூவகை இம்சை என்று சாஸ்திர விற்பன்னர்கள் அதைப் பாகுபாடு செய்திருக்கின்றனர். ஆயினும் காயங்களால் இழைக்கப்படும் இம்சையைத்தான் சாதாரணமாக மனிதர்கள் இம்சை என்று கருதி வருகின்றனர்.) ஒரு ஜீவனின் குணத்துக்கு நிர்ப்பந்தமில்லாதபோது ஹிம்சை செய்வது கெடுதியேயாம்; கெடுதி அல்லது தோஷம் என்பது மற்றொருவருடைய துயரத்துக்கோ க்ஷீணத்துக்கோ காரணமாகும் ஒரு பந்தமேயாகும். ஜீவஹிம்சையின் பயன் காரண காரியத்தொகுப்பின் உண்மையைப் பிரமாணமாகக் கொண்டு இத்தகைய ஓர் நிலைமையில் உருத்தோன்றுவது இயற்கையைப்போல் காணப்படுகின்றது. தீய எண்ணங்களும் சரீர அவயவங்களிலும் பஞ்சேந்திரியங்களிலும் மட்டுமன்றி இரத்தத்திலும் பிறரால் வெறுக்கக்கூடிய ஒருவகை விகாரத்தை உண்டாக்குமென்று சாஸ்திர விற்பன்னர்கள் கூறுகின்றார்களாதலின் தேக சம்பந்தமான ஹிம்சையால் எவ்வளவு கஷ்ட நஷ்டங்கள் உண்டாகின்றனவென்பதை யூகிக்கலாம். எனவே, “அஹிம்ஸா பரமோ தர்ம:” “ஏகைவா ஹிம்ஸா ஸததம் நிஜஸுகாவஹா” என்பன போன்ற பிரமாணங்களை ஒவ்வொரு எழுத்தின் கருத்தையும் விடாமல் அனுஷ்டிக்கவேண்டுமென்று சிலர் கூறு நிற்பர்; ஆனால் இது முடியுமா என யோசிக்குங்கால் முடியாதெனக் கூறுவோம். ஏனெனின், ஆகாயத்திலும் பூமியிலும் ஜலத்திலும் உயிர் வாழும் அணுப்பிரமாணமாகிய அனேகம் ஜீவராசிகளுடைய உயிர்ச்சேதம் (கொலை) நிரந்தரமாகவே யாராலும் ஒழிக்கமுடியாத விதத்தில் ஒவ்வொரு நிமிஷமும் நிகழ்ந்துகொண்டேயிருக்கிறது. சாகபட்சிணிகளாகிய மனிதர்களும், மிருகங்களும் புலால் உண்பவர்களைக் காட்டினும் இவ்விஷயத்தில் மேன்மையுற்றவர்

களாக ஜீவிக்கிறதாகக் கூறக்கூசாமல் முன் வருவோர் பலர் உளர். ஆனால் அச்சாகபட்சிணிகள் அறிந்தும் அறியாமலும் மேற்கூறியவாறு அணுப்பிரமாணமான சிறு பிராணிகளையும் அதிநுட்பமான புழுக்கள் கிருமிகளையும் கொலை செய்யாமலும் அருந்தாமலும் இல்லை. எனவே புலாலுண்ணல் மறுக்கும் நண்பர்களுங்கூட இவ்வாறு உள்ளரங்கப் புலாலுண்போராதலால் ஜீவஹிம்சை என்பது அன்னாரையும் விட்டொழிந்த பாடில்லை. அன்றியும் பேசும்போதும், மூச்சு விடும்போதும், உட்கொள்ளும்போதும், மலஜல உபாதை கழிக்கும்போதும் எத்துணையோ கணக்கற்ற கிருமிகளையும், அணுப்பிரமாணமான ஜீவன்களையும் வதைக்கின்றனர். அதனால் மாமிசபட்சணியில்லாதவனும், மாமிசம் உண்போனும் இவ்வுயிர்வதை விஷயத்தில் சமமெனக் கூறுதல் மிகையாகாதெனக் கருதுகின்றோம்; எனவே உயிர்வதையின்றி உயிர்வாழ்வது நலமேயாயினும் இப்புவியின்கண் அவ்வாறு வாழ்வது முடியாதாதலின் அதைப்பற்றிச் சிந்திப்பதே பயனற்ற காரியத்தில் தலையிட்டுக் கொண்டதாகும். ஏனெனின், ஒருவன் உயிர்வதையே இன்றி உயிர்வாழ விரும்பினால் அவன் காய்ந்த இலை, புல் முதலியவைகளையே ஆகாரமாகக்கொண்டு காலங்கழித்த சுகரைபோல் வாழவேண்டுமென்பது மட்டுமல்லாமல் வாய், கண், காது மூக்கு முதலிய ஒன்பது துவாரங்களையும் தையற்காரனிடம் காட்டித் தைத்துக்கொள்ளல்வேண்டும். இன்றேல் பேசும்போது காற்றின் அதிர்ச்சியினாலும், ஜலம் முதலிய ஆகாரங்களைக் கொள்வதினாலும், மலமூத்திரங்களைக் கழிப்பதனாலும் அனேக ஜீவராசிகள் உயிர்துறக்க நேரிடும். ஆதலின் உயிர்வதையின்றி உயிர்வாழ விரும்பும் புண்ணியவான் தான் எண்ணிய பெரிய விஷயத்தை அனுஷ்டிக்க முடியாமல் ஏங்கி ஏங்கிக் காலங்கழித்து இறுதியில் மரணமடையவும் நேரிடும். எனவே இப்படிப்பட்ட எண்ணத்தை ஏட்டுச் சுரைக்காய் கறிக்குதவாது என ஒதுக்கித் தள்ளல்வேண்டும். சுருதிகள் பலவற்றையும் இதற்கு ஆதாரமாகச் சொல்லலாம், வரையலாம்; ஆனால் அவை யுக்திக்கும் அனுபவத்துக்கும் ஒத்திருக்கவேண்டுமென்பதை மறுத்தல் முடியாது. யுக்திக்கேற்றதாயில்லாத சுருதியை மனிதவர்க்கம் ஏற்றுக்கொள்வது அரிதாகும். அன்றியும் ஒருவேளை ஏற்றுக்கொண்டாலும் நடைமுறையில் காண்பிப்பது அசாத்தியமென அறிந்தால் மக்களுக்கு மனச்சோர்வு ஏற்படுவதுடன் ஏனைய உண்மை விஷயங்களிலும் நம்பிக்கை இன்மை உண்டாய்விடுமென்பது திண்ணம். ஆதலின் சுருதிப் பிரமாணங்களைச் சாற்றுவோரும் இயற்றுவோரும் அவ்வாறு செய்வதற்குமுன் தீர ஆலோசித்து மானிட புத்திக்கு முரண்

படாதும் எளிதில் அனுஷ்டிக்கக் கூடியதுமானவகைகளை மக்களுக்குக் கற்பித்தல் சாலச்சிறந்ததென்று கூற விரும்புகின்றோம்.

ஈசப்பணி, நேசப்பணி, தேசப்பணி என்னும் முத்தொண்டுகளையும் முறைப்படியாற்றி முக்தியடைவான் வேண்டியே எண்ணிறந்த ஜீவராசிகளை விட மேலாகப் படைக்கப்பட்டுள்ள மக்களுடைய சௌகரியத்துக் கென்றே ஏனைய சகல தாவர ஜங்கமங்களையும், ஜீவராசிகளையும் படைத்திருக்கிறானென்பதும் உண்மையே. எனவே மக்கள் தங்களது சௌகரியங்களுக்கென யாவற்றையும் ஆண்டு நடத்திப் பகுத்தறிவுக் கேற்றபடி தங்களுக்குக் கேடு விளைவிக்காதவைகள் யாவையும் அனுபவித்துச் சுக சௌகரியத்தைப் பெற்று மேற் கூறிய முத்தொண்டையும் ஆற்றி முக்தியடையவேண்டுமென்பதையே இயற்கையும் நமக்குச் சான்று பகர்கின்றது. ஆனது பற்றியே ஹிந்து, கிறிஸ்தவ, இஸ்லாம் மதங்களிலும் புலாலுண்ணலை அங்கீகரித்து அதை அனுஷ்டித்து வருவதாகவும் தெரிகின்றது. ஆயினும் புத்த மதம் போன்ற சில மதங்களில் தான் புலாலுண்ணல் முதலியவையும் ஜீவஹிம்சை யென்றே ஏட்டுச் சுரைக்காய் போல் பேச்சளவில் மட்டும் நின்று நடைமுறையில் தலை கீழாகக் கிடக்கின்றன. ஆனால் ஜீவஹிம்சை என்பது யாது என்னும் ஒரு கேள்வியும் பிறக்கின்றபடியால் அதற்குப் பதில் அளிக்கவேண்டுவதும் அவசியமாதலின் அதைப் பற்றி விவரிப்போம். ஜீவஹிம்சை என்பது சமசிருஷ்டிகளாகிய மக்களுக்கு மனம், வாக்கு, காயமென்னும் முக்கரணங்களாலும் துயரங்களை விளைவிப்பதும், அப்படிப்பட்ட துயரங்களுக்குத் திரிகரணங்களாலும் உதவி புரிவதும், அகாரணமாகத் தேவையின்றி ஏனைய ஜீவராசிகளுக்குக் கஷ்டத்தைக் கொடுப்பதுமேயாம்.

இனி அருளுடைமை என்னும் பூததயைக்கு மற்றொரு முக்கிய குணமாக இருப்பது ஔதாரியமென்னும் தாராள சிந்தை என்பதாகும். தாராள சிந்தை என்னும் பதத்துக்கு இங்கு தானசீலம் அல்லது அறம் என்பதே கருத்தாகும். தானம் என்பது அர்த்தம், பாத்திரம், மனம் இவைகளின் சுத்திக் கேற்றவாறு வேதாந்த கிரந்தங்களில் சாத்துவிகம், இராஜசம், தாமசம் என்றும், தர்ம சாஸ்திரங்களில் உத்தமம், மத்திமம், அதமம் என்றும் பாகுபாடு செய்யப்பட்டிருக்கின்றது. அவைகளைப் பற்றியெல்லாம் இவ்விடம் வியவகரித்துக் கொண்டிருக்கவேண்டிய அவசியமில்லையென்றே கருதுகிறோம். எனினும் சுருங்கக் கூறவேண்டுமாயின் பாத்திரமறிந்துட் சக்திக்கேற்றவாறு தானம் செய்யவேண்டுமென்பதும், சக்திக்கு மீறிய நிலைமையில் தானம் செய்வது தகாதென்பதும இதன் கருத்தாகும். தானத்

தைக் குறித்து, "ஒருவன் உத்தமனுக இருப்பின் தான் கொடுத்த தைப்பற்றிக் கொடுத்து விட்டேனென்று வருத்தப்படவோ, அன்றித்தான் கொடுத்துவிட்டதாக மற்றவர்களிடம் சொல்லிக் காட்டவோ கூடாது" எனக்கூறும் முதுமொழியை தானம் கொடுப்போர் ஒவ்வொருவரும் கவனிக்கவேண்டியதொன்ருகும். ஏனெனின், கொடுத்ததைப்பற்றிப் பச்சா தாபப்படுவது தர்ம நிஷ்டைக்கும் புருஷத் தன்மைக்கும் குறைவை உண்டுபண்ணுவதுடன் தானம் செய்வதனுல் கோரும் பயனையும் கிடைக்காமற் செய்துவிடும். கொடுத்த தானத்தைப்பற்றிப் பிறர்க்குக் கூறுவதனுல், தானத்தின் உத்தேச பலனுகிய புண்ணியத்தைப் பெறுவதைக் காட்டினும், தான் செய்த தானத்தைப் பிறர் அறியவேண்டுமென்னும் எண்ணத்துடன் சுயப்பெருமையைப் பிரகாசிக்கச் செய்யவே முயன்றதாகக் கருதப்படும். "யத்னுதபி பரக்கிலேசம் ஹர்த்தும் யாஹிருதிஜாயதே, இச்சா............ சாதயா" என்று தயா சப்தத்தைப்பற்றி சமஸ்கிருதத்திலும் விவரிக்கப்பட்டிருக்கின்றது. பிறருடைய துயரத்தைக் காணும்போது உண்டாகும் அனுதாபம் (மனக்கரைவு) புண்ணியப் பிரவாகத்தின் ஆரம்பஸ்தானமென்று கூறல் மிகையாகாது.

தயையுடன் நெருங்கிய சம்பந்தத்தையுடைய ஒரு செயல்தான் சினேகமென்பது. அது இப்பிரபஞ்ச மாலையைக் கோர்த்திருக்கின்றதுபோன்ற ஓர் உத்தமச் சரடேயாகும். தயையும் சினேகமும் ஒரே பொருளையுடையதல்லவாயினும் முற்றிலும் வேறுபட்ட பதங்களன்று. ஸ்திதிபேதங்களை அபிமானித்தோ அல்லது கீர்த்தியை ஆசித்தோ ஒருவரை மற்ெருருவருடன் கூட்டிச்சேர்கின்ற மனேவிசுவாசத்தின் பலனுய் ஏற்படும் ஒருவித பற்றுதல் தான் சினேகமென்பது: தயை என்பது துயரத்தைத் தடைசெய்யும் பழக்கமாகிய சாத்துவிக சுபாவத்தினுல் மனதிற்கு உண்டான அருளுடைமையின் பயனுன கரையுந் தன்மையேயாகும். இத்தகைய விவரங்களால், தயை சினேகத்துக்குள் லயித்திருக்கின்ற ஒரு செயலென்பதும், தயை இலாச்சினேகமும், சினேகமிலாத் தயையும் இரா என்பதும் நமக்குத் தெளிவாகின்றன. தயையைப்பற்றி ஷேக்ஸ்பியர் மிக அழகாக விவரித்திருக்கின்ருர். அதாவது: "தயை என்பது சுயமாக உண்டாகின்ற ஓர் குணமேயாகும். அது துயரப்படுகின்ற உலக மக்களுக்கு ஆறுதலளிக்கும்பொருட்டு சாந்தமழை பொழிவதுபோல் சொர்க்கஸ்தானத்தினின்றும் பூபாகத்துக்குப் பொழிகின்றது. கொடுக்கின்றவனை ஆசீர்வதிப்பதனுலும், வாங்குகின்றவனுக்கு ஆறுதலளிப்பதனுலும் தயையானது இருவகையாலும் அனுக்கிரகிக்கப்

பட்டதாகும். மகா பலவான்களுக்கும் பலமாயிருப்பதும், அரசர்களுக்குத் தங்களுடைய கிரீடங்களைக் காட்டினும் மேன்மையான அலங்காரமாயிருப்பதும் இந்தத் தயையேயாகும். எளிதில் நாசமடையக்கூடிய செங்கோலைக் காட்டினும் மிக மேலான விஷயம் தயை என்பதே. மன்னாதி மன்னர்களெல்லாம் தங்கள் மனச்சிங்காதனத்தில் வீற்றிருக்கக்கூடிய பொருள் இந்தத் தயை ஒன்றே என்று எண்ணுகின்றனர். இறைவன் சகலராலும் போற்றத் தகுந்தவனாயிருப்பதற்கும் இந்த ஒரு சீரிய குணத்தையுடையதனாலேயேயாம். மனிதர்களாகிய நாமும் அந்தத் தயையை நியாயமான முறையில் உபயோகிக்குங்கால் இப்புவியின்கண் இறைவனது செயல் நன்றாகப் பிரகாசிக்க ஆரம்பிக்கின்றது.'' என்பதேயாகும்.

ஸ்ரீமான் ஷேக்ஸ்பியர் இவ்வாறு வியாக்யானம் செய்திருப்பதும் ஒரு தகுந்த சந்தர்ப்பத்தையொட்டியேயாகும். அன்றியும் தயை கிஞ்சித்தும் இல்லாததனால் உண்டாகும் பிரயோஜனமற்ற தன்மைகளையும் அன்னார் அக்கதையில் விரிவாக விளக்கியுமிருக்கின்றார். இராஜசம், தாமஸம் என்னும் குணங்களால் உண்டாகின்ற துக்கச் செயல்களை மற்றவர் மற்றவர்களுடைய மனத்தினின்றும் ஒழித்தல் வேண்டுமென்னும் நன்னோக்கத்துடன் மனதிற்குண்டாகும் இந்த லயிப்பானது தன்னைப்போல் மன்னுயிரையும் எண்ணும் தன்மையின்கண் அடங்கியிருக்கின்ற பரமசாத்துவிக தர்மமாகையால் ஆத்மாவின் கதிமோக்ஷத்துக்கு உதவியாயிருக்கின்ற உபகரணங்களுள் முதன்மையான ஸ்தானம் இந்தத் தயைக்குத்தான் உண்டு.

பிரத்தியேகமாக இறைவனை மேன்மையுறச் செய்பவை உணர்ச்சி, தயை, சத்தியம், சுதந்தரம், ஆனந்தம் எனும் ஐங்குணங்களேயாம். இக்குணங்கள் மனிதனிடம் எவ்வளவு அதிகம் பிரகாசிக்கின்றதோ அவ்வளவு அவனது மானிடத்தன்மையும் உலகத்துக்குப் பயன்படுகின்றது. எனவே அருளுடைமை என்பது ஒருவருடைய மனச்சாந்திக்கும் அபிவிர்த்திக்கு காரணமாகநிற்கும் மானிட தர்மமே என்பதை நாம் கண்டுகொள்கிறோம். தயையிலா மனிதன் குரூரனும், பாவியும், ஜீவராசிகளுக்குப் பயத்தைக் கொடுக்கின்றவனுமேயாம். அப்படிப்பட்டவனுடைய சம்பத்து, சுகம் முதலியவைகளையும் அவனது பாவநெருப்பானது எரித்துவிடுகின்றது. இவ்வாறு எரித்து, எரித்து காலக்கிரமத்தில்அவனுடைய கருங்கல் சமானமாகிய மனதையும் கரையும்படி செய்யத்தொடங்குகின்றது. தயை இலாதான் பாவ நெருப்பினால் எரிக்கப்பட்டு அளவுக்குமீறிய சங்கடங்களால் பலருடைய தயவையும்எதிர்பார்த்துஅவன் யாசிக்கும்போது பார்த்தால்கைவசம் தனக்கு

ஒன்றுமில்லையென்று வேளைக்குத் தகுந்த வேஷம் போடுகிருனே என்று ஏனையோர் சந்தேகிக்கக்கூடும். கடந்துபோன காலங்களில் அவன் செய்த துஷ்கரும சக்தியின் கோணற்பற்களினிடையில் அகப்பட்டுக் கொண்டு அவைகளால் பீடிக்கப்பட்டுத் தன்னைப்போன்ற மனிதர் களினுடையும், தெய்வாம்சம் பொருந்திய தன் மனச்சாக்ஷியினுடைய வும் சமூகத்திலிருந்து எவ்விதமான ஆறுதலேயேனும் ஆசீர்வாதத் தையேனும் பெறமாட்டாமல் நிர்பாக்கியனுகத்தான் அவர் தன் வாழ்க்கையை முடிக்கின்ருன். ஆனல் தயைபுடைய ஒருவன் தன் னைப்போன்ற உயிர்களிடம் தான் விதைத்த கருணை என்னும் விதை யானது நூறு மடங்காகவே விளைந்து தன்பக்கமே திரும்பி வருவ தைப் பெற்றுச் சுகித்து ஆனந்தித்து யாம் இதன் தலைப்பில்கூறிய குறள்வாக்கேபோல் பரமானந்தத்துடன் இன்பமயமான அப்பர லோகத்தை யடைகின்ருன். மேலும் மனோமார்த்தவ அருளுடை மையின் இரகசியமாகிய தெய்வசங்கற்ப காரணமாய் உண்டாகும் தெய்வசாந்நித்தியம்அவனது மனத்தைச் சுத்தீகரித்து மேன்மேலும் அம்மனத்துக்கு நற்கிரியைகளில் ஊக்கத்தையும் உற்சாகத்தையும் உண்டாக்குகின்றது. நற்காரியங்களால் புண்ணியத்தைச் சேகரிக்க வும், புண்ணியத்தால் சுகத்தைப் பெறவும் கூடும். எனவே மனோ மார்த்தவமென்னும் அருளுடைமையானது மனிதனுக்கு முக்திமார்க்க சஞ்சாரத்துக்கு அவசியமான ஒரு கடமையே என்று நன்கு புலனுகின்றது.

---

# அரேபியாவின் எதிர்கால நிலைமை.

ஒரு நிருபர் 'அப்சர்வர்' பத்திரிகையில் எழுதியது.

அரேபிய தேசங்களை ஒன்று படுத்தி ஐக்கியநாடாக்க வேண்டு மென்று அரேபியா ஜனத் தலைவர் சிலர் வெகு காலமாக எண்ணிக் கொண் டிருக்கிருர்கள். மகா யுத்த காலத்திலும் மகாயுத்தத்துக்குப் பிறகும், அரேபியாவின் சார்பாக பல பிரபல ஆங்கிலேயர்கள் வேலை செய்யத்தொடங்கிய பொழுது அந்த எண்ணம் கொஞ்சம் அதிகமாக வலுவடையத் தொடங்கிற்று. லண்டனில் வந்திருக்கும் இராக்குஸ் தானதிபதி, ஜனப். முஜாயிம் பெக் பக்தாதியுங் கூட அரேபிய

தேசங்கள் ஒன்று பட்டு ஐக்கிய நாடாவ தற்கு அநுகூல அபிப்பிராய முடையவராகவே காணப்படுகிருர்.

ஜனப். முஜாயிம் பெக் வயதில் இளையவராயினும் மிக அநுபவம் வாய்ந்தவர். இதுவரையிலும் பல அரசியல் விஷயங்களில் ஈடுபட்டுப் பழக்கம் பெற்றவர். புராதனக் கொள்கைகளும் தற்காலக் கொள்கைகளும் அவரிடத்து மிக ரம்மியமாக இணைந்து அமைந்திருக் கின்றன. அவர் இராக்கிலுள்ள ஒரு புராதன குடும்பத்தில் பிறந்த வராயினும் தன் நாடு தற்கால முறைப்படி சீர்திருத்தம் பெற்று உயர்ச்சியடைவதில் மிகுந்த ஆர்வமுடையவராயிருக்கிருர். கீழ்த் தேசங்கள் முன்னேற்றமடைய வேண்டுமானல் மேனட்டு முறைகளை பின்பற்றியே தீரவேண்டுமென்று அவர் கண்டிப்பாக அபிப்பிராயப் படுகிருர்.

காந்தி இயக்கம்போன்ற பயனற்ற பிற்போக்கான இயக்கங் களுக்கு கீழ்த்தேச முஸ்லிம்கள் ஸ்தானம் அளிக்கவே கூடாதாம். கீழ்நாட்டு நாகரீகம் காலப்பழக்கத்தால் உபயோக சூனியமாய் விட்டதென்றும், கீழ்த் தேசங்களில் புத்துயிர்தோன்ற வேண்டு மானல் மேனட்டு நாகரீகமே அதற்கு உதவிபுரியக்கூடுமென்றும் அவர் மிகத்தெளிவாகக் கூறுகிருர். முற்காலத்தில் கீழ்த் தேசங் களிலிருந்து முக்கியமாக அரேபியாவிலிருந்து நாகரீகம் மேனட்டுக் குச் சென்றதென்றும் அந்த நாகரீகம் பழக்கம்பேற்று பயனற்றதாகி விட்டதினல் மேனட்டு நாகரீகத்தை பின்பற்றி உயற்சியடைவதில் இழுக்கொன்று மில்லையென்றும் அவர் மிகச்சாதுர்யமாகக் கூறுகிருர்.

லண்டனில் இப்பொழுதில் ஸ்தானதிபதியாக வந்திருக்கும் ஜனப் முஜாயிம் பேக், பாக்தாத் நகரத்தில் ஒரு நீதிபதியா யிருந்தபொழுது பிரிட்டிஷ் அதிகாரிகளின் கவனத்துக்கு அவர் பாத்திரரானர். பைசுல் அரசர் தலைமையில் இராக் ஒரு தனிராஜ்ய மாக மாறியபொழுது ராஜீய உலகத்தில் ஜனப் முஜாயிம் பெக் கின் பெயர் பிரபலம் பெற்றது. ஜனப் யாசின் பாஷா மந்திரி சபைக்காலத்தில் (1924—25) ஜனப் முஜாயிம்பெக் போக்கு வரத்து இலாகாவுக்கும் நீதியிலாகாவுக்கும் மந்திரியாக இருந் தார். சென்ற இலையுதிர் காலத்தில் அவர் இங்கிலாந்துக்கு வந்தார். இங்கிலாந்தில் அவர் சிறிது காலம் சுற்றுப்பிரயாணம் செய்த பொழுது பிரிட்டிஷ் ஜனங்களின் பெருமையும் பிரிட்டிஷ் ஸ்தானங்களின் மகிமையும் அவருக்குப் புலனயிற்று. இவ்வருஷ வசந்த காலத்தில் அவர் இராக்கு ஸ்தானதிபதியாக நியமிக்கப்பட்ட பொழுது, இராக்குக்கும் பிரிட்டனுக்கும் நெருங்கிய நேசபந்தத்தை

உண்டுபண்ண வேண்டுமென்று அவர் நெடுநாளாகக் கொண்டிருந்த ஆசையை அனுஷ்டான முறையில் கொண்டுவர அவருக்கு வசதி வாய்த்தது. அவ்வாறு அவர் நியமனம் பெற்ற சில மாதங்களில், முதன் முதலாக லண்டனில் இராக்கு ஸ்தானாதிபதியாக வந்த ஜாபர் பாஷா, மந்திரிசபை அமைக்கும் பொருட்டு பாக்தாதுக்கு அழைக்கப்பட்டார்.

நான் அவரை சமீபத்தில் பேட்டி கண்டபொழுது, அரேபிய தேசங்கள் ஒன்றுபட்டு ஐக்கிய நாடாவதற்கு பிரிட்டன் உதவிபுரிய வேண்டியது அவசியமென்றும் அதற்கு இதுவே ஏற்றகாலமென்றும் அவர் கூறினார். "எங்கள் பழக்க வழக்கங்களும் ஆசாரங்களும் உங்கள் பழக்க வழக்கங்களுக்கும் ஆசாரங்களுக்கும் ஒப்பாகவே இருக்கின்றன" என்று அவர் என்னிடம் சொன்னபோது நான் முகத்தைச் சுளித்தேன். உடன் அவர் என் அந்தரங்க எண்ணத்தை உணர்ந்துகொண்டார்; "பல மனைவிகளை மணம்செய்யும் வழக்கம் அரேபியர்களிடையில் நாளுக்குநாள் ஒழிந்து கொண்டுதான் வருகிறது. ஒரு மனைவிக்கு மேலுள்ள அரபிகள் இப்பொழுது பாக்தாதில் இல்லவே இல்லை. கட்டுப்பாடான நிபந்தனைகளுக்கு உட்பட்டு முஸ்லிம்கள் மணஞ்செய்துகொள்ள வேண்டுமென்றே குரானில் விதிக்கப்பட்டிருக்கிறது. ஆனாலும் ஏகபத்னி விரதத்தை இப்பொழுது முஸ்லிம்கள் பின்பற்றி வருவது மேனாட்டாரைப் பார்த்துதான். ஏக பத்னி விரதக்கொள்கை எங்கள் சமூகத்தில் பலமாக வேரூன்றி வருகிறது" என்று அவர் வெகு பரபரப்புடன் சொன்னார்.

ஜனாப். முஜாயிம் பெக்கின் தாய் நாட்டுடையவும், அயல் நாடுகளுடையவும் பிற்கால அரசியல் நிலையைப் பற்றி அவரது அபிப்பிராய மறிவதே என் முக்கிய நோக்கமாக இருந்ததினால் என் எண்ணத்தை மெதுவாக அவருக்குத் தெரிவித்தேன்.

உடனே அவர் என் விருப்பத்துக் கிணங்கிப் பின் வருமாறு பேசத்தொடங்கினார். "பிரிட்டனுக்கும் அரேபியாவுக்கும் ஒரு நேச ஒப்பந்தம் உண்டானால் அது இரு தேசத்தாருக்கும் நலமாகவே இருக்கும். பிரிட்டிஷ் உதவிகொண்டு மட்டுமே அரேபியாவுக்கு முன்னேற்றமடைய முடியுமென்று நான் உறுதியாக நம்புகிறேன். அரேபியர் அனைவருக்கும் பிரிட்டிஷார் மீது அளவுகடந்த நேசமும் மதிப்பும் இருந்து வருகிறது. பிரிட்டிஷார் மட்டும் கைகொடுத்து உதவினால் அரேபியா முன்னேற்றமடைந்து மத்தியதரைக் கடலுக்கும் இந்தியாவுக்கும் மத்தியில் ஏகாதிபத்தியத்துக்கு உதவியான ஒரு உத்தம நாடாய் விளங்குமென்பதற்கு ஐயமே இல்லை."

"துருக்கியும் பாரசீகமும் மேனாட்டு முறைகளைப் பின்பற்றி முன்னேறிவருகிற தல்லவா" என்று நான் குறுக்கிட்டுச் சொன்னேன்.

"ஆம்; தடையென்ன! எல்லா தேசங்களும் விருத்தியடைய வேண்டும்; எல்லா தேசங்களோடும் நேசபாவனையில் வாழவேண்டுமென்றும் நாங்கள் விரும்புகிறோம். அனடோலியாவில் மேனாட்டு முறையில் ஒரு ராஜ்யம் ஸ்தாபிக்க முஸ்தபா கமால்பாஷா முயற்சி செய்துவருவதை அரேபியர்களெல்லாம் மிகவும் பாராட்டுகிறார்கள். அம்முயற்சியில் அவர் வெற்றியடைவாரென்றும் அரபிகள் நம்புகிறார்கள். பழைய நாகரிகத்தை அடிப்படையாகக் கொண்டு கீழ்த்தேச முஸ்லீம் தேசங்களில் இக்காலத்தில் ஒரு ராஜ்யம் ஸ்தாபித்துவிடலாமென்று எண்ணுவது மூடத்தனமாகும். காஜி ஒரு வியக்கத்தக்க மனிதர்; அவர் பிரிட்டன் உதவிக்குப் பாத்திரராகவே இருக்கிறார். துருக்கி தேசிய வாதிகள் அரேபியாவின் சிலபகுதிகளைக் கைப்பற்றி விட்டார்கள் என்று சொல்வது உண்மையல்ல. இராக்கையும், ஸிரியன் பிரதேசங்களையும் துருக்கியோடு சேர்த்தால் அது துருக்கிக்கு பேராபத்தாக முடியுமென்று முஸ்தாபா கமால் பாஷாவுக்கே நன்கு தெரியும்.

பிறகு அரேபிய தேசங்கள் ஒன்றுபட்டு ஐக்கிய தேசமாவதின் சாதக பாதங்களைப்பற்றி அவர் பேசத்தொடங்கினார்.

"கிரேட் பிரிட்டன் மட்டும் இந்த நல்ல தருணத்தில் உதவி செய்தால் அரேபியா விருத்திபெற்று தன் பூர்வீகப் பெருமையை அடைவது நிச்சயம். பக்தாதின் புராதனச் சிறப்புகளைப் பற்றி நான் விவரித்துக்கூறத் தேவையில்லை. ஐரோப்பா அறியாமையில் மூழ்கிக்கிடந்த அந்தப் பழைய காலத்தில் மேனாட்டுக்கு நாகரீக ஒளியைப் பரப்பிய அரேபியரிடத்தில் பண்டைக்கால அருங்குணங்கள் முற்றும் குறைந்துவிடவில்லை; அவை அடங்கிக்கிடக்கின்றன. பிரிட்டன் தூண்டினால் விளக்கமுறுவது திண்ணம்" அரபி தேசங்களின் தற்கால நிலை ஐக்கியப்படுவதற்கு அனுகூலமாக இருக்கவில்லையே. இராக்குக்கும், ஹிஜாஸ், நஜத் முதலிய தேசங்களுக்கும் தற்காலமுள்ள பந்தம் எப்படியிருக்கிறது? என்று நான் குறுக்கிட்டு கேட்டுக்கொண்டேன். அதற்கு அவர் பின்வருமாறு விஸ்தாரமாகப் பதிலளித்தார்.

"அரபிப் பிரஜைகளுக்குள் தற்காலம் காணப்படும் அற்ப மனக் கசப்பைவிட, அரபி தேசங்கள் ஒன்றி ஐக்கிய தேசமாக வேண்டுமென்பதில் அவர்களுக்குள்ள ஆசை பன்மடங்கு பெரிதாக இருக்

கிறது. இப்னுஸுஊது அரசர் குரூர குணமுடைய வரானுலும் அவரது தேசத்தார் மற்ற அரபிகளோடு ஐக்கியப்பட்டு முன்னேற்ற மடைவதற்குத் தடை கூறவே மாட்டார். என் அன்பார்ந்த அரசர் முதலாவது பெய்சுல், அரபி நாடுகள் ஒன்று பட்டு மேனாட்டு முறைகளைப் பின்பற்றி விருத்தியடைவதில் மிகுந்த ஆவலுடையவர். காலஞ் சென்ற ஜப்பான் சக்கரவர்த்தி முத்சுஹிதோ 50 வருஷங்களுக்குக் கையாண்ட முறைகளையே பெய்சல் அரசர் இப்பொழுது கைக் கொண்டு ஒழுகுகிறார். தன் அரசர் நோக்கத்தைப் பூர்த்தி செய்ய இராக்கு குடிகளெல்லாம் காத்துக்கொண்டும் இருக்கிறார்கள். பெய்சல் அரசர் பிரிட்டிஷாரிடம் மிகுந்த அன்புடைய வராயிருக்கிறார். அரபி ஸர்க்காருக்கும் பிரிட்டனுக்கும் ஒரு நேச ஒப்பந்தம் உண்டாவதை அவர் வெகு ஆவலோடும் எதிர் பார்த்துக்கொண்டிருக்கிறார்.''

கடைசியாக அவர் சொன்னதாவது:—சர்வதேச சங்கத்தின் அதிகாரபத்திரம் வாங்கி அரசாள்வதில் அரபியர்களுக்குப் பிரியமில்லை. மகா யுத்தகாலத்தில் துருக்கிகளுக்கு விரோதமாகக் கிளம்பி சுதந்தரம் பெற அரபிகள் முயற்சி செய்யவில்லை. பிரிட்டிஷ் ஸர்க்காரோடு ஏற்கனவே ஒப்பந்த சம்பந்தம் பெற்றிருக்கும் நாங்கள் சர்வதேச சங்கத்தின் அதிகார பத்திரத்தை அலட்சியம் செய்கிறோம்.

---

# மஜ்லிஸுல் உலமா நான்காவது மகாநாடு.

## வரவேற்பு தலைவர் பிரசங்கம்

வரவேற்புக் கமிட்டி தலைவர் ஜனாப். பி. கலிபுல்லா சாஹிப் அக்கிராசனருக்கும், பிரதிநிதிகளுக்கும், இதரர்களுக்கும், நல்வரவு கூறிய பின் சொன்னதாவது :—

### நம் நகரின் பெருமை.

எங்கள் நகரமானது பண்டைய காலந்தொட்டுச் சீரும் சிறப்பும் பெற்று பெரும் பேர் படைத்த நகரமாகும். சரித்திர ஆராய்வுக் கெட்டிய மட்டில் நமது தென்னிந்தியாவிலேயே எல்லாப் புகழும் கீர்த்தியும் பெற்று விளங்கிய சோழ தேசத்திற்கே எங்கள் நகரம் தலைநகராய் விளங்கா நின்றது. பிற்கால சரித்திரத்திலும் கர்னாடகத்திற்கே இது ஒரு திறவுகோல் போன்ற முக்கிய நகரமாகக் கருதப்

பட்டு வந்தது. இதெல்லாம் நிற்க, எங்கள் நகரம் இஸ்லாத்தின் பெருமையை விளக்கி வருகின்றது. தென்னாட்டிலேயே திருச்சிமா நகரில் இஸ்லாமியர்கள் சற்று விசேஷமாக வுள்ளவிடம் என்பது தாங்கள் தெரிந்திருக்கலாம். எங்களுக்கு நத்தட்நகர் என்று பெயர் விளங்கி வருவதும் தங்களில் சிலருக்கு தெரிந்திருக்கலாம். அது எது காரணத்தால் என்றால், எங்கள் நகரில் நத்தர் ஒளலியா பாதுஷா அவர்கள் அடங்கியிருக்கும் எங்கள் அதிர்ஷ்ட வசத்தால் என்று சொல்லுவேன். இந்த மகானுடைய காலம் சற்றேறக்குறைய 8 நூற்றாண்டுகளுக்கு முன் என்று சொல்லுவதற்குத் தக்க ஆதாரமுண்டு. அவர்கள் உயிரோடிருந்த காலமாகிய ஹிஜரி 4-வது நூற்றாண்டில் நம்மிஸ்லாமிய ராஜ்யம் இக் நாட்டிலேயே இருந்ததில்லை. எனினும் அந்தப் பெரியோர்களிடத்தும், அவர்களது மார்க்கத்தின் பொருட்டும் அக் காலத்துச் சோழராஜனுக்கும், மற்றைப் பொது ஜனங்களுக்கும் இருந்த மதிப்பும் நம்பிக்கையும் எவ்வளவாக விருந்த தென்றால், ஹஸரத் அவர்களுக்கு அக்காலத்து ஹிந்துக்கள் தங்கள் கோயிலையே தங்கு மிடமாகக் கொடுத்திருக்கின்றனர். எனவே, நமது மார்க்க முன்னேற்றம் கத்தி முனையினாலில்லை யென்பதும் தன்னிடத்து அமைந்துள்ள அரும் பெருங் குணங்களினாலேயே ஏனையோருடைய நன் மதிப்பைப் பெற்று எளிதில் பரவிவந்த தென்பதையும் ருசுப்படுத்துவதற்கு எங்கள் நகரமே ஒரு பெரும் திருஷ்டாந்தமாகும்.

### மஜ்லிஸ் ஸ்தாபனமான விபரம்

நமது மஜ்லிசுல் உலமாவானது சற்றேறக் குறைய 10 வருஷங்களுக்கு முன்னதாக நம்மவர்களால் எங்கள் திருச்சிமா நகரில் ஸ்தாபிக்கப்பட்டு அன்று தொட்டின்று வரை அநேக புண்ணிய காரியங்களை நடத்திவருவது தங்களுக்குத் தெரிந்த விஷயம். இம்மா பெருஞ் சபை ஏற்றுக்கொண்ட காரியங்களில் நம்தென்னாட்டில் வருடந்தோறும் ஒரு மகாசபை ஒவ்வொரு இடங்களில் கூட்டி நம் மார்க்க அபிவிர்த்தியை பொருத்தும், நம் சகோதரர்களின் மேம்பாட்டைப் பொருத்தும், ஆலோசிப்பது ஒரு முக்கிய கடமையாம். அதையனுசரித்தே 1917-ம் வருஷம் நம் திருச்சியிலும், 1919-ம் வருஷம் தஞ்சைமா நகரிலும், 1921 வருஷம் ஈரோட்டிலும் நம் சங்கை பொருந்திய உலமாக்களும், மற்ற சகோதரர்களும் கூடி அநேக விசேஷ காரியங்களை ஆலோசனை செய்து அனுஷ்டானம் செய்திருக்கின்றார்கள். அதன் பின்னர் சென்ற 1925-ல் திருநெல்வேலியிலுள்ள நம் சகோதரர்கள் தங்கள் பட்டணத்தில் இம்மகா சபையைக் கூட்டுவ

தற்கான முயற்சிக ளனைத்தும் செய்ய முன் வந்தனர். இறைவன் செயலால் ஏற்பட்ட சில அசந்தர்ப்பங்களால் அவர்கள் முயற்சி பலன் படாது தயங்கி விட்டமையால் மறுபடியும் நம் மகாநாட்டை நம் திருச்சிமா நகரில் நடத்தும்படி ஏற்பட்டது நம் பால் இறைவன் செய்த கிருபையே யாகும்.

## நம் குறைகள்

நம் குறைகள், நம் பெரியோர்கள் இறந்ததுமட்டு மல்ல. சில நா ளாகவே ஆரியசமாஜியர் என்று சொல்லக்கூடிய ஒரு வகுப்பினர் நம் சமூகத்திற்கே பல இடைஞ்சல்களை இழைக்கத் தலைப்பட்டுவிட்டனர். வடஇந்தியாவில், அறியாத முஸ்லீம்கள் ஆயிரக்கணக்கானவர்களை நம் பரிசுத்த இஸ்லாம் மார்க்கத்தை விட்டு விலகும்படி பல சூழ்ச்சிகளும் செய்துவருகின்னர். மேலும் சங்கத்தன் என்னும் சபைகளை ஒவ்வொரு முக்கிய ஸ்தலங்களிலும் கூட்டி அதன் மூலமாய் முஸ்லீம்களுக்கு பல விதத்திலும் இன்னலிழைத்து வருகின்றார்கள். மேலும் நம்மார்க்க விஷயங்களைத் தூஷித்தும் கேவலமாகவும் கற்பனையாகவும் பேசி, புத்தக மூலமாகவும், பத்திரிகைகள் மூலமாகவும் விஷமப்பிரசாரம் செய்து வருகின்றார்கள். இது மட்டும் நில்லாமல் நமது ரசூலே கரீம் நபிகள் நயாகம் சல்லல்லாகு வலைகிவ சல்லம் அவர்களைத் தூற்றுவதற்கும் தலைப்பட்டு விட்டனர். இத்தகைய கொடிய அவதூறு பேசும் விஷமியர்களுக்கு சாதகமாகச் சில மாதங்களுக்கு முன் நடந்த ராஜ்பால் கேஸ் தீர்மானம் உலகத்திலேயெ ஒரு பெரிய குழப்பத்தை உண்டாக்கி விட்டது. ஆனால் அதன் கண்டனமாய் உலக முழுவதிலுமே ஏற்பட்ட குழப்பத்தை முன்னிட்டும் 'வர்த்தமான்' பத்திரிகை முதலிய கேசுகளில் ஏற்பட்ட தீர்மானங்களை முன்னிட்டும் நமது சமூகத்தினருக்கு ஏற்பட்ட ஆபத்துக்கள் ஒருவாறு கண்டிக்கப்பட்டிருப்பினும் அவைகள் அறவே நீங்கிவிட்டனவாக இல்லை. ஆகவே தற்சமயம் நாம் ஒரு பெரும் சோதனையில் சிக்கினவர்களாயிருக்கின்றோம்.

## நம் கடமை

இது சமயத்தில் எமக்கு ஏற்பட்டிருக்கும் பலவித ஆபத்துகளிலிருந்தும் தப்பிப்பிழைத்து நம்முடையசமூகம் மேம்பாடு அடைவதற்கான விஷயங்களை ஆலோசித்து கையாடுவது அத்தியாவசியமாகும். இத்தகைய காரியங்களுக்கெல்லாம் இப்பொழுது நாம் கூடியிருக்கும் மகா நாடுபோன்ற பொதுக்கூட்டங்களே தகுந்த வாயில்களாகும். ஒரே கூட்டத்தில் நம்குறைகளெல்லாவற்றையும் நீக்கிக்கொள்வதென்றால் நம்மால் முடிந்த காரியமல்ல. ஆகையால் இப்பொழுது கூடி

யிருக்கும் மகா நாட்டின் வாயிலாக நம் மத விஷயங்களையும் நம் பிளைஞர்களின் கல்விபயிவிர்த்தி விஷயங்களையும் பற்றி மட்டுமே ஆலோசனை செய்வோமாக. இதைப்போலவே ராஜபரிபாலனத்தில் நமக்குள்ள கஷ்ட நஷ்டங்கள் போன்ற முக்கியமான விஷயங்கள் பலவுளவாயினும் அவைகளை அதற்காக ஏற்பட்டிருக்கும் முஸ்லீம் லீக் முதலிய பொதுச் சபைகளுக்கே விட்டு விடுவோமாக.

நம் தற்கால நிலமை.

நமது தற்கால நிலைமை பெரிய இடுக்கணில் அகப்பட்டிருப்பதற்கு ஐயமேயில்லை. இந்த நிலைமையிலிருந்தும் தப்பித்து நாம் நீடூழி இனிது வாழ்வது எங்ஙனம் என்பதே நமது முக்கிய கவனிப்புக்கு ஆன விஷயமாயிருக்கிறது. இப்பெருந் தீங்குகளை போக்கடிப்பதற்கான பிரதம வழி இப்பொழுது நாம் கூடியிருக்கும்படியான மகாசபைகளின் வாயிலாகக் கூடிய காரியங்களேயாகும். எல்லாம் வல்ல நாயன் கிருபையால் நமது இந்தியாவில் வடதேசத்துக்கு வத்துல் உலமா எனும் சங்கை பொருந்திய சங்கமும்,தென்னாட்டுக்கு மஜ்லீசுல் உலமா என்னும் நம் மகிமை தங்கிய சங்கமும் நம்முடைய மேம்பாட்டிற் கென்றே ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. நாளடைவில் மேற்படி சங்கங்கள் நடாத்தி வரும் விஷயங்கள் நிற்க, முக்கியமாக வருஷாந்திர மகா நாட்டிலேயே பெரிய விஷயங்கள் எல்லாம் ஆலோசிக்கப்பட்டு தீர்மான மடையவேண்டும்.

நம் வறுமைக்குக் காரணம்.

நம் வறுமைக்குக் காரணம் தற்காலம் நமது சமூகத்திற்கு ஏற்பட்டிருக்கும் கல்வியின்மையே எனக் கூறுவேன்.

இருளடைந்த உலகத்துக்கு பிரகாசத்தைக் கொணர்ந்தது நமது இஸ்லாம்மார்க்கமேயாகும். நம் பழைய சரித்திர மிவ்வாறிருக்க, நமது தற்கால நிலைமையில் கல்விப் பயிற்சி என்பது ரொம்பவும் விசனிக்கத்தக்கது. நம்மை அரசாங்கத்தாரும் கல்விப் பயிற்சியில் பிற்பட்டவர்களாய் எடுத்துவிட்டார்களென்றால் நமக்கு இதைவிட மானக்கேடு வேறு வேண்டுவதில்லை. எனவே நாம் இச்சபையில் நமது கல்வியபிவிர்த்தியைப்பற்றி தீர்க்காலோசனை பண்ணவேண்டு மென்பது சொல்லாமலே விளங்கும்.

இஸ்லாமிய சகோதரத்துவம்.

நாம் நம் கஷ்டங்களை நீக்கி முன்னேற்ற மடைவதற்குக் கல்வியபிவிர்த்தி முக்கியமானதென்று சொன்னேன். அதுமாத்திரம் போதாது. உலகத்திலுதித்துள்ள மக்களில் நம்இஸ்லாமியர் சகோ

தரத்துவத்தில் தொன்றுதொட்டே மிகவும் பிரக்கியாதியுள்ளவர்கள். இந்த பந்துத்வம் நாம் க்ஷீணதசை யடைந்துள்ள இந்நாளில் கூட ஒரு சிறிதும் குறையவில்லையென்று கூறபெருமையுள்ளவனுக விருக்கிறேன். ஆனுல் இந்த பந்துத்வத்திற்குத் தகுந்த பெருமை நமது சமூகத்திற்கு இல்லை. இதற்குக் காரணம் யாதென்று சற்று ஆலோசிக்குமளவில் நமக்குள்ளிருக்கும் பல விஷயங்களையும் கூடிக் கலந்து ஆலோசிப்பதற்கான முயற்சிகள் நம்மில் அதிகமாகவில்லை. நம் மஜ்லிசுல் உலமா என்னும் சங்கம் நமது நாட்டில் பிரபலமாகவிருந்தும், வருஷா வருஷம் கூடாமவிருப்பது ஒரு பெருங் குறையே யாகும். அது மாத்திரமல்ல. இத் தலைச்சங்கங்களுக்கு கிளைச்சங்கங்கள் ஒவ்வொரு நகரங்களிலும் ஒவ்வொரு கிராமங்களிலும் ஏற்படுத்தி, எல்லாம் ஒரு தாய் வயிற்றுப்பிள்ளைகளைப் போலவே ஒவ்வொரு இடத்திலும் நமது பொதுக் காரியங்களைச் செவ்வனே நடத்தியும்தங்களாலியலாத காரியங்களை தலைச்சங்கமூலமாகவும் மகாநாட்டின் மூலமாகவும் சமயோசிதம்போல் செய்து முடிக்கும் பட்சத்தில், நமது காரியங்களெல்லாம் ஜெயம்பெற்று, நாளடைவில் நம் சமூகம் பலவிதத்திலும் முன்னேற்றமடைந்து, நமது சமூகத்திற்கே ஒரு பெருமையும் புகழும் ஏற்படுவதுமன்றி, நம் சகோரத்துவத்தையும் ஒற்றுமையையும் நிலைபெறச் செய்யும் என்பதில் சந்தேகம் கிஞ்சித்தேனும்இல்லை.

## முஸ்லிம் தினசரி.

இத்தியாதி விஷயங்களையும் நமக்குள் பரவிவைக்கவும் நம் சமூக உண்மைகளை தக்கவாறு நமக்கு எடுத்துச் சொல்லவும் பத்திரிகைகளாலான செய்கையே தவிர வேறில்லை. இவ்விஷயத்தில் நம் சமூகத்தினரைப்போல் தரித்திரர்வேறு ஒருவருமில்லை. நம்மிந்தியாவைமட்டும் கணக்கிட்டபோதிலும் நம் சமூகத்தினர் ஏழுகோடி ஜனங்கள் இருக்கின்றேம். இதில் படித்தவர் எத்தனை பேர் என்ருல் வெகு சிலரே யாவர். அதிலும் பத்திரிகைகளைப் பார்த்து உலக விஷயங்களையும், மார்க்க விஷயங்களையும் தெரிந்து கொள்பவர்கள் இலட்சத்துக்கு ஒருவர்கூட இல்லையென்று சொல்லலாம். நம் பத்திரிகைகள் எத்தனை பரவியிருக்கின்றன என்று நாம் விசாரிப்போமேயானுல் கோடி ஜனங்களுக்கு ஒரு நல்ல பத்திரிகை கிடைப்பது அரிதாக விருக்கின்றது. நம்முடைய பாண்டித்யம் இப்படியிருக்க, வெளிநாடுகளாகிய இங்கிலாந்து, அமெரிக்கா, ஜெர்மனி, ஜப்பான் முதலிய தேசங்களில் கணக்கிட்டுப் பார்க்கும்பக்ஷத்தில் பத்திரிகை படிக்காதவர்கள் 100-க்கு 10 பேர்கூட தேரமாட்டார்கள் என்ருல் நாம் இது

விஷயத்தில் எவ்வளவு கேவல ஸ்திதியிலிருக்கின்றோம் என்பது சொல்லாமலே விளங்கும். மேற்படி தேசங்கள் உலகத்தில் பேரும், புகழும், பொருளும், அடைந்து இருப்பதற்கு இதுவே ஒருபெரிய சாதனமாகச் சொல்லலாம். எனவே, நாமும் இது விஷயத்தில் அதிக கவலைப்பட வேண்டியது அவசியம். நமது மதராஸ் மாகாணத்திலுள்ள முஸ்லிம்களைமட்டும் கவனித்துப் பார்ப்போம். தமிழ் நாட்டில் உலவிவரும் சில மாதாந்திரப் பத்திரிகைகளை விட்டுவிட்டு, தினசரி முஸ்லிம் பத்திரிகை ஏதாவது இருக்கின்றதா என்றால், ஒன்றுகூட இல்லை என்று சொல்ல என் மனம் வெட்கிக்கின்றது. நம் தமிழ் நாட்டில் நாம் 50- லட்சம் இஸ்லாமியர் இருக்கின்றோம். இவ்வளவு பேரிருந்தும், ஒரு தினசரிப் பத்திரிகைகூட இல்லையென்றால் நாம் க்ஷீண திசையில் இருந்து வருவதற்கு வேறு எந்த முகாந்திரமும் வேண்டியதேயில்லை. நமது சமூகம் முன்னேற்றமடைய வேண்டும் என்றால் நமக்குள் பத்திரிகைகளை வலுப்படுத்த வேண்டும்.

ஏன், வேறு தினசரி பத்திரிகைகள் இல்லையா? அவைகள் போதாதா? என்று கேட்கலாம். அதற்குப் பதிலாக பஞ்சதந்திரக் கதையினின்றும் ஒரு சிறு கதை சொல்ல விரும்புகிறேன். அதாவது, ஒருமனிதனுக்கும் சிங்கத்துக்கும் நடந்த யுத்தத்தில் சிங்கத்தை கீழே தள்ளி மனிதன் மேலே ஏறி உட்கார்ந்தவாறு ஒரு படத்தை ஒரு சிங்கத்தினிடத்திற் காட்டி, அப்படம் எப்படி இருக்கிறதென்று வினவ, சிங்கம் பதில் சொன்னதாவது :—இது மனிதனால் எழுதப்பட்டமையால் சிங்கத்தைக் கீழே தள்ளி மனிதனை மேலாக வைத்திருக்கின்றது. இதை ஒரு சிங்கம் எழுதியிருக்கும் பக்ஷத்தில் படம் வேறு விதமாகவே அமைந்திருக்கும் என்றது. அதேவிதமாக நான் மற்றப் பத்திரிகைகள் பேரில் குறையொன்றுங் கூறவில்லை. அவைகள் பொதுவாக எல்லோருக்கும் பலவிதத்திலும் பயன் பயக்குகின்றன. எனினும் நம்முடைய கஷ்டநஷ்டங்களையும், நம்முடைய விஷயாதிகளையும் எடுத்துரைப்பதற்கு நமது பத்திரிகைகளாலேயே கூடும். நம்மவர் கஷ்டத்தில் வேண்டிய ஊக்கமும் உருக்கமும் மற்றவரிடத்தில் எதிர் பார்ப்பது அசாத்தியம். தினசரி பத்திரிகைகள் தேசபாஷையிலும், ராஜபாஷையிலும் ஏற்பட்டு சரிவர நடந்தேறுவதென்றால் இலேசான காரியமல்ல. அதற்குத் தகுந்த பத்திராதிபர்கள் வேண்டும்; மூலதனமும் வேண்டும். இவ்விரண்டையும் விடப் பத்திரிகைகளைப் படித்து ஆதரிப்பவர்கள் முக்கியமாய் வேண்டும். இத்தியாதி விஷயங்களையும் கவனித்து அவைகளுக்கான ஏற்பாடுகள் செய்யவேண்டியது அவசியம்.

---

## அக்கிராசனர் பிரசங்கம்.

அக்கிராசனர் அல்லாமா ஹாஜி சையத் சுலைமான் நத்வி சாஹிபவர்களுடைய உர்து பிரசங்கத்தின் தமிழ் மொழிபெயர்ப்பு.

பிஸ்மில்லா ஹிர்ரஹ்மானிர் ரஹீம்.

உலகத்தாரனைவரையும் வளர்த்துப் பரிபக்குவப் படுத்துவோனாகிய அல்லாஹ்வுக்கே எல்லாப்புகழும். நபிகள் நாயகமவர்களின்மீதும் அவருடைய குடும்பத்தினரின்மீதும் தோழர்களின்மீதும், இதரரனைவரின்மீதும், இறைவனின் கருணையும் ஈடேற்றமு முண்டாவதாக!

கனவான்களே! தூரதேசத்திலுள்ள ஒருவனைத் தாங்கள் ஞாபகஞ் செய்ததற்காக உங்களுக்கு நான் நன்றி செலுத்துகிறேன். இவ்விரண்டு வருஷங்களாக ஏற்பட்டிருக்கிற மாறுதல்களாலும், சமூகச் சபைகளுக்குப்போக்குவரத்துச் செய்வதனால் என்னுடைய முக்கியக் கல்விப்போதனவேலைக்கு இடைஞ்சல் ஏற்படுவதனாலும் நான் இதர வேலைகளைத் துறந்து ஒதுங்கி இருந்து வருகிறேன். இதேவருஷத்திற் கேரள முஸ்லிம் ஐக்கிய சங்கமும், அஸ்ஸாம் இஸ்லாமியச்சபைகளும் தங்களின் வருஷாந்தரக் கூட்டங்களுக்குத் தலைமை வகிக்கும் பெருமையை எனக்களித்தன. ஆனால், நான் ஒதுங்கி இருத்தலைத் துறந்துவிட்டு வெளிவர மனம் இசையவில்லை. இப்பொழுது தாங்கள் என்னை ஞாபகஞ் செய்தபோதும் என் இருதயத்தில் மறுக்க வேண்டுமென்ற பதிலே முதலில் உண்டாயிற்றாயினும் என்மீதும் என்னுடைய வேலைகளின்மீதும் உங்களுக்கிருக்கின்ற அன்பானது என்னை ஒப்புக்கொள்ளும்படியே தூண்டிற்று. அதனால்தான், நான் இன்று உங்கள் மத்தியில் இருக்கின்றேன்.

மதராஸ் (சென்னை) வாசிகளுடன் என்னுடைய சம்பந்தம் 17-அல்லது 18 வருஷங்களாக இருந்தபோதிலும் உங்களுடைய "நத்வதுல்உலமா" சபைக்கு உங்களுடைய அனுதாபமும் உதவியும் நீண்டகாலமாக இருந்துவருகிறது. உங்களுடைய மாகாணத்திலிருந்து அச்சபைக்கு அவ்வக்காலங்களிற் கிடைத்த பொருளுதவிக்குச் சரியாக இந்தியாவிலுள்ள இதர எந்த மாகாணமுஞ் செய்யவில்லை. பம்பாய், கல்கத்தா, மதராஸ் ஆகிய இம்மூன்றுபிரதேசங்களிலும் முஸ்லிம் வர்த்தகர்கள்இருக்கிறார்களாயினும் அல்லாஹுத்தாலாவால் உங்களுக்கருளப்பெற்றிருக்கிற நல்லொழுக்கம், நற்குணம், நன்னம்பிக்கை, மதவிஷயங்களிற் சரியான உணர்ச்சி, மதம், கல்வி ஆகியவைகளில் ஊழியம் ஆகிய இவைகள் புகழத்தக்கதாகவும், நன்றி செலுத்தத் தக்கதாகவும் இருக்கின்றன.

நீங்கள் தாராளமாக உதவிசெய்துகொண்டிருக்கிற இந்த மஜ்லிசுல் உலாமாவே இதற்கு ஓர் உதாரணமாக நிற்கின்றது.

## இஸ்லாமும் மஃபர் பிரதேசமும் மலபாரும்.

உங்களுடைய சென்னைமா நகரம் புதிய நகரமாக இருந்தாலும், உங்களுடைய மாகாணத்திற்கு இது புதிய பெயராக இருந்தாலுங்கூட இது பூர்வீகமாகவே இஸ்லாத்தில் சம்பந்தமானதாக இருந்துவருகிறது. அரபிவர்த்தகர்களும், சஞ்சாரிகளும் இத்தேசத்தைப் பூர்வீக காலந்தொடுத்து அறிந்திருந்தார்கள். உங்களுடைய கடற்கரைப் பிரதேசத்தை "மலபார்" என்றும் உள்நாட்டுப்பிரதேசத்தை "மஃபர்" என்றும் அவர்களின் அரபிப் பாஷையிற் பெயர் வைத்திருக்கிறார்கள். "மஃபர்" என்ற அரபிப்பதத்திற்கு சமுத்திரத்திற்கு அப்பாலுள்ள உள்நாட்டிற்கு சொல்லப்படுகிறது. அரபிகள் சமுத்திரத்தைக் கடந்து உள்நாடுகளில் சென்றிருந்தார்களாதலால், அதற்கு "மஃபர்" என அவர்கள் நாமஞ் சூட்டியிருக்கலாம். இந்தியாவிலுள்ள ஏனைய மாகாணங்களைக் காட்டிலும் சென்னை மாகாணத்திற்கு இஸ்லாமிய சம்பந்தத்தைப் பொறுத்தவரையில் விசேஷ மதிப்பிருக்கிறது. இந்தியாவின் கடற்கரைப் பிரதேசங்களிற் சிந்துமுதல் குஜராத் கத்தியவார் வரை இஸ்லாத்திற்கு ஒரே விதமான சம்பந்தமிருந்திருக்கிறது. இக் கடற்கரைகள் முழுவதும் முஸ்லிம்வர்த்தகர்கள் செல்லும் வழியாக இருந்தன. ஆனால், இக்கரையோரங்களெல்லாவற்றிலும் இஸ்லாமிய கடற்படைகளும் சிற்சில சமயங்களில் நடமாடி இருக்கின்றன. பம்பாயிலுள்ள தானாவிலும், புரோச்சிலும் "கிலாபத்தே ராஷிதா" வுடைய காலத்திலே ஒருதரம் இஸ்லாம் மதம் ஜெயகோஷத்துடன் பிரவேசித்திருக்கிறது. ஹிஜ்ரி முதலாவது நூற்றாண்டின் இறுதியில் "பனு உமய்யா" வம்சத்து கலீபாக்களின் காலத்தில் கடற்படையும், கரைப்படையும் பலகாரணங்களினால் சிந்து பிரதேசத்தின் மீது படையெடுத்து ஒருகாலம்வரை அங்கு இஸ்லாமிய அரசாங்கத்தையும் ஏற்படுத்தி வைத்திருந்தன. ஆனால், இப்பொழுது நீங்கள் சென்னை ராஜதானியென்று சொல்லுகிற ராஜதானியை ஒட்டியுள்ளதும், அரபிகளுக்கு மிகப்பூர்வீக காலமாக அறியப்பட்டிருக்கிறதுமாகிய இக்கடற்கரைப் பிரதேசமானது எப்பொழுதும் அமைதி, சமாதானம், சிநேகம் ஆகியவைகளினாலேயே இஸ்லாமிய அரசாங்கத்துடன் சம்பந்தப்பட்டிருந்தது. $7\frac{1}{2}$ நூற்றாண்டுவரை இப்பிரதேசத்தில் முஸ்லிம் அரசாங்கத்துச் சிப்பாய் ஒருவன்கூட வரவில்லை. அவ்வாறிருந்தும், இவ்வேழரை நூற்றாண்டுகளில் முஸ்லிம்

வர்த்தகர்கள், சஞ்சாரிகள், உலமாக் (அறிஞர்) கள், சூபிகள் ஆகிய வர்களின் மூலமாக இப்பிரதேசத்திலும், இதன் கரையோரத்திலும், இதனண்டையிலுள்ள தீவுகளிலும் மிக விரைவாக விருத்தியடைந்து கொண்டும், பூரண அமைதியுடனும், சமாதானத்துடனும் பரவிக் கொண்டுமிருந்தது.

எனக்குத் தெரிந்தவரை இத்தேசத்தில் முதல் முதலாக "முஹம்மது டோக்லக்" என்பவரின் பார்வை சென்றது. ஆனால், காலசீதோஷ்ண ஸ்திதி சரியானதாக இல்லாததால் அவருடைய சைனியங்கள் முன்னேறி வருவதற்குத் தைரியங்கொள்ளவில்லை.

எட்டாவது நூற்றூண்டின் மத்தியில் தக்ஷணத்தில் (டக்கான்) பாமினி அரசாங்க மேற்பட்டது. அக்காலத்திலிருந்து இங்கு முஸ்லீம் சிப்பாய்களின் போக்குவரத்து ஆரம்பமாயின. பாமினி அரசாங்கத்தின் சேனாதிபதியான "மலிக் ஸைபுத்தீன்கோரி" இப் பிரதேசத்தில் ஜெயசீலராகப் பிரவேசித்தார். முதலாவது, பாமினி சுல்தானாகிய "அலாவுத்தீன் ஹசன் கங்கூ" என்பவர் ஹிஜ்ரி 748-ல் பட்டத்துக்குவந்து ஹிஜ்ரி 759-ல் மரணமடைந்திருக்கிறார். இதைக் கவனிக்கையில் மலிக்ஸைபுத்தீன் கோரி இப்பிரதேசத்தில் 750-ல் படையெடுத்திருக்கலாம் என யூகிக்கமுடியும். ஆதலால், ஏழுரை நூற்றூண்டுகளாக இப்பிரதேசத்துடன் இஸ்லாத்தின் சம்பந்தமானது சிநேகபான்மையுடனும், சமாதானத்துடனும் இருந்ததெனக் கூறமுடியும்.

நீண்டகாலமாக இருந்த அமைதிக்கும், சிநேகத்திற்கும், முக்கிய காரணமென்னவெனில் இப்பிரதேசத்திலும், இதைச்சார்ந்த தீவுகளிலும் வியாபாரத்திற்கு முக்கிய வர்த்தகர்கள் அரபிகளாகவே இருந்தனர். இவர்கள் இங்கிருந்து சந்தனம்,இலவங்கம், ஏலக்காய் முதலிய வாசனைத் திரவியங்களைப் பூர்வீக காலத்திலிருந்து இக்காலம் வரை கப்பலில் ஏற்றுமதிசெய்து அரப், ஷாம், ஐரோப்பா முதலிய இடங்களிலுள்ளவர்த்தகர்களுக்கு அனுப்புவதும், அவ்விடங்களிற்செய்யப்படும் சாமான்களை இத்தேசத்திற்குக் கொண்டுவருவதுமாக இருந்தார்கள்.இவ்வரபி வியாபாரத்தினால் இவ்விடத்திய ராஜாக்களும், அரபிகளும் அதிக லாபம் அடைந்தனர். ஆதலால், இவ்விருவர்களும் அமைதியையுஞ் சமாதானத்தையும் உண்மையாகவே விரும்பினர். அரபி தேசத்திற்கும் "மலபாருக்கும்" அதாவது சென்னைக்கடற் கரைப் பிரதேசங்களுக்கும் ஏற்பட்டிருந்த இந்தச் சம்பந்தமானது என்னுடைய ஆராய்ச்சிக்குத் தெரிந்தவரை "தௌராத்வேதத்" தினுடைய காலமுதல் கி. பி. 17-வது நூற்றூண்டு வரை அதாவது,

'போர்ச்சுகீசியர்கள்' வந்து அரபி வியாபாரிகளின் கப்பல்களை நாசஞ் செய்து இவ்வியாபாரத்தைத் தங்கள் வலிமையினால் நிறுத்தும்வரை இருந்தது. நம்முடைய "மாப்பிள்ளைச்" சகோதரர்களும் -'நவாயித்தா" சகோதரர்களும் அரபிக்கும், சென்னை மகாணத்திற்கும் பல நூற்றாண்டுகளாக உள்ள சம்பந்தத்திற்கு ஞாபகார்த்தமாக இருக்கிறார்கள்.

கனவான்களே! இஸ்லாம் மதமானது வாள் பலத்தினால் மாத்திரம் பரவிற்றெனக் கருதும் குருட்டு நம்பிக்கைக்காரர்களுக்கு மறுமொழியாக இருப்பதற்காக இப்பிறதேசத்தில் இஸ்லாம் மதம் ஏழுநூற்றாண்டுகள் வரை அமைதியாவும் சமாதானமாகவும் விருத்தியானதைப்பற்றிக் கவனித்தல் அவசியமாகும். இத்தேசத்தின் பழைய சரித்திரம் எதுவுமில்லாதது வருந்தத்தக்கது. ஹிஜ்ரி 11-வது நூற்றாண்டின் ஆரம்பத்தில் எழுதப்பெற்ற "துஹ்பத்துல் முஜாஹிதீன்" எனும் ஒரு சரித்திரப் புத்தகம் மாத்திரம் இருக்கிறது. இதைத் தவிர, இது சம்பந்தமான ஆதாரங்களை அதிகமாகத் தேடிப் பார்த்ததில் அரபி சஞ்சாரிகளின் பிரயாணக் குறிப்புப் புத்தகங்களிலிருந்துஞ் சில விபரங்கள் கிடைத் திருக்கின்றன. அவைகள் மேற்கண்ட "துஹ்பத்துல் முஜாஹிதீன்" என்னும் நூலை ஆதரிக்கின்றன.

அரபிகள் சென்னைமாகாணக் கடற்கரைப் பிரதேசத்திற்கு "மலபார்" என்றும் உள்நாட்டிற்கு "மக்பர்" என்றும் கூறுகிறார்கள் எனக் கூறி இருக்கிறேன். இதற்கு அக்கம்பக்கத்துத் தீவுக்காரர்களுக்கு அவர்கள் "தீபாத்" என்று கூறுகிறார்கள். "தீப்" என்பது சமஸ்கிருத பாஷையில் தீவு என்று பொருள். இதன்படி அரபிகள் "மாலாயப்" (மஹல்லதீவு) "சங்கல்தீப்" (இலங்கை) என்று கூறுகிறார். இவ்விடங்களில் இஸ்லாம் மதம் வியாபாரிகளின் மூலமாகப் பரவிற்றென்பது எல்லோராலும் ஒப்புக்கொள்ளப் பெற்றவிஷயமாகும். இம்மதம் உண்மையானது, சத்தியமானது என்பதற்கு ஆதாரமாகச் சந்திரனைப் பிளந்த அற்புதம் உபயோகமாகி இருக்கிறது. ஆனால், இவ்வற்புதத்தை இவ்விடத்திலுள்ள ஜனங்கள் நேரிற்பார்த்தார்களா? அல்லது, முஸ்லிம் மதப்பிரசாரகர்கள் தங்கள் நபி உண்மையான தீர்க்கதரிசிதான் என்பதற்கு ஆதாரமாக இவ்வற்புதத்தைக் கூறினார்களா? என்பதிலும் சந்தேகமிருக்கிறது. ராஜாக்களின் புத்தகாலயங்களில் நக்ஷத்திரங்களின் மாறுபாடுகள் சம்பந்தமான குறிப்புப் புத்தகங்கள் இரண்டாவதை ஆதரிக்கின்றன. இது முதலாவது அபிப்பிராயபேதம். மலபாரிலுள்ள ராஜாவை இஸ்லாம் மதத்திற்சேரும்

படி வைத்தார்களா? அல்லது மால்தீப் (மஹல்லதீவு) உடைய ராஜாவையா? இவ்விருவரிலும் முதலில் இஸ்லாம் மதத்தைத் தழுவியவர் யார்? என்பது இரண்டாவது அபிப்பிராயபேதம். இவ் வரசர்கள் உண்மையை விசாரித்தறிய அரபிதேசத்துக்கு அவர்களே நேரிற் சென்றார்களா? அல்லது அவர்களுடைய பிரதிநிதிகளா? என்பது மூன்றாவது அபிப்பிராய பேதம். எவ்வாறாயினும் இது உண்மையான சம்பவம்தான். இது ஹிஜ்ரி முதலாவது நூற்றாண்டின் ஆரம்பத்தில் நடந்திருக்கிறது.

முஸ்லிம் வார்த்தகர்களைத் தொடர்ந்து உலமாக்களும் தர்வேஷ்களும் இப்பக்கம் வருவதற்கு அவர்களுடைய மனத்தை இழுத்தது என்னவெனில் "ஹஜ்ரத் ஆதம் அலைஹிஸ்ஸலாம்" அவர்கள் பூமியில் இறங்கியபோது முதலாவது அடியானது "சங்கல் தீப்" அல்லது "சரந்தீப்" (இலங்கை) இல்பட்டது என்றும், அவருடைய அடிச்சுவடானது அத்தீவிலுள்ள ஒரு மலையின் மீதிருக்கிறது என்றும் கூறப்பட்ட செய்திதான். அவ்வடிச்சுவட்டைப் பார்ப்பதற்காக நூற்றுக்கணக்காகவும், ஆயிரக்கணக்காகவும் யாத்திரிகர்கள் இப்பக்கம் வர ஆரம்பித்தார்கள். இதன் பலனாக இப்பாகத்தில் இஸ்லாம் மதப்பிரசாரம் என்ற ரூபமாக வந்தது. ஆகவே, ஆலிமாகவும், தர்வேஷமாகவு மிருந்த 'மாலிக் இப்னுஹபீப்' என்பவரின் பெயர்தான் இதில் முதலாவதாகக் கூறப்படுகிறது. இவரும் இவருடைய சகாக்களும் இவ்வடிச்சுவட்டைத் தரிசிப்பதற்காக இப்பக்கம் வந்தார்கள். இவர்களின் மதப்பிரசாரமானது முதல் முதலாக இஸ்லாம் என்ற விருக்ஷத்தை இப்பிரதேசத்தில் ஊன்றிற்று. இவர்களின் முயற்சியினால் இத்தேசத்தில் "கராங்கானூர்" என்ற ஸ்தலத்தில் முதல் முதலாக மஸ்ஜிது கட்டப்பட்டது. அரபி வியாபாரிகளின் கப்பல்கள் இராக்கிலிருந்தும், அம்மான் துறைமுகத்திலிருந்தும் சாமான்களை ஏற்றிக்கொண்டு இவ்விடத்திற்கு வருவதும் கடற்கரையோரமாக வுள்ள தீவுகளில் அரபிகள் தங்குவதும், பின்பு சீன தேசத்திற்குச் செல்லுவதும், பின்பு சீனாவிலிருந்து வருகையில் இதே வழியாகச் செல்லுவதுமாக இருந்தன. இதன்படி இது அரபி வியாபாரிகளுக்கும், பிரயாணிகளுக்கும் ஸ்திரமான பாதையாக இருந்திருக்கிறது. போக்குவரத்து அதிகமாக இருந்திருக்கிறது. அநேக அரபிகளும், இதர முஸ்லிம்களும் இவ்விடத்தில் வாசம் செய்ய ஆரம்பித்திருக்கின்றனர் அவர்கள் இவ்விடத்தில் விவாகங்கள் செய்யவும் ஆரம்பித்திருக்கின்றனர். இவ்விடத்திய ராஜாக்களின் தர்பார்களில் தாங்களும் மரியாதையையும் கௌரவத்தையுஞ்

சம்பாதித்துக் கொண்டிருக்கின்றனர். இவ்விடங்களில் முஸ்லிம்களுக்குச் சரியான குடியேற்ற ஸ்தலங்கள் ஏற்பட்டிருந்திருக்கின்றன. இவர்களின் மூலமாக சுதேசிகளும் இஸ்லாம் மதத்தைத் தழுவ ஆரம்பித்திருக்கின்றனர்.

"சுலைமான்ஸைராபி" என்ற அரபி வியாபாரி, ஹிஜ்ரி 237-ல் எழுதிய தன்னுடைய பிரயாணக் குறிப்புப் புத்தகத்தில் எல்லாவற்றிற்கும் முதலில் சரந்தீபை (இலங்கை) யும், ஹஜ்ரத் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களின் அடிச்சுவட்டையும் பற்றிக் கூறியிருக்கிறார். இத்தீவு அம்பர், முத்து, தேங்காய் ஆகியவைகளுக்கு அரபி தேசமெங்கும் கியாதிபெற்றிருந்தது. "சுலைமானு"க்கு, 25 வருஷங்களுக்குப் பின் "அபூத்ஸைத்ஸைராபீ" என்றவர் வந்தார். இவர் இத்தீவில் அரபி வியாபாரிகள் குடியேறி இருப்பதாகவும், இங்குள்ள கொள்ளைக்காரர்களாலும் திருடர்களாலும் பல கஷ்டங்களை அனுபவித்து வந்ததாகவும் கூறி இருக்கிறார். மூன்றாவது நூற்றாண்டின் இறுதியிலும், நான்காவது நூற்றாண்டின் ஆரம்பத்திலும் "புஸரங்இப்னுஷஹர்யார்" என்ற ஓர் அஜமிக் கப்பலோட்டி தம்முடைய கடற்பிரயாணத்தைப்பற்றி எழுதி இருக்கிறார். அவருடைய காலத்தில் இப்பாகங்களிலும் தீவுகளிலும் இஸ்லாமியக் குடியேற்ற ஸ்தலங்கள் இருந்தனவென்பதன் அறிகுறிகள் அதிகமாகத் தெளிவாகத் தெரிகின்றன. அவர்களுக்குள் ஆலிம்களும் காஜிகளும் இருந்ததாகவும் காணப்படுகின்றன. அவர்களை அவர்கள் "ஹுனர்மந்து" என்றழைத்து வந்திருக்கிறார்கள். மலபாரிலுள்ள "ராஜாஜீழரன்" என்பவரிடத்திலும், சிங்கப்பூர், ஜாவா, இலங்கை, மஹல்லதீவ், அந்தமான் ஆகிய இடங்களிலும் இவர்கள் வியாபாரக்கப்பல்கள் சென்று இவ்விடங்களிலுள்ள ராஜாக்களின் தர்பார்களிலும் முஸ்லிம்கள் சென்றிருக்கிறார்கள். அவ்விடங்களில் இஸ்லாம் பரவிக்கொண்டே இருந்திருக்கிறது. தினேதினே புதிய முஸ்லிம்கள் சேர்ந்துகொண்டிருக்கிறார்கள். முக்கியமாக சென்னைமாகாணத்திலுள்ள நகரங்களில் கள்ளிக்கோட்டை, கொல்லம், பாங்கனூர், காஜர்கோர், மங்களூர் ஆகிய இடங்களில் மஸ்ஜிதுகள் கட்டப்பட்டிருக்கின்றன.

ஐந்தாவது நூற்றாண்டிலிருந்த மொரோக்கோவிலுள்ள பூகோள சாஸ்திரியான "இப்னுஸஊது" என்பவர் கொல்லத்தைப்பற்றி 'இது மஸாலூன்களின் கடைசி நகரம். சமுத்திரத்தின் கரையோரத்தில் இருக்கின்றது. இங்கு முஸ்லிம்களின் மஹல்லா (Ward—வார்டு) ஒன்றும், ஒரு ஜாமியேமஸ்ஜிது ஒன்றும் இருக்கின்றன என்றெழுதி இருக்கின்றார்.

இதற்குப்பின், ஏறக்குறைய 1¼ நூற்றாண்டுக்குப் பின்மொரோக் தேசத்து, பிரபல சரித்திரக்காரரான "இப்னுபத்தூதா" என்பவர் "முகம்மதுஷாஹ் டோக்லக்" உடைய காலத்தில் இந்தியாவுக்கு வந்திருக்கிறார். பின்பு, இவ்வரசரின் பிரதிநிதியாகச் சீனதேசத் திற்குச் சென்றார். இக்காலமானது எட்டாவது நூற்றாண்டின் மத் திபகாலமாகும். இதுவரை சென்னை மாகாணப் பிரதேசத்தின்மீது முஸ்லிம்கள் படையெடுக்கவில்லை. ஆனால், இதற்குச் சில வருஷங் களுக்குப் பின்புதான் விஜயநகரம், கர்னாடகம் ஆகிய தேசங்களின் அரசர்களுடன் யுத்தம் ஆரம்பமாயிற்று. "இப்னுபத்தூதா" என் பவர் டில்லியிலிருந்து கம்பாயத்துக்கும், அங்கிருந்து கந்தாருக்கும், அங்கிருந்து கூர்கா என்ற நகரத்திற்குஞ் சென்றார். அவ்விடத்தில் முஸ்லிம்களின் ஜனத்தொகை ஓரளவு இருந்தது. ஹஜ்ரத் 'ஹிலிரு அலைஹிஸ்ஸலாம்' அவர்களின் பெயரால் இங்கு ஒரு மஸ்ஜிதுமிருந் தது. இது மாலுமிகளாற் கட்டப்பட்டது. அங்கு "ஹைதரீதர் வேஷ்கள்" தங்களின் ஷெய்கு உடன் வாசஞ்செய்துகொண்டிருக்கி றார்கள். இவ்விடத்திலிருந்து அவர் (இப்னுபத்தூத்தா) சிங்கப் பூருக்குச் சென்றார். இங்கு ராஜாஹரீப்புக்கு உட்பட்ட சுல்தான் "ஜமாலுத்தீன் ஹனூரிக்கு" ஒரு சமஸ்தானம் இருந்தது. அதன் தலைநகரம் முஸலிம்களால் குடியேறப்பெற்றதாக இருந்தது. இதனு டைய ஜாமியே மஸ்ஜிது பக்தாதிலுள்ள மஸ்ஜிதுகளுக்குச் சரிசமமாக இருந்தது. இம்மஸ்ஜிது சுல்தான் "ஜமாலுத்தீன் ஹனூரியின்" தகப்பனாரான "ஸன்நாகுதா" வாற்கட்டப்பெற்றது.

இவர் மாலுமியாக இருந்து அரசு செலுத்தும் பதவியைஅடைந் தவர். இத்தீவுக்கும் பக்கத்திலுள்ள ஒரு தீவின் கோவிலில் யோகி களைப்போல் வேஷம்பூண்ட "நௌமுஸ்லிமை" "இப்னுபத் தூத்தா" பார்த்திருக்கிறார்.

சிங்கப்பூரிலிருந்து இவர் (இப்னுபத்தூத்தா) மலபாருக்கு வந் தார். அப்பொழுது இத்தேசத்தில் சிற்றரசர்கள், பெரிய அரசர் கள் உட்படமொத்தம் பன்னிரண்டு இந்து அரசர்கள் அரசாங்கஞ் செலுத்திக்கொண்டிருந்ததை அவர் பார்த்திருக்கிறார். தேசம் மிகச் செழிப்பாக இருந்தது. முஸ்லிம்களுக்கு அதிகமரியாதையுமிருந்தது. ஆயினும், ஹிந்துக்கள் முஸ்லிம்களுடன் சாப்பிடுவதில்லை. அவர்கள் வீட்டிற்குவந்தாலும், அல்லது ரஸ்தாவிற் செல்லும்போதும் அவர்க ளைக்கண்டாலும் முஸ்லிம்களின் மீதுபடாமல் ஒதுங்கிக்கொண்டிருந் தார்கள். முஸ்லிம் வியாபாரிகள், கப்பலோட்டிகள் ஆகியவர்களால் கட் டப் பெற்ற சத்திரங்கள் ஆங்காங்கு இருந்தன. முஸ்லிம்கள் எங்கும்

காணப்பட்டனர். இவர் மலபாரில் முதல் முதல் சென்ற ஊர் "ஆபி சுரூர்" என்றும் இது சமுத்திரக் கரையிலிருந்தாகவும், தெரிய வரு கிறது. இவ்விடத்தில் முஸ்லிம்களுக்கு "ஷெய்குஜுமூம்ஆ" என்பவர் தலைவராக இருந்தார். இவர் தர்ம சிந்தனையுள்ளவராகவும் அதிக புத்திசாலியாகவும் இருந்தார். பின்பு இங்கிருந்து "பாக்கனூருக்கு" இப்னு பத்தூத்தா சென்றார்.

இவ்விடத்திலும் முஸ்லிம்களின் வாசஸ்தலமிருந்தது. இவர் களுக்கு "ஹுஸைன் சலாத்" என்பவர் தலைவராக இருந்தார். இவ ரால் கட்டப்பெற்ற மஸ்ஜிது ஒன்றும் உண்டு. இதற்கு கத்தீபும், இமா மும் இருக்கின்றனர். இவ்விடத்திற்கு பாஸ்தேவ் என்பவர் இராஜா. இவருக்கு 30 யுத்தக் கப்பல்களிருந்தன. ஆனால், இவைகளின் காப் டன்(தலைவர்) முஸ்லிமாக இருந்தார். இவர்க்குப்பின் அவர்"மங்குரூர்" என்ற ஸ்தலத்திற்குச் சென்றார். அங்கு பாரசீகம், யமன் ஆகிய தேசங்களின் வியாபாரிகளை அவர் கண்டார். இவ்விடத்தில் ராம் தேவ் என்பவர் அரசராக இருந்தார். அங்கு நான்காயிரம் முஸ்லிம்களி ருந்தார்கள். பிரஜைகள் அவர்களிடம் சிநேகமாக இல்லாவிட்டா லும், வியாபாரம், வர்த்தகம் ஆகியவைகளை முன்னிட்டு ராஜா அம் முஸ்லிம்களுடன் நேசமாக இருந்தார். "பத்றுத்தீன்" என்பவர் இவ்விடத்தில் முஸ்லிம்களுக்கு காஜியாக இருக்கிறார். அவர் இங்கு மதக்கல்வி போதித்தும் வருகிறார். "மங்குரூரி" லிருந்து அவர் (இப்னுபத்தூதா) "ஹப்லிக்குச்" செல்லுகிறார். "ஹஸன் பதாயி" என்பவர் இங்குள்ள முஸ்லிம்களுக்குத் தலைவராக இருக்கி றார். இவ்விடத்தில் ஓர் பெரிய மஸ்ஜிது ஒன்றிருக்கிறது. அதன் காரணமாக இங்குள்ள முஸ்லிம்களும் ஹிந்துக்களும் இந்நகரத்தைப் புண்ணிய க்ஷேத்திரமாகக் கருதுகின்றனர். கப்பற்காரர்கள் இம் மஸ்ஜிதுக்குக் காணிக்கை செலுத்துகின்றனர். இம்மஸ்ஜிதில் ஒரு மத்ரசாவுமிருக்கிறது. அதில் மாணவர்களுமிருக்கின்றனர். மாண வர்களுக்கு மஸ்ஜிதின் பொக்கிஷத்திலிருந்து உபகாரச்சம்பளமும் ஏழைகளுக்கும், பிரயாணிகளுக்கும் இலவசமாகக் கிடைக்கிறது. "மக்தஷ்வா" (ஆப்பிரிக்கா) தேசத்து தர்வேஷ் ஒருவர் இங்கு இருந் தார். அங்கிருந்து அவர் (இப்னுபத்தூத்தா) குரு பட்டணத்திற் குச் சென்றார். அவ்விடத்தில் பத்தானு நகரத்து ஆலிம் ஒரு வரைச் சந்தித்தார். இவருடைய சகோதரர் இவ்விடத்தில் பெரிய வியாபாரியாக இருந்தார். "கோயல்" என்பவர் இவ்விடத்து அர சர். இவ்விடத்திலிருந்து பாரசீகம், அம்மான், யமன் ஆகிய தேசங்க ளுக்குக் கப்பல்கள் சென்றன. இவ்விடத்திலிருந்து அவர்

(இப்னுபத்தூத்தா) பட்டணமென்ற ஸதலத்திற்குச் சென்றூர். இங்குள்ள அரசர் ராஜா "கோயலுக்குக்" கீழ்படிந்தவர். ராஜா "கோயல்" உடைய தகப்பனுரால் கட்டப்பெற்ற ஜாமியே மஸ்ஜித் ஒன்றும் குளம் ஒன்றுமிருக்கிறது. இந்த அரசரின் முன்னேர்களில் ஒருவர் முஸ்லிமாக இருந்திருக்கிறூர். அவர் இஸ்லாம் மதம் தழு வியதைப்பற்றிக் கதை ஒன்றுண்டு. அதாவது இம்மஸ்ஜிதில் ஒரு மரம் இருந்தது. இலையுதிர்காலத்தில் இம்மரத்திலிருந்து விழுகிற இலைகளில் ஒன்றில் "திருக்கலிமாதையிபா" எழுதப்பட்டிருந்தது. அவ்விலை விழுந்தவுடன் அதில் ஒரு பாதியை ஹிந்துக்களும், மற் ெருரு பாதியை முஸ்லிம்களுமாகப் பாகித்துக்கொண்டிருந்தனர். இவ் வற்புதத்தைப் பார்த்த அரசர் இஸ்லாம் மதம் தழுவி அவ்விடத்தில் ஒரு மஸ்ஜிதும் குளமும் கட்டுவித்தார். பின்பு அவருடைய மக்களில் யாரும் இஸ்லாம் மதத்தை தழுவவில்லை. இவ்விடத்திலிருந்து இவர் "பத்" பட்டணம் (பாலா பட்டணம்) செல்லுகிறூர். இது சமுத்திர கரை ஓரத்திலிருக்கிறது. நரகத்திற்கு வெளியில் ஒரு மஸ்ஜிது இருக்கிறது. அதில் முஸ்லிம் பிரயாணிகள் தங்குகிறூர்கள்.

இவ்விடத்தில் பிராமணர்கள் வசிக்கிறூர்கள். இவர்களுக்கு முஸ்லிம்களின்மீது வெறுப்பு அதிகம். ஆதலால்தான் இங்கு முஸ் லிம் எவரும் குடியேறவில்லை. மஸ்ஜிதும்கூட அவர்களுடைய அக் கிரமத்திலிருந்து தப்பித்ததற்கு அம்மஸ்ஜிதில் மேல் முகட்டை இடித்த பிராமணன் வீடு நெருப்புப்பற்றி எரிந்ததாகவும், அதனுல் அவர்கள் அன்றுமுதல் அம்மஸ்ஜிதைப் புநிதமானதெனக்கருதத் தலைப்பட்டனர் என்றும் சொல்லப்படுகிறது. இங்கிருந்து அவர் (இப் னுபத்தூத்தா) "பந்தர்யா" என்ற ஸ்தலத்திற்குச் சென்றூர். அங்கு முஸ்லிம்களுக்கு மூன்று "மஹல்லாக்கள்" இருப்பதையும் ஒவ்வொரு மஹல்லாவிலும் ஒவ்வொரு மஸ்ஜிது இருப்பதையும் கரை யோரத்தில் ஜாமியேமஸ்ஜித் ஒன்றிருப்பதையும் அவர் கண்டிருக் கிறூர். "அம்மான்" நகரத்து அரபி ஒருவர் இங்கு காஜியாகவும், கத்தீபாகவும் இருக்கிறூர். சீன்தேசத்துக் கப்பல்கள் பனிகாலத்தில் இங்கு தங்குகின்றன.

இவ்விடத்திலிருந்து அவர் இப்னுபத்தூத்தா கள்ளிக்கோட் டைக்கு வந்தார். அங்கு "சாமிரி" என்ற ஹிந்து அரசராக இருந் தார். இந்நகரம் உலகத்திய பெரியதுறை முகங்களி லொன்று. சீனு, ஜாவா, சிலோன், மஹல்லதீவு, பாரசீகம் ஆகிய தேசங்களின் கப்பல் கள் இங்கு வருகின்றன. உலகத்திலுள்ள வியாபாரிகளும் வர்த்தகர் களும் இங்கு ஒருவரை ஒருவர் சந்திக்கின்றனர். "பஹ்ரைன்"

தேசத்து முஸ்லிம் வியாபாரியான "இப்ராஹீம் ஷாஹ்பந்தர்" என்பவர் இவ்விடத்திய வியாபாரிகளுக்குத் தலைவரா (மலிக்குத்துஜாராக) இருக்கிறார். இவ்விடத்திய காஜியின் பெயர் "பத்ருத்தீன் உதுமான்" "கான்காஹ்" (தர்கா)வுக்கு "ஷெய்குஷஹாபுத்தீன் காஜரூனி" "பாரசீகவாசி" ஒருவர் தலைவராக இருக்கிறார். இவருக்கு ஹிந்துக்களிடமிருந்தும் சீனர்களிடமிருந்தும் காணிக்கைகள் கிடைக்கின்றன. இவ்விடத்தில் "நாகுதாமித்கால்" என்ற ஒரு முஸ்லிம் தனவந்தர் இருக்கிறார். அநேகம் கப்பல்களுக்குச் சொந்தக்காரராகவும் இருக்கிறார். இவருடைய கப்பல் இந்துஸ்தான், சீனா, யமன், பாரசீகம் ஆகிய தேசங்களிலிருந்து வியாபாரச் சாமான்களை இங்கு கொண்டு வந்து இறக்குமதி செய்வதும், இங்கிருந்து அன்னிய தேசங்களுக்குச் சாமான்களைக் கொண்டுபோவதுமாக இருக்கின்றன. இவ்விடத்தில் பல பெரிய முஸ்லிம் வர்த்தகர்கள் இருக்கிறார்கள்.

"இப்னுபத்தூத்தா" என்ற சரித்திரக்காரர் இத்தேசத்திற் பிரயாணஞ்செய்த விவரத்திற் கடைசி விபரங்கள் இவைகள்தாம். இதற்குப் பின்புதான் பஹ்மினி அரசாங்கமும் விஜய நகரத்தின் ஹிந்து அரசாங்கமும் உண்டாயின. இவைகள் கிட்டத்தட்ட நூற்றைம்பது வருஷங்கள் வரை இருந்தன.

எவ்வாறாயினும் சென்னை மாகாணத்தில் இஸ்லாம் அமைதியாகப் பரவின விபரத்தை உங்களுக்குக் கூறிவிட்டோம். இங்கு முஸ்லிம் அரசாங்கத்தின் சிப்பாய் ஒருவன் கூடவராமலிருந்த காலத்திலுங்கூட எல்லா இடங்களிலும் இஸ்லாமிய குடிகள் இருந்திருக்கின்றன. மஸ்ஜிதுகள் இருந்தன. இங்கு முஸ்லிம் மாலுமிகள் சமுத்திரத்திற் கரசராக இருந்திருக்கின்றனர். துறைமுகங்களுக்குச் சொந்தக்காரர்களாக இருந்தனர். அவைகள் மேனாட்டுக்கும் கீழ் நாட்டுக்கும் இடையில் வியாபார மண்டிகளாக இருந்தன. இவர்களின் நன்னடத்தை, உண்மை ஆகியவைகள் ஹிந்து பொது ஜனங்களை மாத்திரமல்லாது இராஜாக்களையுங் கூட இஸ்லாம் மதத்தைத் தழுவும்படிச் செய்தன. இச்சம்பவங்கள் இஸ்லாம் மதத்தின் சத்தியத்தையும், இஸ்லாம் மதப்பிரசாரத்தின் சரியான முறையையும் உங்களுக்குச் சமர்ப்பித்துக் கொண்டிருக்கின்றன.

கனவான்களே! இவ்வேழரை நூற்றாண்டுகளுக்குப் பின் பாமினி அரசாங்கம் ஏற்படுகிற காலம் வந்தது. ஜெயக்கொடி நாட்டுகிற முஸ்லிம் அரசர்களைத் தடுப்பதற்காக எல்லைப்புறத்தில் விஜயநகரம் என்னும் பட்டணத்தை உற்பத்தி செய்யப்படுங்காலமும் வந்தது. இவ் விஜயநகர அரசாங்கத்திற்குள் கிட்டத்தட்ட சென்னை மாகா

ணம் முழுவதும் சேர்ந்திருந்தது. மேலும், அதற்கு அதிகமாகவே சேர்ந்ததாகவும் கூறவேண்டும். இவ் விராஜ்ஜியத்தின் விஸ்தீரணம் "இலங்கையின் எல்லைப் புறத்திலிருந்து தக்ஷணம் வரையிலும், மலபார் கடைசியிலிருந்து வங்கநாட்டின் எல்லைப்புறம் வரை இருந்தது" என முஸ்லிம் சரித்திரக்காரர்கள் கூறியிருக்கிறார்கள்.

சென்னை மாகாணப் பிரதேசத்தின் மீது முஸ்லிம் அரசர்களின் ஆதிக்கம் சட்ட முறைப்படி எப்பொழுதும் ஏற்பட்டதேயில்லை யென்பது உண்மை. ஹிஜிரி 750-முதல் 895-வரை பாமினி அரசாங்கம் இருந்தது. இந்நூற்றைம்பது வருஷகாலத்தில் இவ்விரு அண்டை அரசாங்கங்களும் பலம் பெறும்போதெல்லாம் ஒன்றை மற்றொன்று தாக்கிக்கொண்டே இருந்தன. விஜயநகர அரசாங்கம் தோல்வியுற்றபோது யுத்த நஷ்ட ஈடும் கப்பமும் கொடுத்தது. ஆனாலும், இக்காலத்தில் "பட்கல்லா" வுக்கும் ராய்ச்சூருக்கும் அப்புறம் பாமினி அரசர்களுக்கு நேரடியான ஆதிக்கம் ஏற்படவில்லை. ஒன்பதாவது நூற்றாண்டின் இறுதியில் பாமினி அரசாங்கம் துண்டு துண்டாகப் பிரிந்துவிட்டது. அவைகளிலிருந்து பீஜப்பூரிலுள்ள "ஆதில் ஷாஹ்" அரசர்களுக்குச் சென்னையைச் சுற்றிய பாகம் கிடைத்தது. ஹிஜிரி 895-லிருந்து 971-வரை விஜயநகர அரசாங்கமானது சில சமயத்தில் இவ்வரசாங்கத்தை வென்று அடக்கிற்று. வேறு சில சமயத்தில் முஸ்லிம்களின் அரசாங்கங்களால் நஷ்டமேற்பட்டுப் பலக் குன்றிற்று. கடைசியாக விஜயநகர சிப்பாய்கள் மஸ்ஜிதுகளை இடித்தனர். மின்பர்களைத் தகர்த்தனர். திருக்குர்ஆனைக் கிழித்தனர். முஸ்லிம்களைக் கொலை செய்தனர். இவ்வாறு அவ்வரசாங்கம் செய்ததானது முஸ்லிம்களைக் கண்விழிக்கச் செய்தது. முஸ்லிம்களின் எல்லாச் சிற்றரசாங்கங்களும், தங்களுக்குள் உள்ள வேற்றுமைகளைச் களைந்து ஒன்று சேர்ந்தன. 873-ம் வருஷத்தில் விஜயநகரத்தை எதிர்த்துத் தாக்கி அதன் மத்திய சக்தியை நாசஞ்செய்தன. ஆயினும், தேசத்தின் பாகம் இம் முஸ்லிம் அரசாங்கங்களுக்குக் கிடைக்கவில்லை. விஜயநகர அரசாங்கத்தின் கீழிருந்த பெரிய பெரிய ராஜாக்கள் தங்களிடத்தில் தனித்தனியே சுயேச்சையான அரசாங்கத்தை ஏற்படுத்திக் கொண்டார்கள். இதற்கு இருபத்து ஐந்து அல்லது முப்பது வருஷங்களுக்குப் பின் டில்லி தேசத்து டைமூர் அரசர்களின் கையில் இவ்வரசாங்கங்கள் முடிவடைந்த புதிய நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்து புதிய அரசாங்கங்கள் உண்டாக வாரம்பித்தன.

இவைகள் இம்மாகாணத்தில் இஸ்லாத்தின் இரண்டாவது காலத்திய விபரமாகும். ஹிஜிரி 750-முதல் 1000-வரை நடைந்த

இவ்விருநூற்றைம்பது வருஷகாலத்திலும் பல வருஷகாலத்திலுங்கூட முஸ்லிம்கள் எந்த அரசாங்கத்தையும் ஏற்படுத்துக்கொள்ளவில்லை.

ஆயினும், விஜயநகரத்தின் அரசாங்க எல்லைக்குள் முஸ்லிம்களின் ஜனத்தொகை பெருகிக் கொண்டே இருந்தது. ஒரு காலத்தில் அவ்வரசாங்கத்தின் சைனியத்தில் பதினயிரம் முஸ்லிம்கள் வேலைக்கமர்ந்திருக்கின்றனர்.

டைமூர் அரசர்களின் கைவசத்திலுங்கூட இத்தேச முழுவதும் அவர்களின் கைவசத்தில் பூரணமாக வந்து விடவில்லை. டைமூரிகளின் கீழ் இருந்த தக்கணப் பிரதேசத்திற்கு இம்மாகாணம் உட்பட்டிருந்ததாகவே கருதப்பட்டது. ஆற்காடு என்ற மாகாணம் உண்டாயிற்று. கடைசியாக கர்னடகத்தில் தக்கண மாகாணதிபதியின் ஆதிக்கத்தின் கீழ் இது ஒரு இஸ்லாமிய அரசாங்கமாயிற்று. மற்றொரு பக்கத்தில் சீரங்கப்பட்டணத்தில் ஹைதர் அலியும், திப்புசுல்தானும் தோன்றினர்கள். அரசாங்கமும், ஸ்ரீரங்கப் பட்டணத்து (மைசூர்) அரசாங்கமும் ஒன்றுக்கொன்று செய்துகொண்ட யுத்தங்களும், அவைகளின் குறைகளும் உங்கள் முன் இருக்கின்றன. இவைகள் எல்லாம் சில வருஷகாலங்களிற் பூர்த்தியாகி விட்டன. ஆற்காடு அரசாங்கமும் இருக்கவில்லை. ஸ்ரீரங்கப்பட்டணத்து அரசாங்கமும் நிலைநிற்கவில்லை. பிரஞ்சுக்காரர்களின் நண்பரு முயிரோடிருக்கவில்லை. ஆங்கிலேயரின் நன்றிக்காரர் ஆற்காட்டுநவாபும் உயிரோடிருக்கவு மில்லை. இம்மூன்றுவது காலத்தில் இத்தேசத்திற்குள் இஸ்லாம் மதத்தியசரித்திரம் விரோதி, நண்பன் ஆகிய எல்லோருக்கும் முன்னிலையிலிருக்கின்றன. சுல்தான் ஹைதர் அலியும் சுல்தான் ஷஹீது (திப்பு சுல்தான்)ம் இப்பக்கங்களிலுள்ள ஜனங்களைப் பலவந்தமாக இஸ்லாம் மதத்திற்குச் சேர்த்தார்கள், என்று பொதுவாக எங்கும் கூறப்படுகிறது. அவர்கள் அவ்வாறு செய்திருந்தால் இப்பொழுது மைசூர் இலாகாவில் முஸ்லிம்களின் ஜனத்தொகை நூற்றுக்கு இருபது வீதம் இருப்பதற்குப் பதிலாகக் குறைந்த பக்ஷம் நூற்றுக்கு 50 ஆகிலும் இருந்திருக்கும். டாக்டர் ஆர்னல்டு என்பவர் ''பம்பாய் கெஜட்' 22-வது பிரதியில் 222-ம் பக்கத்தையும், 23-ம் பிரதியையும் 282-ம் பக்கத்தை குறிப்பிட்டு இஸ்லாம் மதப்பிரசாரத்தைப் பற்றிப் பின்வருமாறு எழுதி இருக்கிறர்.

''சமீப காலத்திற் பிரபல அரசர்களாக இருந்த இதே ஹைதர் அலியும், டிப்புசுல்தானும் அநேகம் ஹிந்துக்குடும்பங்களையும், சில பாகத்திலுள்ள ஹிந்துப் பிரஜைகளையுங் கட்டாயப்படுத்தி இஸ்லா

ம்மதத்திற் சேர்த்தார்களென்று பெயர் பெற்றிருக்கிறார்கள். வாஸ்தவத்தில் அவர்கள் இவ்விரு அரசர்களுடைய காலத்திற்கு வெகு காலத்திற்கு முன்பே இஸ்லாம் மதத்தைத் தழுவி இருக்கிறார்கள். அவர்கள் எப்பொழுது இஸ்லாம் மதத்தைத் தழுவினார்கள் என்பதைப் பற்றிய சரித்திர விபரம் நமக்குக் கிடைக்கவில்லை.''

இவ்விரு அரசர்களின் காலமானது கி. பி. 1767 முதல் 1799க்கு மேல் இல்லை. அதாவது நாற்பத்திரண்டு வருஷங்களுக்கு அதிகமாக இல்லை. இக்கால முழுவதும் யுத்தத்திலும் கலகத்திலுமே கழிந்தது. இவ்வித நிலைமையில் அவர்களுக்கு இஸ்லாம் மதப்பிரசாரஞ் செய்யவேண்டுமென்ற எண்ணம் உண்டாவதற்குக்கூட சாவகாசம் இருக்கவில்லை.

---

## மகாநாட்டில் நிறைவேறிய தீர்மானங்கள்.

திரிச்சிராப்பள்ளி, செப்டம்பர் 18—

இன்று மகாநாட்டில் நிறைவேறிய தீர்மானங்கள் பின் வருமாறு:—

**1.** மார்க்கக் கல்வியையும் உலகக் கல்வியையும் தனித்தனியே பிரிப்பதானது இயற்கைக்கு மாற்றமானதாகவும் இஸ்லாத்தின் போதனைகளுக்கு பொருத்தமற்றதாயும் இருப்பதனாலும் அப்படிப் பிரித்ததன் காரணமாக சமூகத்திற்கு நஷ்டம் ஏற்பட்டிருப்பதனாலும் உண்மையான இஸ்லாமிய முறையைக் கைக்கொண்டு வைதீக லௌகிகக் கல்விகளை ஒன்றாய்ச் சேர்த்து போதிக்கவேண்டிய தவசியமாகையால்,

(அ) அப்படியே மார்க்கக் கல்வியையும் உலகக் கல்வியையும் ஒன்றாய்ச் சேர்த்து போதிக்கும் வேலையில் முஸ்லிம்கள் உடனே முனைந்து அக்காரியத்தை சித்தியாக்கி வைக்கும்படியாகவும்,

(ஆ) பொதுப் பள்ளிக்கூடங்களில் பள்ளிக்கூட போதனா நேரத்திலேயே மார்க்கப் படிப்பை மாணவர்களுக்குப் போதிப்பதற்காக மார்க்கப்படிப்பையும் போதனா முறைத் திட்டத்தில் சேர்த்து கொள்ளுவதற்கான ஏற்பாடுகளை கவர்ன்மெண்டார் எடுத்துக்கொள்ள வேண்டுமென்றும்,

(இ) அரபி மதரஸாக்களில் உபயோகமாக விருக்கக்கூடிய உலகக் கல்வியையும் சேர்த்து போதித்து மாணவர்களுக்கு உண்மையான இஸ்லாமிய உணர்ச்சியை உண்டாக்கிவைப்பதற்கு மதரஸாக்களின்

தலைவர்களும் நிர்வாக அதிகாரிகளும் முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்றும் இம்மகாநாடு கோரிக்கொள்ளுகிறதென்று தீர்மானிக்கின்றது.

2. தென்னிந்தியாவிலுள்ள அநேக மதரஸாக்களில் தற்கால போதனை முறையும் பாடமுறையும் குறைவுள்ளதாகவும் பூர்த்தியற்றதாகவும் இருப்பதால், இயன்றமட்டிலும் பூர்த்தியானதும் மேலான பலன் தரத்தக்கதுமான பாடமுறையும் போதனை முறையும் நிர்ணயிக்கவேண்டிய விஷயத்தை ஆலோசனை செய்வதற்காக எல்லா மதரஸாக்களின் தலைவர்களும் நிர்வாக அதிகாரிகளும் சேர்ந்து ஒரு கமிட்டியைத் தெரிந்தெடுத்து அக்கமிட்டியாரின் தீர்மானப்படி மதரஸாக்களின் போதனை முறையையும் பாடமுறையையும் அனுஷ்டித்துவரும்படியாக இம்மகாநாடு கேட்டுக்கொள்ளுகின்றது.

3. தென்னிந்திய முஸ்லிம்கள் உர்துபாஷையை தாய்பாஷையாகக் கொள்ளவேண்டுமென்றும், முஸ்லிம்கள் படிக்கும் எல்லா பாடசாலைகளிலும், கல்லூரிகளிலும் உர்துபாஷையை போதிக்கத்தக்க ஏற்பாடுகளை கவர்ன்மெண்டார் செய்யவேண்டுமென்றும் இம்மகாநாடு கேட்டுக் கொள்கின்றது.

4. புதுக்கோட்டை சமஸ்தான முஸ்லிம் நிலசுவான்தார்களிடமிருந்து ஹிந்து கோயில்களின் தேரை இழுப்பதற்காக ஊழியவரி வசூல் செய்யப்படுவது முஸ்லிம் மார்க்கத்திற்கு முற்றிலும் விலக்கான காரியமென்றும் ஊழியவரியை எவ்வித நிபந்தனையுமின்றி எடுத்துவிடும் படியாக புதுக்கோட்டை இராஜாங்க சமஸ்தான அதிகாரிகளை இம்மகாநாடு கேட்டுக்கொள்ளுகிறது.

5. முஸ்லிமல்லாத ஏதோ தனிநபர்கள் சிலர் செய்யும்சில தகாத செயல்களைக் கண்டு முஸ்லிம்கள் ஆத்திரப்படுவது முஸ்லிம்களினுடையவும் இஸ்லாத்தினுடையவும் கண்ணியத்திற்குப் பொருந்திய நல்லவென்றும் இஸ்லாம் மார்கத்தின் மேலான தத்துவங்களையும் இஸ்லாம் மார்க்கம் சர்வ உலகத்திற்கும் பொருத்தமுள்ளதா யிருக்கிறதென்ற மேலான தன்மையையும் எடுத்துக்காட்டும் புராதீனமும் நியாயமுமான வேலைகளை முஸ்லிம்கள் சமாதானமாயும் தக்கபடியும் கைக்கொள்ளவேண்டு மென்றும் இம்மகாநாடு முஸ்லிம்களைக் கேட்டுக் கொள்ளுகின்றது.

6. முஸ்லிம் டிரெயினிங் ஸ்கூல்களிலெல்லாம் மார்க்கக் கல்வி போதிக்கப்படுவதற்கு ஏற்பாடு செய்யும்படியாக இம்மகாநாடு கவர்ன்மெண்டாரைக் கேட்டுக்கொள்ளுகின்றது.

7. மாகாணத்தில் கவர்ன்மெண்டு காஜிகள் நியமன சம்பந்தமாயும், அவர்களுக்குக் கொடுக்கப்படவேண்டிய அதிகாரங்கள் சம்பந்தமாயும் ஒரு சட்டம் தயார் செய்யவேண்டிய விஷயத்தை ஆலோசனை செய்து கூறுவதற்காக உலமாக்கள், முஸ்லிம் சங்கங்களின் பிரதிநிதிகள், முஸ்லிம் சமூகத்தலைவர்கள் கொண்ட ஒரு கமிட்டியை நியமிக்கும்படியாக இம்மகாநாடு கவர்ன்மெண்டாரைக் கேட்டுக்கொள்ளுகின்றது.

8. மாகாண வக்புச் சொத்துக்கள் சரிவர நிர்வகிக்கப்பட்டு பரிபாலனம் செய்யப்பட வேண்டியதை முன்னிட்டு விஷயத்தை ஆலோசனை செய்து கவர்ன்மெண்டாருக்கு அபிப்பிராயம் தெரிவிக்க ஒரு கமிட்டியை நியமிக்கும்படி இம்மகாநாடு கவர்ன்மெண்டாரைக் கேட்டுக் கொள்ளுகின்றது

9. திரிச்சிராப்பள்ளி இஸ்லாமிய பள்ளிக்கூட கட்டடம் கட்டுவதற்கு கவர்ன்மெண்டாருக்கு செய்திருக்கும் தீர்ப்பை உடனே அமுலுக்குக் கொண்டுவந்து கட்டடத்தை சீக்கிரத்தில் கட்டி முடிக்கும்படியாக இம்மகாநாடு கவர்ன்மெண்டாரைக் கேட்டுக்கொள்ளுகின்றது.

10. காலஞ் சென்ற ஜனாப்கள் ஜமால் மொய்தீன் ராவுத்தர் மௌல்வி முஹம்மத் மதார் சாஹிப், சி. கா. காதர் மொகியத்தீன், பொதக்குடி கொ. பக்கீர் முஹம்மத் ராவுத்தர், அதிராம்பட்டணம் அப்துல் காதர், பொதக்குடி அப்துல் கரீம், மௌலானா அப்துல் பாரி முதலானோர்கள் காலஞ்சென்றதைக் குறித்து மகாநாடு தன் அனுதாபத்தைத் தெரிவிப்பதாக ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

11. சென்னை ஹாஜிகள் ஜித்தா செல்ல, பம்பாய் காராச்சி துறைமுகங்கள் சென்று கஷ்டப்படவேண்டியிருப்பதால் ஹஜ்பிரயாணிகளை ஏற்றிச் செல்ல சென்னை துறைமுகத்தையும் திறந்து வைக்கும்படியாக இம்மகாநாடு சென்னைமாகாண கவர்ன்மெண்டாரையும் இந்திய கவர்ன்மெண்டாரையும் கேட்டுக்கொள்ளுகிறது.

12. இஸ்லாம் முறைப்படி மார்க்க கல்வியையும் லௌகீக கல்வியையும் ஒருங்கே சேர்க்க வேண்டுமென்ற மஜ்லிசுல் உலமாவின் முக்கியமான நோக்கத்தை அனுஷ்டானத்திற்குக் கொண்டு வருவதற்காக மேற்சொன்ன இரு அம்சங்களையும் சேர்த்து கற்பிக்கும் ஒரு நமூனா மதரஸாவை ஏற்படுத்தி நடத்தவேண்டுமென்று மஜ்லிசுல் உலமாவுக்கு ஆவலிருப்பதாலும், அம்மாதிரி செய்வதற்கு வேண்டிய இடம் வசதி, கட்டட வசதி முதலியவைகள் ஏற்கனவே நன்கமைந்திருப்பதினாலும் போதுமான மாணவர்கள் சேர்ந்ததும் கீழ் வகுப்பிலிருந்து உயர்தர வகுப்பு வரையில் இருகல்விகளையும் சேர்த்து அவ்

விதமான மதரஸாவை மஜ்லிசுல் உலமா நடத்தவும் இப்பொழுது எற்கனவே ஏற்படுத்தி நடத்திவரும் பிரைமரி ஸ்கூல் உயர்தர மதராஸாவாக செய்ய ஆயத்தமாக இருப்பதினாலும், பல ஊர்களிலிருந்து முஸ்லிம்கள் தங்கள் குழந்தைகளை படிப்புக்காக அனுப்ப வேண்டுமாயும், அவ்வித மதரஸாவை நடத்துவதற்காகவும், அச் செலவிலிருந்து மஜ்லிசுல் உலமா ஒரு மஸ்ஜித் கட்டுவதற்காகவும் மஜ்லீசின் மற்ற நோக்கங்களை அனுஷ்டானத்திற்குச் கொண்டு வருவதற்காகவும் முஸ்லிம்கள் தகுந்தபடி பண உதவி செய்யும்படி கேட்டுக் கொள்ளுகிறது.

(13) அரபி மதரஸாக்களில் வாசிக்கும் மாணவர்கள் தாங்கள் படித்தறிந்த லௌகிக வைதீக விஷயங்களை தமிழ் பொது ஜனங்களுக்கும் போதிக்க உதவியாய் இருப்பதற்கு குர்ஆன் ஷரீப் போன்ற உயர்ந்த கிரந்தங்களை கருத்துப் பிசகாது சரியானபடி தமிழில் மொழி பெயர்ப்பதற்கு தமிழில் தேர்ச்சி இருக்கவேண்டிய அவசியத்தை முன்னிட்டும் அரபிபடிக்கும் மாணவர்களுக்கு மதரஸா நேரத்தில் ஓரளவில் தமிழ் போதிக்கப் பட வேண்டியது அவசியமென்று இந்த மகாநாடு தீர்மானிக்கிறது.

(14) முஸ்லிம் பெண்கள் கோஷா முறைப்படி பள்ளிக்கூடத்திற்குச் செல்லுவதற்கு வண்டிகளுக்கு ஏற்பாடு எல்லா இடங்களுக்கும் செய்து கொடுக்கும் படியாக கவர்ன்மெண்டாரையும் தாலூக்கா, ஜில்லா போர்டு, முனிசிபல் சபை முதலிய ஸ்தல ஸ்தாபனங்களையும் இம் மாகநாடு கேட்டுக் கொள்ளுகின்றது.

(15) ரங்கேலா ரசூல் போன்ற நிந்தனை நிறைந்ததும் அற்பத்தனமும் கேவலமுமான நூற்களனைத்தையும் இம் மகாநாடு பலமாகக் கண்டிப்பதுடன், அவ்வித நூல்கள் வழிகெட்ட சில தனி நபர்களின் சுபாவத்தைக் காட்டுகிறதென்றும் அவ்விதக் கேவல செய்கைகள் நாட்டிற்குக் கெடுதி செய்வதன்றி எவ்வித நன்மையையும் உண்டாக்கக் கூடியதல்லவென்றும் அத்தகைய கேவலப் பிரசுரங்களுக்கு நாட்டிலுள்ள எவ்வகுப்பினரும் ஆதரவளிக்கக் கூடாதென்றும் இம் மகாநாடு கேட்டுக் கொள்கின்றது.

சமூகத் தலைவர்களை அவதூறுசெய்வதை சட்ட விரோதமாக்குவதற்காக கவர்ன்மெண்டார் செய்யும் ஏற்பாட்டை இந்த மகாநாடு நன்கு மதிக்கிறது என்றும் இவ்விஷயத்தில் கவர்ன்மெண்டாருக்கு பொது ஜனங்கள் மனப்பூர்வமான ஆதரவளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறதாகவும் இம்மகாநாடு தீர்மானிக்கிறது.

அக்கிராசனர் முடிவுரைக்குப் பின் வந்தனோபசாரங்கள் கூறப்பட்டு மகாநாடு கலைந்தது.

# இஸ்லாமிய நாடுகளின் நிகழ்ச்சிகள்

## துருக்கி

### அன்னிய நாட்டினர் குடியேறுதல்

எகிப்தில் பிரசுரமாகும் "அல் முகத்தம்" பத்திரிகை பின் வருமாறு எழுதுகின்றது:—

இவ்வருஷக் கடைசிக்குள் ஸிரியாவிலிருந்து 15,000 பேர்கள் துருக்கியில் வந்து குடியேறுவார்கள். இந்த ஸிரியர்கள் துருக்கியில் கைஸா, நைகதா முதலிய விடங்களில் வந்து தங்குவார்கள். இந்த ஸிரியர்கள் தவிர ஸைபிரஸிலிருந்து 20,000 பேர்களும், காக்கேஷியா பாகத்திலிருந்து 50,000 பேர்களும் சமீபத்தில் வந்து துருக்கியில் குடியேறுவார்கள். இவர்கள் கிழக்கு அனதோலியாவில் குடியேறு வார்கள். இதேவிதமாக பால்கன் நாடுகளில் வாசஞ்செய்வோர் பலர் தங்கள் நாட்டை விட்டுவிட்டு துருக்கிவந்து குடியேறுவார்க ளெனச் சொல்லிக் கொள்ளப்படுகின்றது.

### துருக்கியின் கல்வி நிலைமை

துருக்கியின் கல்வி நிலைமையைப்பற்றி கெய்ரோவில் பிரசுரமா கும் "கௌகாவெஷர்க்" என்னும் பத்திரிகை பின் வருமாறு எழுது கின்றது:—

துருக்கியின் ஆரம்ப (பிரைமெரி) பள்ளிக்கூடங்களில் 2,83,000 மாணவர்களும், ஸெகெண்டரி பள்ளிக்கூடங்களில் 12,751 மாணவர்க ளும் உயர்தரக்கல்வி பயிலுவதில் 2,837 மாணவர்களும் இருக்கிறார் கள். துருக்கியிலுள்ள எல்லா பள்ளிக்கூடங்களிலும் 11,766 உபாத் தியாயர்கள் இருக்கிறார்கள்.

துருக்கியில் தற்காலம் இருக்கும் கவிகளில் மிகவும் பெயர் பெற்ற வரும் கியாதிவாய்ந்தவருமான கவி அப்துல்ஹக் ஹமீத்பேக் என்பவர்.

துருக்கியிலிருக்கும் கல்வி ஸ்தாபனங்களுக்கெல்லாம் தற்காலம் கொடுக்கப்பட்டிருக்கும் பெயர்களை மாற்றி தற்கால துருக்கியில் இருக்கும் கல்விமான்களுடைய பெயர்களை வைக்கும்படியான உத்த ரவை துருக்கி கல்வியிலாக்கா மந்திரிச்சபையார் பிறப்பித்திருக் கிறார்கள்.

## துருக்கி துருக்கியர்களுக்கே

துருக்கியில் காஜி முஸ்தபா கமால் பாஷாவின் கட்டளையின் மேல் செய்யப்படுகிற எக்காரியமும் இன்றைக்கு நியாயமாகத் தோன்றுவிட்டாலும் நாளடைவில் துருக்கிக்கும் துருக்கிக் குடிகளுக்கும் பொதுவாக உலகத்திற்கும் நன்மை பயக்கக்கூடியதாகவே இருக்கின்றது. துருக்கியில் குடியிருந்துவந்த ஜர்மனியர்கள் துருக்கி குடிகள் என்பதை ஏற்றுகொள்வதும் அல்லது ஜர்மனி திரும்பிச் சென்றுவிடுவதும் நிர்ணயித்துக் கொள்ளுவதற்கென்று துருக்கியில் வாசஞ் செய்யுஞ் ஜர்மனியர்களுக்கு ஒருகாலம் தவணை குறிப்பிட்டுக் கூறப்பட்டிருந்தது. அத்தவணைக்காலம் இப்பொழுது முடிந்துவிட்டபடியால் துருக்கியில் வசித்து வந்த ஜர்மனியர்களில் பெரும்பான்மையோர் துருக்கியிலேயே வசிக்க நிச்சயஞ் செய்துவிட்டனர். இவர்களில் பெரும்பான்மையோர் கிறிஸ்தவர்கள். ஜர்மனிக்குத் திரும்பிச்செல்ல விரும்புகிறவர்களுக்கு ஜர்மனிக்கே செல்ல துருக்கி கவர்மெண்டார் அனுமதிகொடுத்துவிட்டனர். துருக்கியின் சட்டத்தை ஏற்றுக்கொண்டு துருக்கிக் குடிகளாக இருந்துவிட இணங்கிய ஜர்மனியர்களின் தொகை சுமார் 30,000- க்கு அதிகமாக இருக்கும்.

## மாதர்கள் இயக்கம்.

துருக்கியில் மாதர்கள் இயக்கம் தற்சமயம் மிகவும் பலமடைந்து வருகின்றது. துருக்கி ஸ்திரீகளின் முன்னேற்றத்தில் எல்லோரும் அதிக சிரத்தையும் ஊக்கமும் காட்டி வருகின்றனர். நாடெங்கும் ஸ்திரீகள் சங்கங்கள் ஸ்தாபிக்கப்பட்டு வருகின்றன. ஸ்திரீகளுடைய முன்னேற்றத்திற்காக வென்றே பிரத்தியேகமான பத்திரிகைகளும் சஞ்சிகைகளும் பிரசுரிக்கப்பட்டு வருகின்றன. துருக்கி ஸ்திரீகளின் தற்கால நிலைமையைக் கவனித்து எதிர்காலத்தில் ஸ்திரீகள் முன்னேற்றத்திற்கான வேலைகளைச் செய்வதற்காக மகாநாடுகள் பல நடைபெற்று வருகின்றன. ஸ்திரீகளின் முன்னேற்றத்திற்கான ஆலோசனைகள் பல கவனிக்கப்பட்டு தீர்மானங்கள் செய்யப்படுகின்றன. முக்கியமாக ஸ்திரீகளுக்கும் பொது ஸ்தாபனங்களில் பிரதிநிதித்துவம் வேண்டுமென்றும் ராஜீய விஷயங்களில் ஸ்திரீகளுக்குச் சமத்துவமான சமஉரிமை கொடுக்கப்பட வேண்டுமென்றும் மகாநாடுகளில் தீர்மானங்கள் செய்யப்படுகின்றன.

---

## ஹிஜாஸ்

### மக்கா ஷரீபில் புதிய கட்டடங்கள்

சுல்தான் இப்னுசுஊதுடைய அரசாங்க சார்பாக வெளிவரும் "உம்முல்குரா" பத்திரிகையில் கீழ்க்காணும் விஷயங்கள் வரையப் பட்டிருக்கின்றன.

தற்போது மக்கா ஷரீப் பள்ளியின் சில பாகத்தில் புதிதாக கொஞ்சம் சேர்த்து கட்டப்பட்டிருப்பதுடன் மராமத்தும் செய்யப்பட் டிருக்கிறது. ஜம்ஜம் கிணற்றுக்கு குழாயும் வைக்கப்பட்டிருக்கிறது. கஃபதுல்லாவின் நாலுபாகங்களிலும் பலமானதும் விஸ்தீரணமானது மான சோபா ஹாலும்கட்டப்பட்டிருக்கிறது. ஹஜ்ஜுடைய காலத்தில் உபயோகிக்கப்படும் சகல வழிகளையும் மோட்டார் முதலிய சகல ஏறு வாகனங்களும் சிரமமின்றி செல்வதற்காக சுல்தான் இப்னுசுஊது மராமத்து செய்திருக்கின்றார்.

### அன்னிய நாட்டு ஸ்தானிகர்கள்

ஸ்ரீநகர் (காஷ்மீர்) செப்டம்பர் 1.

ஜனாப் இஸ்மாயில் கஸ்னுவி சாஹிப் பத்திரிகைகளுக்கு தந்தி மூலம் பின்வருமாறு தெரிவிக்கிறார் :—

பம்பாய் கிலாபத் பத்திரிகை தன்னுடைய ஆகஸ்டு 24-ந் தேதி பிரதியில் பிரிட்டிஷ், பிரஞ்சு, இதாலி ஸ்தானீகர்கள் மக்கமா நகரில் விஜயம் செய்ய ஹிஜாஸ் அரசாங்கத்தாரால் அனுமதிக்கப்பட்டிருப் பதாகவும் அந்த ஸ்தானீகர்கள் (கான்ஸல்கள்) சிலுவை கொண்ட தங்கள் கொடிகளை தங்கள் காரியாலயங்களில் பறக்கவிட்டிருக்கிறார்க ளென்றும் ஒரு செய்தியைப் பிரசுரித்திருந்தது.

இச் செய்தியைப் படித்தவுடன் உண்மையை அறிவதற்காக ஹிஜாஸ் அரசர் அவர்கட்கு ஒரு தந்தியனுப்பி உண்மையை அனுப் பும்படியாகக் கேட்டுக் கொண்டேன். ஹிஜாஸ் அரசர் எனக்குப் பின் வரும் பதில் தந்தியை அனுப்பியிருக்கிறார்.

"செய்தியில் சிறிதளவும் உண்மை கிடையாது. செய்தி சிறி தும் சாத்திய மில்லாத விஷயமாகும். புத்திக்கு ஒப்புக்கொள்ள முடியாததும், அநீதியாகவுமான செய்திகளை விஷமிகள் இவ்வாறு பிர சுரஞ் செய்வது எனக்கு அதிக ஆச்சரியத்தைக் கொடுக்கின்றது. புத்தியுள்ள முஸ்லிம்கள் எவரும் இத்தகைய பொய்ச் செய்திகளை நம்பமாட்டார்களென்று நினைக்கிறேன். பொய்ச்செய்தியை பல மாக மறுத்துவிடுவார்கள்.

(ஒப்பம்) அப்துல் அஜீஸ். ஹிஜாஸ் நஜத் அரசர்.

## எகிப்து

### ஆங்கிலோ-எகிப்து தகராறு

கெய்ரோ நகரில் பிரசுரமாகும் "அல்இஹ்ராம்" பத்திரிகை ஆங்கிலோ-எகிப்து தகராறு சம்பந்தமாக பின்வருமாறு எழுதுகின்றது :—

லண்டனில் இங்கிலாந்து பிரதான மந்திரிக்கும், எகிப்து பிரதான மந்திரிக்கும் நடந்த சம்பாஷணைகளிலிருந்து இரு நாடுகளுக்குள்ளும் நட்பும், அன்பும் ஏற்படக்கூடியதாக இருப்பதாகத் தெரிகிறது. ஆயினும் இங்கிலாந்துக்கும் எகிப்துக்கு மிடையே தீராமல் இருக்கும் சிக்கலான இராஜீப பிரசினை தீரக்கூடிபதற்கான சின்னங்கள் இன்னும் காணோம்.

## ஈரான்.

### இராக் கஷ்டநிவாரண நிதிக்கு நன்கொடை.

இராக்கில் கஷ்டப்பட்டுகொண்டிருக்கும் பாரசீகர்களுக்கு 10,0,000 கான் (பாரசீக நாணயம்) கொடுத்தனுப்புவதென, ஈரான் மஜ்லிஸ் சபையார் தீர்மானம் செய்திருக்கின்றார்கள்.

---

# ஆகாயவிமானத்திலிருந்து.

## ஹைதராபாத்தில் முத்து மழை

ஹைதராபாத் (டெக்கான்) செப்டம்பர் 5-ந் தேதி. கட்டேஷ்வாரில் ஒரு கொல்லையில் முத்துமழை பெய்ததாக ருசிகரமான செய்தியொன்று ஹைதராபாத்திற்கு வந்துள்ளது.

ஒரு விவசாயி ஒரு நாள் மாலையில் தன் கொல்லையில் சோளம் விதைத்து விட்டு வீட்டிற்குப் போய்விட்டான். அன்று இரவு மழை பெய்தது. விடியற்காலையில் விவசாயி கொல்லைக்குச்சென்று பார்த்த போது நிலம் முழுவதும் முத்துகளால் நிரம்பிக்கிடந்தது. விவசாயி இக்காட்சியைக்கண்டு மிகவும் பிரமித்துப் போனன். முத்துக்கள் நல்ல அசல் முத்துக்கள் மாதிரியே காணப்படுகின்றன. ஆனல், உருவத்தில் மட்டும் நல்லமுத்துக்கள்போல் காணப்பட்டாலும் அவ்வளவு சுத்தமாக இல்லாமல் சற்று மேடுபள்ளமாகக் காணப்படுகின்றன.

## ஏழு வருஷங்களில் உலக முடிவாம்

ஹேர் போர்டு லேடன் கிறிஸ்துவ தலைமைப்பாதிரியாகிய ரெவ ரெண்ட் ராபர்ட்யீ வேன்ஸ் பரோஸ், அவர்கள் இவ்வுலகத்தின் நாச காலம் ஒன்று இருப்பதாக நம்புகிறார். அவருக்கு அந்த நம்பிக்கை பல மாக இருப்பதால் அவ்விஷயத்தை பஹிரங்கமாக ஜனங்களுக்கு எடுத்துச் சொல்லுகிறார். அவர் ஒரு சந்தர்ப்பத்தில் பிரசங்கமேடை யின்மீது நின்று கீழ்காணுமாறு கூறியிருக்கிறார்.

நாம் அனைவர்களும் ஒரு காலத்தில் நமது சகல சொத்துக்களையும் இல்லிடங்களையும் விட்டுவிட்டு ஆகாய மண்டலத்தில் காற்றில் 7 வருஷம் தொங்கிகொண்டிருந்து பின்பு நாம் ஒரு மணல் மேடையின்மீது இறங்குவோம். பைத்துல் முகத்தசில் குடியிருக்க விரும்புவோம். ஆனால்அப்போதுஉலகம்அழிந்துபோய் இருக்கக் காணுவோம். அந்நாள் எப்போதிருக்கிறதென்பதை நாம் அறிய முடியவில்லை என்றாலும் அன்னாள் 1934-ம் வருஷத்திலேற்படும் என்பதற்கு பல ஆதாரங்கள் இருக்கின்றன.

பாதிரியார் கியாமத் (உலகமுடிவு) நாளையே மேற்கண்டவாறு குறிப்பிடுகிறார். இன்னும் 7-வருஷங்களில் கியாமத் ஆகிவிடுமென்று அவர் நம்புகிறார் என்று தெரிகிறது.

---

# விவசாயப் பகுதி

## கரும்பு சாகுபடியை அபிவிருத்தி செய்வதெப்படி?

மிஸ்டர். ஏ. பி. ஸி.

கரும்பு சாகுபடி செய்வதற்கு நம் நாடு மிகவும் ஏற்ற நாடாக இருக்கின்றது. உலகில் கரும்பு சாகுபடியாகும் விஸ்தீரணத்தில் பாதி அளவுக்கு நம் நாட்டில் கரும்பு சாகுபடியாகின்றது. இவ்வளவு அதிகமாக சாகுபடி செய்யப்பட்டும் சரியான முறைகளைக் கைக் கொள்ளாததால் அதிக பலனை நாம் அடையமுடியவில்லை. கரும்பு சாகுபடி செய்வதற்கு நம் நாட்டின் சீதோஷ்ணஸ்திதி தகுந்ததாக இருக்கின்றது. நிலத்தின் செழுமையும் இதர நாடுகளின் செழுமையைவிடக் குறைந்ததாக இல்லை. சாகுபடி செய்வதற்குச் சாதகங்களும்

சௌகர்யமானவைகளாக இருக்கின்றன. பயிரிடுவதற்கும், கரும்பி விருந்து சார் எடுப்பதற்கும், சாற்றிலிருந்து சர்க்கரை,வெல்லம் முதலி யவை தயார் செய்வதற்கும் கூலிகளும், தொழிலாளர்களும் நம் நாட் டில் இதர நாடுகளில் கிடைப்பதைவிட மலிவாகக் கிடைக்கிறார்கள். இவ்வளவெல்லாம் இருந்தும் இதர நாடுகளில் ஒரு ஏகர் ஒன்றுக்கு 30 டன்கள் கரும்பு சாகுபடியானல் நம் நாட்டில் ஏக்கர் ஒன்றுக்கு 10 அல்லது 12 டன்கள் கரும்புதான் கிடைக்கின்றது. நம் நாட்டு கரும் புகளிலிருந்து எடுக்கப்படும் சாரோ இதர நாடுகளிலிருந்து எடுக்கப் படும் அளவைவிட பாதிக்கும் குறைந்திருக்கிறது. நம் நாட்டில் சாரு எடுப்பதற்கு சரியான முறைகளைக் கைக்கொள்ளாததால் பாதியள வுக் கதிகமான சாறுசக்கையுடனே நின்று விடுகின்றது. நம்நாட்டில் கரும்பு சாகு படியிலும் சர்க்கரை, வெல்லம் உற்பத்தியிலும் இருக் கும் குறைகளை நான்கு வகைகளாகப் பிரிக்கலாம். அவையாவன:—(1) சாகுபடியில் சரியான முறைகளைக் கைக்கொள்ளாமை; (2) சாறு எடுப் பதில் போதுமான கவனம் செலுத்தாமை, (3) சாறு காய்ச்சுவதில் சரியான முறைகளைக் கைக்கொள்ளாமை; (4) வெல்லம்; சர்க்கரை தாயார் செய்வதில் புது முறைகளைக் கைக்கொள்ளாமை.

(1) சாகுபடி: — கரும்பு சாகுபடியை அபிவிருத்தி செய்வதில் முதலாவதும், முக்கியமுமான விஷயம் நிலவளப்பத்திற்குத் தக்க கரும்பை சாகுபடி செய்தல். நம் நாட்டில் தற்சமயம் 300 விதமான கரும்புகள் காணப்படுகின்றன. இத்தினுசுகளில் எந்த தினுசு சாகு படி செய்தால் சாகுபடிசெய்யப்படும் நிலத்திற்கு ஏற்றதாகுமென் பதை முதலில் கண்டறிய வேண்டும். எந்த தினுசை போட்டால் தான் என்ன? அவனவன் அதிர்ஷ்டம் அவனுடன் என்று சொல் லுவது அறியாமையே யொழிய வேறல்ல. (தொடரும்).

---

சைபேரியாவில் சில சமயங்களில் வானவில் மேகமில்லாத ஆகா யத்தில் மறையாமல் ஒருநாள் முழுதும் காணப்படுமாம். அதற்குக் காரணம் காற்றிலுள்ள நுண்ணிய பனித்துளிகளில் சூரியனொளி பிர. திபிம்பமாவதனுல் தானும்.

* * *

பஸிபிக் சமுத்திரத்திலுள்ள சண்டே தீவிலுள்ள மலைகள்தான் உலகத்திலேயே மிகஉயர்ந்தவைகளாம். அவை தண்ணீருக்குள் ஐந்து மைலிலிருந்து 2000 அடி உயரமிருக்கின்றதனுல் மொத்தத்தில் அதன் உயரம் 30,000 அடி இருக்கின்றதாம்.

# கைத்தொழிற் பகுதி

## முஸ்லிம்களும் நெசவுத்தொழிலும்

மிஸ்டர் ஏ. பி. ஸி.

காலை முதல் மாலைவரை நெற்றிவியர்வை நிலத்தில் விழ கஷ்டப்பட்டு உழைத்து கைலி, வேஷ்டி, முதலியவைகள் நெய்பவர்கள் பெரிய வியாபாரிகளுக்கும், ஏஜெண்டுகளுக்கும், கமிஷன் வியாபாரிகளுக்கும் இலாபத்தைச் சம்பாதித்து கொடுத்துவிட்டு தாங்கள் முன்னிருந்த பழைய வறுமை நிலைமையிலேயே இருப்பதற்குக் காரணமென்ன? ஏழை தொழிலாளர்களிடமில்லாதது எது பெரியவியாபாரிகளிடமும் கமிஷன் ஏஜெண்டுகளிடமும் இருக்கின்றது? அவர்களிடம் இருக்கும் அந்தஅபூர்வ வஸ்துவை ஏழைகள் அடையமுடியுமா? அந்த அபூர்வ வஸ்து இவர்களுக்கும் அமைந்துவிட்டால் வியாபாரிகளைப்போலவே தொழிலாளர்களும் பீடன், கோச்சுவண்டிகளையும், மோட்டார்வண்டிகளையும் மின்சார விளக்கு விசிறிகளையும்உபயோகிக்கக்கூடுமே? ஏழைத் தொழிலாளர்களிடம் இல்லாது பெரிய வியாபாரிகள் இடம் இருக்கும் அந்த அபூர்வ வஸ்து பணம் ஒன்றுதான். அந்த பணம் ஒன்று இல்லாமையால் தான் ஏழைத் தொழிலாளர்கள் தங்கள் உழைப்பின் பயனை இதரர்கள் அனுபவிக்க விட்டுவிட்டு தாங்கள் என்றைக்கும் ஒரே நிலைமையில்இருந்து கஷ்டப்பட வேண்டியிருக்கின்றது. முதலாளிகள் அடைந்திருக்கும் பணத்தை ஏழைகளும் அடைந்துவிட்டால் நூல் சாயம் முதலியவை வாங்கும்போதும் தயாரான சரக்குகளை விற்கும் போதும் முதலாளிகளின் கைமேலாகவும் தொழிலாளிகளின் கைகீழாகவும் இருக்க வியாபாரஞ்செய்து தொழிலாளர்கள் கஷ்டமும் நஷ்டமும்அடையவேண்டியிராது. பணத்தை அடைவதெப்படி? பணத்தை அடைவது சாத்தியமான விஷயமா?

தொழிலாளர்கள் ஒற்றுமையாக இருந்து முயற்சிசெய்து கூட்டுறவுபண்டக சாலைகளை ஸ்தாபித்துக்கொண்டால் சகல கஷ்டமும் நீங்கி வறுமையென்னும் பிணியும் சூரியனைக்கண்ட பனியைப்போல் பறந்துபோகும். கூட்டுறவுபண்டகசாலைகள் என்பது என்ன? எப்படி ஸ்தாபிப்பது? எப்படி நடத்துவது? விவரங்களுக்கு அடுத்த சஞ்சிகையைப் பார்க்க.

# பொழுது போக்கு.

தண்ணீர் மிகக்குளிர்ந்ததா யில்லாமற் போனல் முத்துச்சிப்பி நத்தை தினந்தோறும் எண்பது படி தண்ணீர் குடிக்குமாம். தண்ணீர் மிகக் குளிர்ச்சியாயிருந்தால் துளிகூட குடிக்காதிருந்துவிடுமாம்.

* * * *

லண்டன் தலைமைத் தபாலாபீஸ்மூலமாக மட்டும் ஒவ்வொரு வருடமும் 20,000,000 ரெஜிஸ்டர் செய்த பார்சல்கள் போகின்றனவாம்.

* * * * *

ஒரு நல்ல கடிகாரத்தின் வயது ஐம்பது வருடங்கள். அதிலுள்ள பாலன்சும், ஹேர்ஸ்பிரிங்கும் தினந்தோறும் ஒரு மணிக்கு 18000 தடவை அல்லது வருடத்திற்கு 157,000,000 தடவை சுழல்கின்றனவாம். இதனல் இவ்வளவு தடவை அக்கடிகாரம் 'டிக்டிக்' என்று சத்தமிட்டிருக்கவேண்டுமாம்.

* * * *

ஒரு வகை எறும்புகள் இலைகளில் பெருந்துண்டுகளைக் கத்தரித்துத் தமது கூட்டுக்குப் போகின்றனவாம். இவ்வெறும்புகள் வெளி சென்றால் சாரைசாரையாக இலைத்துண்டுகளைத் தலைக்குமேல் குடைபோலப் பிடித்துக்கொண்டு தான் போகுமாம்.

* * *

நமது இருதயத்தில் இரத்தம் மணிக்கு ஏழுமைல் வேகத்தில் ஓடுகின்றதாம்.

* * * * *

டண்காஸ்டர் நகரத்திலுள்ள ரோஸ்ங்டன் கிராம ஆலயத்தில் ஒரு தேன்கூட்டில் 5-லட்சம் தேனீக்கள் இருந்தனவாம். தேனீக்களின் இரைச்சலால் ஆலயத்தில் ஜெபம் நடத்தக் கஷ்டமுண்டான போது அந்தத் தேன்கூட்டை மாற்ற அதிகாரிகள் ஏற்பாடு செய்தார்களாம். தேனீ நிபுணரொருவர் ஆலயக்கூரையில் பாதியை இடித்து தேன்கூட்டை அப்புறப்படுத்தினராம். கூடு 6 அடி உயரமும் 4 அடி அகலமும் இருந்ததாம்.

# "இஸ்லாம்"

## வருஷ சந்தா விவரம்

**இந்தியா, பர்மா, இலங்கை முதலிய உள்நாடுகளுக்கு**

| | |
|---|---|
| முஸ்லிம்களுக்கும் முஸ்லிம் சங்கங்களுக்கும் | ரூ. 5—0—0 |
| முஸ்லிம்களல்லாத நண்பர்களுக்கும் முஸ்லிம்களல்லாதார் சங்கங்களுக்கும் .... .... | 4—0—0 |
| மாணவர்களுக்கு (முஸ்லிம்களானுலுஞ் சரி, முஸ்லிம்களல்லாதாரானுலுஞ் சரி) .... | 3—8—0 |

**பினங்கு, சிங்கப்பூர், மலாய் முதலிய வெளிநாடுகளுக்கு**

| | |
|---|---|
| முஸ்லிம்களுக்கும் முஸ்லிம்கள் சங்கங்களுக்கும் | 6—0—0 |
| முஸ்லிம்களல்லாத நண்பர்களுக்கும் ,, | 5—0—0 |
| மாணவர்களுக்கு (முஸ்லிம்களானுலுஞ் சரி, முஸ்லிம்களல்லாதா ரானுலுஞ் சரி) ... | 4—8—0 |

குறிப்பு—ஒரு வருடத்திற்குக் குறைந்து சந்தா பதிவுசெய்து கொள்ளப்படமாட்டாது. மாணவர்கள் தங்கள் தங்கள் உபாத்தியாயர்களிடமிருந்து அத்தாட்சிப் பத்திரம் வாங்கி யனுப்பவேண்டும். தனிப்பிரதி ஒன்றுக்கு தபால் சார்ஜ் உள்பட விலை ரூ. 0—9—0.

### நிருப நேயர்களுக்கு ஒரு வேண்டுகோள்

விஷயதானம் செய்ய விரும்பும் சகோதரர்கள் காகிதத்தின் ஒரு பக்கத்தில் மையால் எழுதியனுப்பவேண்டும். எந்த மாதத்தில் பிரசுரிக்கப் படவேண்டுமோ அதற்கு முந்தின மாதம் 25-ந் தேதிக்குள் வியாசங்கள் கிடைக்கும்படியாக அனுப்பவேண்டும்.

### விளம்பர விகிதம்

| | | |
|---|---|---|
| ஒரு பக்கத்திற்கு ஒரு மாதத்திற்கு | | ரூ. 12—0—0 |
| அரை பக்கத்திற்கு | ,, | ,, 7—0—0 |
| கால் பக்கத்திற்கு | ,, | ,, 4—0—0 |

நீண்டகாலம் விளம்பரம் செய்ய விரும்புவோர்களுக்கு கட்டணத்தில் சகாயஞ்செய்து கொடுக்கப்படும். அவர்கள் தயவு செய்து மானேஜருக்கு எழுதி விவரங்கள் அறியலாம்.

மானேஜர் "இஸ்லாம்" ஆபீஸ்,
225, அங்கப்ப நாய்க்கன் தெரு,
ஜார்ஜ் டவுன், சென்னை.

நாட்டின் முன்னேற்றத்திற்காகவும் தேச விடு
தலைக்காகவும் உழைக்கும்

# "தமிழ் நாடு"

பத்திரிகையை ஒவ்வொரு தமிழரும் ஆதரித்தல் கடமையாகும்.

மானேஜிங் டைரக்டர் : டாக்டர் பி. வரதராஜுலு.

## தினப்பதிப்பு சந்தா.

உள்நாடு.

| | ரூ. | அ. |
|---|---|---|
| 1 வருஷம் | 20 | 0 |
| 6 மாதம் | 10 | 0 |
| 3 மாதம் | 5 | 0 |
| 1 மாதம் | 1 | 12 |
| சென்னைக்கு 1-மாதம் | 1 | 8 |

தனிப்பிரதி 1 அணா.

வெளிநாடு.

| | ரூ. | அ. |
|---|---|---|
| 1 வருஷம் | 28 | 0 |
| 6 மாதம் | 14 | 0 |
| 3 மாதம் | 7 | 0 |
| 1 மாதம் | 2 | 8 |

தனிப்பிரதி $1\frac{1}{2}$ அணா.

## வாரப்பதிப்பு சந்தா.

உள்நாடு.

| | ரூ. | அ. |
|---|---|---|
| 1 வருஷம் | 5 | 0 |
| 6 மாதம் | 3 | 0 |
| 3 மாதம் | 1 | 10 |

தனிப்பிரதி $1\frac{1}{2}$ அணா.

வெளிநாடு.

| | ரூ. | அ. |
|---|---|---|
| 1 வருஷம் | 6 | 0 |
| 6 மாதம் | 3 | 8 |
| 3 மாதம் | 2 | 0 |

தனிப்பிரதி $2\frac{1}{2}$ அணா.

# தேவை

"தமிழ் நாடு" பத்திரிகை விற்பனை செய்வதற்கு ஏஜெண்டு நியமிக்காத இடங்களுக்கு ஏஜெண்டுகள் தேவை. உடனே முழு விபரங்களுக்கும் எழுதவும்.

மானேஜர் :—

"தமிழ் நாடு" ஆபீஸ்,

31, பிராட்வே, மதராஸ்.

Printed by the Kesari Printing Works, and Published by M. A. Abul-Hudha at
225, Angappa Naick Street, Madras.